Nov. 1954
Vol. 1
No. 12

461

திரட்டு

சிறந்த மாதாந்திர கட்டுரை பொக்கிஷம்

விஜய௵ ஐப்பசி–கார்த்திகை

OFFICE OF ...
11 NOV 1954
MADRA

இந்த இதழில்

★ விநாயகரின் விவாகம்
★ போதும், போதும் பட்டணவாசம்!
(சிறு தொடர்கதை–கடைசி பாகம்)
★ நிஜாமும் காய்தே அஜாமும்
★ பர்மாவின் ஹோலி பண்டிகை
★ கத்திக்கும் கள்ளக்கோலுக்கும் பேனாவின் உதவி
★ முடிசூடிய மன்னரும் முடிசூடாத மன்னரும்

இன்னும் பல அரசியல், சமூக, விஞ்ஞான, சுகாதாரக்கட்டுரைகள், கதைகள், பிரபஞ்ச விநோதங்கள்.

461
4-54

128 பக்கங்கள்

ஜ11, 853 TU
854.1.12
19875 3

8 அணா

SAMSONS DRESSES

ஸாம்ஸன்ஸ்
ரெடிமேட்
ஆடைகள்

★

சிறந்த துணி வகைகளில், நாகரீகமான பாணியில் நீடித்த உழைப்புக்காக தயாரிக்கப்படுகின்றன.

★

ஆடவர், பெண்டிர், சிறுவர் யாவருக்கும் தேவையான ஆடை வகைகள் யாவும் கிடைக்கின்றன.

★

பெங்களூர் டிரஸ்
மானுபாக்சரிங்
கம்பெனி,
12, லால் பாக் ரோட்,
பெங்களூர் - 2.

இப்பொழுது சென்னை கெயிட்டி, கிரௌன், சயானி
மற்றும் தென்னாடெங்கும் நடைபெறுகிறது.
ஜம்பனா நந்தி
குடும்பம்
காதல், கடமை, தியாகம்,
அன்பு, பரிவு, பாசம்
எல்லாம் நிறைந்த ஒரு
உன்னத சமூக சித்திரம்!
டைரக்ஷன்
ஜம்பனா M.A.B.Ed
ஸ்டூடியோ
வாஹினி
Elegant
பூரண உரிமையாளர்கள்: நந்தி பிக்சர்ஸ் சர்க்யூட் பெங்களூர்சிடி

உலகத்திலுள்ள இதர மைகளுக்கு ஓர் அறைகூவல்

சுலேகா

பௌண்டன் பேனா இங்க்
("எஸ்-100" ஸால்வென்ட் கூடியது)

தரத்தில் உயர்ந்தது
உயர் ரக பொருள்களை வாங்கி எமது
சுதேசியை பெரிதும் ஆதரியுங்கள்

SULEKHA WORKS LTD.

SULEKHA PARK :: CALCUTTA - 32
Branches : **Delhi - Bombay - Madras**
மதராஸ் ஆபீஸ்: 5, ஸ்டிரிங்கர் தெரு, சென்னை - 1.

SREE AMBIKA EMPORIUM

DASARPURAM THIRUNINDAYUR P. O.
(TINNANUR R. S.) S. R.

Manufacturers of :—
B & C Ready-made Garments & Fancy Bags

Sole Proprietor :
M. K. RANGANATHAN

திரட்டு

பொருளடக்கம்

நவம்பர் 1954

கலைமகள்	5
திருப்பரங்குன்றம்	7
கண்ணனும் காந்தியடிகளும்	9
இலக்கிய மேதை சந்து மேனன்	10
நொண்டிச் சமாதானம்	15
உங்களுக்குத் தெரியுமா ?	16
பர்மியரின் ஹோலிப் பண்டிகை	17
உழைப்பது பாவம்	18
பட்டப் பெயர்கள்	19
தொட்டி, குட்டிபோட்டால் மந்திரி பிள்ளையைப் பெறலாம்	21
பாடுபட்டுச் சம்பாதிப்பவன் !	23
கத்திக்கும் கன்னக்கோலுக்கும் பேனுவின் உதவி	24
நாம வினேதங்கள்	27
நிஜாமும் காய்தே அஜாமும்	29
நிருபருக்கழகு நிபுணத்துவம்	30
காதை அறுப்பதா, வாலை அறுப்பதா ?	32
இந்திய கடிகாரம் தோன்றியது இந்தூரிலே	33
திருக்குற்றாலம்	34
இரு கடிதங்கள்	40
முடிசூடிய மன்னரும் முடிசூடா மன்னரும்	44
விநோபாஜியின் வேண்டுகோள்	47
'குமணனு'யினும் குடியைக் கெடுக்கக்கூடாது	48
அமுத மொழிகள்	51
ஆண்டவனே பொறுத்தால் அடிமையும் பொறுக்கலாம்	52
புது வாழ்வு	53

சங்கம நகரம்	54
மதியால் தப்பிய பதி	57
குற்றங்களைக் குறைக்கும் ஒலிபெருக்கி	58
விநாயகரின் விவாகம்	59
பயனற்றது	65
மானத்திற்கு ஆதாரம் மண்டை ரோமம்	68
இந்து மதத்திலும் ஆண்டவனைக் கண்ட முஸ்லீம்	70
சீர்திருத்தத்திற்குச் சிறைத் தண்டனை	72
தந்திரம்	76
தீபாவளி மகாத்மியம்	77
கர்சன் பிரபுவின் கனவு	80
மரம் செடி கொடி வளர்ப்போம்	81
அதிருஷ்டமும்—துரதிருஷ்டமும்	82–83
மனிதத் தன்மையைக் கொல்லும் தர்மம்	84
மூட்டைப் பூச்சிக்கும் மந்திரவாதி !	89
அண்டத்தையே அழிக்கும் அணுகுண்டு	91
வேண்டாம், வேண்டாம் பெண் ஜன்மம் !	94
போதும், போதும் பட்டணவாசம் !	97
புட்டியிலடைத்த புஷ்டி	108
தக்க சன்மானம்	109
ஆருயிர் பெருகினால் எதுவும் ஆபத்து	110
ஜனநாயகப் பயிற்சி	112
இன்பம் ஒரு கார "மிக்சர் !"	114
நாடியே உயிர் நாடி	117
இன்றைக்குமட்டும் வாழாமல் என்றைக்கும் வாழ	120
வழுக்கைத் தலைக்கு கோழி முட்டை !	124
புத்தக அபிப்பிராயம்	127

198753

"THIRATTU" Tamil Monthly Digest. Vol. 1. No. 12

திரட்டு

சிறந்த மாதாந்திர கட்டுரை பொக்கிஷம்

நவம்பர் ○ 1954

கலைமகள்

உழவரின் பாட்டினிலே—தாய்
உவகைத் தாலாட்டினிலே
பழந்தமிழ் ஏட்டினிலே—என்
பாரத நாட்டினிலே



பொழிந்திடும் கலைகளிலே—நின்
பொலிவினைக் கண்டேனே..........

ஆழ்கடல் அலைகளிலே—எழும்
அமுதப் பொன் துளிகளிலே
வாழ்ந்திடும் மலைகளிலே—நீ
வழங்கிடும் கொடைகளிலே



ஆண்டவன் சிலைகளிலே—நின்
யாழ் ஒலி கேட்டேனே............

வான் தரும் மழைதனிலே - உயிர்
தான் தரும் பசுமையிலே
தேன் தரும் மலரினிலே - இளஞ்
சேய் தரும் மழலையிலே

சாந்தியின் நிழலினிலே—நின்
தண்மையை உணர்ந்தேனே............

முழுமதி முகமதிலே—புன்
முறுவலின் கருணையிலே
விழிகளின் ஒளியதிலே—அருள்
விளைத்திடும் ஸரஸ்வதியே

செழுமை செய் நவநிதியே—நின்
திருவடி பணிந்தேனே

—பி அநுமந்தராவ்



" பாரகம் போற்றிப் பரவும் பரங்குன்றில்
தாரகமாகவே தங்கும் தயாளன் "



திருப்பரங்குன்றம்

•

ஸ்ரீ முருகனுடைய ஆறுபடைவீடுகளில் முதற்படை வீடாகும். சண்முகனுக்கு முக்கியமான க்ஷேத்திரம். ஆலயமும் கோபுரமும் மிகப் பெரியவை. மலையடிவாரத்தில் பாறைகளைத் துளைத்து நிர்மாணஞ் செய்யப்பட்ட ஆலயம்.

கோயிலுக்கு முன்பாக உள்ள மண்டபக்காட்சியையும் கோபுரக் காட்சியையும் அதற்கு மேல் தெரியும் மலைக்காட்சியையும் ஆலயத்தில் சந்நிதான வீதியில் நின்று பார்த்தால் அக் காட்சி பார்ப்போர்களைப் பரவசப்படுத்தும். வீதியிலிருந்து ஸ்வாமியிருக்கும் மூலஸ்தானத்திற்கு ஏறக்குறைய 20 அடி உயரமிருக்கும். சந்நிதி முகப்பு மண்டபத்திலிருந்து ஸ்வாமி மூலஸ்தானம் வரையில் மாடியில் ஏறிப்போவதுபோல் இருக்கிறது.

இச் சந்நிதானத்தில் தினசரி நடைபெறும் ஆறு கால பூஜைக்கும் சண்முகனுடைய வேலுக்குத்தான் அபிஷேகம் நடைபெறுகிறது. சூரபத்மனின் போர் முடிந்ததும், தேவேந்திரன் தன் மகளாகிய தெய்வயானையை முருகப்பெருமானுக்குத் திருமணம் செய்து கொடுத்தருளிய ஸ்தலம். அக்காரணத்தால் சகல தேவர்களும் சிவபெருமானும் பார்வதி தேவி



அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்
குன்று அமர்ந்து உறைதலும் உரியன்.

யாரும் வந்து கண்டு களித்த ஸ்தலம். நக்கீரர், அருணகிரியார் முதலியோர்களால் பாடப் பெற்றது. இங்கு தைப்பூசத் திருநாள் மிகவும் விசேஷம். பால் அபிஷேகம் பார்ப்பவர் மனத்தைப் பரவசப் படுத்தும். உற்சவ விக்கிரகம் அதிசுந்தரமாய் அமைந்துள்ளது. சரவணப் பொய்கையும் இன்னும் பல பெரிய திருக்குளங்களும் உள்ளன.



மலையின்மேல் ஒரு சுனை இருக்கிறது. அதில் பலவித வர்ணங்கள் கொண்ட அநேக மீன்கள் காணப்படுகின்றன. இங்கு கிரிப் பிரதக்ஷணம் செய்வது மிகவும் விசேஷம். இந்த ஸ்தலத்தில் மச்ச முனி என்னும் சித்தர் சமாதி அடைந்திருக்கிறார். இந்த ஸ்தலம் மதுரையிலிருந்து நான்கு மைல் தொலைவிலுள்ளது.

(காளத்தி - நடேச முதலியார் இயற்றிய
"இறைவனின் உறைவிடங்கள்")



கண்ணனும் காந்தியடிகளும்

●

கிருஷ்ணபரமாத்மாவுக்கு முதுமைப் பிராயம் வந்தது. ஆயுள் முழுவதும் உழைத்துக் களைத்திருந்தார் கிருஷ்ணன். மகாத்மா காந்தியடிகளைப் போலவே அவரும் மக்களுக்கு ஓயாது ஊழியம் புரிந்துகொண்டிருந்தார். ஒரு சமயம் களைப்பால் காட்டிலே ஒரு மரத்தடியில் கண்ணயர்ந்தார். அச்சமயம் காட்டிலே வேட்டையாட வந்திருந்த ஒரு வேடனுக்கு மரத்தடியில் மானொன்று படுத்திருப்பதுபோல் தோன்றியது. குறி பார்த்து அம்பெய்தான் வேடன். அம்பு கண்ணனின் திருவடிகளிலே தைத்து இரத்தம் பெருக்கெடுத்தது.

வேடன் தன் அம்புக்கிரையான மிருகத்தை எடுக்க அணுகினான். அங்கு காயமுற்றிருந்த கிருஷ்ணனைக் கண்டான். அவனுக்குத் துக்கம் மேலிட்டது. வேதனையுற்ற வேடனைப் பார்த்து கிருஷ்ணன் தான் இறக்குமுன் "அஞ்சவேண்டாம் வேடா, மரணத்திற்கு ஏதாவது காரணம் வேண்டுமல்லவா! நீ காரணமானாய்; அவ்வளவே" என்றார்.

இதேபோன்றுதான் காந்தியடிகளும் தம்மை முதலில் குண்டுபோட்டு கொல்ல வந்த அகதி யுவனைப் பற்றிக் குறிப்பிட்டார்; முடிவில் அவரைக் கொன்றவனையும் அவ்வாறே கருதியிருப்பாரன்றோ!

—விநோபாஜி.

[புகழ்பெற்ற மலையாள நவீனமான 'இந்துலேகா'வின் ஆசிரியரைப் பற்றி.]

இலக்கியமேதை சந்துமேனன்

●

மலையாள இலக்கியத்தில் மிக முக்கிய ஸ்தானம் வகிக்கும் நவீனமாகும் 'இந்துலேகா.' வாழ்க்கையைத் தத்ரூபமாகச் சித்தரிப்பது, ஓயாமற் படிக்கவேண்டுமென்று தூண்டும் கதையமைப்பு, நம்பக்கூடியதும் மிகச் சுவை நிரம்பியதுமான முறையில் கற்பிக்கப்பட்டுள்ள கதாபாத்திரங்கள், காதல் ரஸம் இவைபோன்ற பல அம்சங்கள் இந்த நவீனத்தில் அமைந்துள்ளதால் அநேக ஆயிரக்கணக்கான மலையாள வாசகர்கள் மனத்தில் ஒரு நிரந்தர ஸ்தானம் பெற்றுள்ளது 'இந்துலேகா.' இவ்வளவு சிறந்த நவீனத்தின் ஆசிரியர், ஒய்யாரத்து சந்துமேனன் என்பவராகும். இவர் சென்னை மாகாணத்தில் முன்சீப்பாகவும், சப்-ஜட்ஜாகவும் நீதிக்கும் நியாயத்திற்கும் ஒரு தூண்போலவும் விளங்கினவர்.

சந்துமேனனைப் பற்றிய தகவல்களில் அவருடைய ஹாஸ்ய சம்பாஷணைகளும் மரியாதைராமனைப் போன்ற தீர்ப்புகளும் மிகவும் ரஸமானவை. இவரைப் பற்றிய சில கதைகளை இக் கட்டுரையில் காணலாம்.

நவீன குசேலர்!

சந்துமேனன் இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் உத்தியோகத்திலிருந்தார். இந்தக் காலத்தில் ஒரு நீதிபதியைப் பற்றி வக்கீல்களுக்கிருக்கும் பயபக்தியையும் மரியாதையையும்விட அக்காலத்தில் பன்மடங்கு அதிகமிருந்தது.

வக்கீல் ஒருவர் புதிதாக ஒரு ஜதை கால் ஜோடுகள் வாங்கினார். ஒருதினம் சாயந்திரவேளையில் இவர் சந்துமேனன் வீட்டு வாசல் வழியாகப்போக நேர்ந்தது. கோர்ட்டு வேலை முடிந்து வீட்டுக்கு வந்தால் சந்துமேனன் சாதாரணமாகத் தன் வீட்டு வாசலில் உட்கார்ந்துகொண்டு காற்று வாங்குவது

வழக்கம். இதையறிந்துள்ள வக்கீலுக்கு சத்தஞ் செய்யும் புது ஜோடுகளையணிந்துகொண்டு சந்துமேனன் எதிரில் செல்வதற்குப் பயமாயிருந்தது. அதற்காக அவர் சந்துமேனனின் வீட்டினருகில் வந்தவுடன், ஜோடுகளை எடுத்து அக்குளில் வைத்துக்கொண்டு நடந்து வந்தார். தனக்குத் தெரிந்தவர் யார் தன் வீட்டுப் பக்கஞ் சென்றாலும் அவரையழைத்துப் பேசாதிருக்கமாட்டார் சந்து மேனன். அப்படியே வக்கீலையும் அழைத்தார். அக்குளில் வைத்திருந்த ஜோடுகளை நினைத்து மிகவும் வெட்கமடைந்தவாறே வக்கீல், சந்துமேனன் அருகில் சென்றார்.

"என்ன விசேஷம் ?" என்று மேனன் வக்கீலை விசாரித்தார். அவர் பதில் கூறுவதற்கு முன்பே வக்கீல் அக்கிளில் ஏதோ வைத்திருக்கிறாரென்று மேனனுக்கு தெரிந்துவிட்டது. "அக்குளில் என்ன வைத்துக்கொண்டிருக்கிறீர்களென்று உடனே வக்கீலைக் கேட்டார்.

இதுமட்டுமல்ல; தன்னைப் பார்க்க வரும்பொழுது தனக்கு ஏதோ காணிக்கையைக் கொண்டுவந்திருக்கிறாரென்று கற்பனை செய்தவாறு பேசத் தொடங்கினார். கிருஷ்ண பரமாத்மாவைக் காணச்சென்ற குசேலரின் அக்குளில் வைத்திருந்த அவலை பரமாத்மா அன்புடனும் அதிகாரத்துடனும் கேட்கும் கட்டத்தி லுள்ள பாகவத ஸ்லோகத்தையும் கடகடவென்று கூறினார்.

இதைக் கேட்ட வக்கீல் என்ன கூறுவது, என்ன செய்வ தென்று தெரியாமல் தவித்தார். அவருக்கேற்பட்ட குழப்பத்தில் ஒன்றும் புரியாமல் அக்குளிலிருந்து ஜோடுகளை எடுத்துவிட்டார்.

சந்துமேனன் உடனே வக்கீலை கேலி செய்யத் தொடங்கினார். "அடப்பாவமே! காலில் தரித்துக்கொள்ளும் ஜோடுகளை எவரா வது கையில் எடுப்பார்களா ? சரி, போனது போகட்டும், அப்படிச் செய்ததற்குத் தண்டனையாக ஜோடுகளைக் காலில் மாட்டிக் கொண்டு நான்கு தடவைகள் என் முன் அப்படியும் இப்படியுமாக நடவுங்கள்" என்று உத்தரவிட்டார். வக்கீல் அவ்வாறே செய்து விட்டு வீட்டுக்குத் திரும்பிவிட்டார்.

அவரவருக்கிருக்கும் உரிமைகளைப் பூரணமாக உபயோகிக்க வேண்டுமென்ற அக்கறை கொண்டவர் சந்துமேனன் என்பதற்கு இதைவிடத் தக்க உதாரணம் வேறுண்டா ?

வழக்கை விடாக்கண்டன்

சந்துமேனன் இயற்கையாகச் சற்று ஓரக்கண் பார்வையுடையவர். இவர் முன்சீப் பதவி வகித்துவந்ததால் இந்தக் குறையைப் பற்றி எவருக்குமே பேசத் துணிச்சலில்லாதது வியப்பில்லையே! ஆனால் ஜாடையாக இதைப் பற்றிக்கூட, ஒரு கட்சிக்காரன் சந்து மேனனிடம் நேரிடையாக ஒரு சந்தர்ப்பத்தில் கூறிவிட்டான். கட்சிக்காரன் இப்படிக் கூறியதை சந்துமேனன் வேடிக்கையாக எடுத்துக்கொண்டது அவரது பரந்த மனப்பான்மையைக் குறிக்கும்.

இம்மாதிரி சந்துமேனனைக் குறை கூறிய கட்சிக்காரன் எப்போதும் கோர்ட்டு வழக்குகளில் ஈடுபடுவதை தொழிலாகக் கொண்ட இனத்தைச் சேர்ந்தவன்; மிகத் துணிவு கொண்டவன்; சட்ட நுணுக்கங்களை நன்கறிந்தவன். இவன் இவ்வாறு கோர்ட்டில் ஓயாமல் வழக்குத் தொடுப்பதைத் தடுக்க வேண்டுமென்று சந்து மேனனுக்கு முன்பிருந்த ஒரு வெள்ளைக் கார நீதிபதி, அந்தக் கட்சிக்காரன், அந்த ஊர் 'கோர்ட்டு'க் கட்டிடத்திற்குள் கூட காலடி வைக்கக்கூடாதென்றும், அவனிடமிருந்து எந்தவிதமான வழக்கோ, புகாரோ எடுத்துக்கொள்ளக் கூடாதென்றும் உத்தரவிட்டார். விஷத்தில் வளர்ந்த புழுவைப் போல் 'கோர்ட்டில்' வழக்காடுவதையே ஜீவனாகக் கொண்ட இந்த ஆசாமியா இதற்கெல்லாம் அஞ்சுபவர்?

வெள்ளைக்கார நீதிபதி ஒருநாள் 'கோர்ட்டி'ல் ஓய்வெடுத்துக் கொள்ளும் அறையில் தேநீர் அருந்திக்கொண்டிருக்கும் நேரத்தில் அறையின் உயரத்திலிருந்த ஜன்னலுக்குள்ளாக நீண்ட குச்சிக் கட்டிய காகிதமொன்று, காற்றில் பறக்கும் காற்றாடிபோல் தொங்கிக்கொண்டிருப்பதை கவனித்தார். நீதிபதிக்கும் கோர்ட்டுச் சிப்பந்திகளுக்கும் அது ஒரு மனு என்று தெரிந்தது. மனுவைக் குச்சியில் கட்டி இப்படி உள்ளே விடுவது யாரென்று விசாரித்தவுடன், நீதிபதியைக் கூட அசட்டை செய்யும் அந்தக் கட்சிக்காரன்தான் இப்படிச் செய்தான் என்று தெரிந்தது. இந்தக் குற்றத்திற்காக கோர்ட்டார் அவன் மீது வழக்குத் தொடுத்தார்கள். இந்தக் கட்சிக்காரனை விசாரித்ததும் அவன் கூறிய சமாதானம் பின்வருமாறு:—

"என்னைக் கோர்ட்டுக்குள் நுழையக் கூடாதென்றும் என் மனுக்களை அங்கீகாரம் செய்யக்கூடாதென்றும் நீங்கள் உத்தர விட்டீர்கள். எனக்கோ கோர்ட்டாரிடம் பல விஷயங்களைப் பற்றி அடிக்கடி முறையிடவேண்டியிருக்கிறது. அதனால் வேறென்ன செய்வது" என்று கேட்டான்.

இந்த சூழ்ச்சி நிபுணனான கட்சிக்காரன் சந்துமேனன் நீதிபதியாக வந்தபொழுதும் கோர்ட்டில் அடிக்கடி மனுக்களை சமர்ப்பிப்பது வழக்கமாயிருந்ததென்று கூறவேண்டுமா? ஒரு நாள் இவனுடைய ஒரு மனுவை விசாரித்துக்கொண்டிருந்தார் சந்துமேனன். இந்தக் கட்சிக்காரனும் கோர்ட்டில் ஆஜராயிருந்தான். கோர்ட்டுக் குமாஸ்தா அருகில் நின்றுகொண்டு மனு சம்பந்தமான தஸ்தாவேஜுகளைப் புரட்டிக்கொண்டிருந்தான். உடனே நீதிபதி இவனை சாட்சிக்கூண்டில் ஏற உத்தரவிட்டார். கோர்ட்டுச் சேவகன் இவன் பெயரை உரக்கக் கூப்பிட்டான். இவன் கூப்பிட்டதைக் கேளாது போன்றே நடித்தான். மற்றொரு தடவை இவன் பெயரைக் கோர்ட்டுச் சேவகன் கூப்பிட்டான். அப்பொழுதும் அவன் கேளாது மாதிரியே இருந்தான். மூன்றாவது தடவையாகக் கூப்பிட்டும் பயனில்லை.

சந்துமேனன் ஆத்திரமடைந்து, "உன் பெயரைக் கூப்பிட்டவுடன் நீ கவனிக்காமல் இருந்து கோர்ட்டை அவமதித்த குற்றத்திற்கு உன் பேரில் வழக்குப் பதிவு செய்யப் போகிறேன், உனக்கு ஏதாவது கூறவேண்டுமா?" என்று கேட்டார்.

கட்சிக்காரன் :- நீங்கள் என்னைக் கூப்பிட்டீர்களா?

சந்துமேனன்:- மூன்று தடவைகள் கோர்ட்டுச் சேவகர்கள் கூப்பிட்டது, உன் காதில் விழவில்லையென்றா கூறுகிறாய்?

கட்சிக்காரன் :- கூப்பிட்டது என் காதில் விழுந்தது; ஆனால் எஜமான் என்னை நோக்கினீர்களா? அல்லது கோர்ட்டு குமாஸ்தாவை நோக்கினீர்களா? என்பது எனக்குப் புரியவில்லை.

இந்தச் சம்பாஷணையைக் கேட்ட கோர்ட்டிலிருந்த அனைவரும் திகைத்துப்போனார்கள். ஆனால் சந்துமேனனுக்கு இந்தக் கட்சிக்காரனின் சாமர்த்தியமான துணிவைக்கண்டு சிரிப்புத்தான் வந்தது.

நீதிக்குக் கண்ணில்லை

தன் கோர்ட்டில் நடந்துகொண்டிருந்த ஒரு வழக்கில் வாதிப்பதற்கு அப்போது சென்னை ஹைகோர்ட்டில் பிரபல வக்கீலாயிருந்த சங்கரன் நாயர் வருவதாகத் தெரிந்தவுடன் சந்து மேனன் ரயில் நிலையத்திற்குச் சென்று அவரை வரவேற்றுத் தன் வீட்டிற்கு விருந்தாளியாக அழைத்துச் சென்ருர்.

சங்கரன் நாயரை வரவழைத்த கட்சிக்காரர் மிகச் செல்வந்தர். அவருடைய எதிர்க்கட்சிக்காரர் மிகவும் ஏழை. சங்கரன் நாயரோ தனக்கெதிராக வாதிக்கப்போகிருர்; அவரை நீதிபதி கூட ரயிலுக்குச் சென்று வரவேற்றிருக்கிருர், இனி எப்படி தன் வழக்கு ஜெயிக்குமென்று அவர் கவலையடைந்தார். அவருக்கிருந்த வசதிக்கேற்றவாறு ஒரு சாதாரண வக்கீலிடந்தான் தன் வழக்கை ஒப்படைத்திருந்தார். அந்த வக்கீலுக்கும் உண்மையாகவே வழக்குத் தோல்வியடைந்துவிட்டதென்ற பீதி மனத்தில் ஏற்பட்டது.

நிலைமை இவ்வாறிருக்க, வழக்கு விசாரணை முடிந்து சங்கரன் நாயர் சென்னைக்குத் திரும்பிச் சென்ருர். குறிப்பிட்ட தினத்தில் சந்துமேனன் தன் தீர்ப்பையளித்தார். வழக்கில் வெற்றிபெற்றவர் ஏழைக் கட்சிக்காரர்தான். சங்கரன் நாயராயினும் சரி, இந்திரன், சந்திரனுயினும்சரி நியாயம் நியாயம் போலத்தான். என்ற கருத்துடையவர் சந்துமேனன்.

சந்து மேனனுக்கு மலையாள இலக்கியத்திலுள்ள உன்னத ஸ்தானத்தைப் பற்றிக் கூறினேம். சங்கீதத் துறையிலும் இவர் நிபுணத்துவம் வாய்ந்தவர். பிடில் அருமையாக வாசிக்கக் கற்றிருந்தார். மிருதங்கம் முதலிய மேளவாத்தியங்கள் வாசிப்பதிலும் பயிற்சி பெற்றிருந்தார்.

இவர் நீதித் துறையில் நீதி, நேர்மை, சத்தியம் முதலியவற்றிற்குக் கட்டுப்பட்டவரென்பது மிகப் பிரசித்தம். மலையாள இலக்கியத்தில் 'இந்துலேகா'விற்கு உன்னத ஸ்தானமிருப்பதுபோல் சந்துமேனனுக்கு மலையாளிகள் இருதயத்திலும் மலையாள தேசத்தைப் பற்றி நன்கு தெரிந்தவர்கள் உள்ளத்திலும் நிரந்தர ஸ்தானம் உண்டு.

—*From Rantu Maha Rasikanmar*
by T. S. Ananthasubramaniam.

நொண்டிச் சமாதானம்

தென்னை மரத்தில் ஏறி அகப்பட்டுக்கொண்ட திருடனை "தென்னை மரத்தில் ஏன் ஏறினாய்? என்று கேட்டதற்கு அவன் புல் பிடுங்குவதற்கு ஏறினேன்" என்று கூறினானாம். "தென்னை மரத்தில் ஏதடா புல்? என்று கேட்டதற்கு, அதனால்தான் கீழிறங்கி வந்துவிட்டேன்" என்றானாம். இக்கதை எல்லோரும் அறிந்ததே. குற்றவாளி தான் செய்த குற்றத்திற்குப் பொருந்தாத காரணம் கூறும்போது அதை 'நொண்டிச் சமாதானம்' என்று கூறுகிறோம்.

தன் மோட்டார் காரை ரஸ்தா விதிகளுக்கு மீறி அதிவேகமாய் ஓட்டிக்கொண்டு சென்றான் ஒரு வாலிபன். போலீசாரிடம் மாட்டிக்கொண்டு அவன் கூறியதென்னவென்றால், "என் கால் ஆக்ஸலெரேட்டரில் (Accelerator) மாட்டிக்கொண்டுவிட்டதால் தான் மோட்டார் வேகமாய்ப் போயிற்று" என்பதாகும்.

★

சைத்திரிகர் ஒருவர் ஒரு ஸ்திரீயின் உருவத்தை வரைந்திருந்தார். அந்தப் படத்தைத் திருடிச் சென்றவன் போலீசாரிடம் சிக்கிக்கொண்டபோது "அந்த ஸ்திரீயின் படம் என் தாயாரைப் போன்றிருந்தது. அதனால் தான் எடுத்துக்கொண்டு போனேன்" என்று கூறினான்.

★

குடிபோதையினால் சரியாக நடக்கமுடியாமல் தட்டுத் தடுமாறிக்கொண்டிருந்த குடிகாரன் ஒருவனை நீதிபதியிடம் அழைத்துச் சென்றபோது, "நான் புதிதாக பூட்ஸ். போட்டுக் கொண்டிருக்கிறேன். அது காலைக் கடிப்பதால் சரியாக நடக்கமுடியவில்லை" என்றானாம்.

★

23 பேர்கள் சூதாடிக்கொண்டிருந்த ஒரு வீட்டின் அறையில் போலீசார் புகுந்தபோது கண்டது:— 2 நாற்காலிகள், ஒரு படுக்கை, ஒரு மேஜை, ஒரு அலமாரி, 3 ஜதை சொக்கட்டான்கள், 12 சீட்டுக் கட்டுகள், பீப்பாய் நிறையச் சாராயம். "இங்கு நீங்கள் என்ன செய்கிறீர்கள்? என்று கேட்டதற்கு உலக விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம்" என்று அவர்கள் சாதுர்யமாகச் சொன்னார்கள்.

நொண்டிச் சமாதானம் கூறுவது அன்றும் இன்றும் ஒன்றாகவேயுள்ளது.

உங்களுக்குத் தெரியுமா?

●

தன் மோட்டார் காரின் பின்பக்கத்திலிருந்து வந்த சப்தத்தைக் கேட்டுப் பயந்த ஒருவர் போலீசாரை வரவழைத்தார். போலீசார் வந்தவுடன், பின்பக்கத்தில் சாமான்கள் வைக்கும் பெட்டியைத் திறந்து பார்த்ததும் ஒரு எலி, குட்டிகளைப் போட்டிருந்ததைக்கண்டு சப்தத்தின் காரணத்தை அறிந்து கொண்டார்.

★

சென்ற நாற்பது ஆண்டுகளாக, இங்கிலாந்தைச் சேர்ந்த ஒரு மனிதன் ஒரு விநோதமான வேலையிலீடுபட்டிருந்தான். அது குளவிகளைக் கொல்வதாகும். இதுவரையிலும் அவர் ஐம்பது குளவிக் கூடுகளைச் சேதம் செய்திருக்கிறாராம்.

★

நியூயார்க் நகரத்தினருகில் ஓடும் ஒரு நதியிலே 160 அடி உயரங்கொண்ட ஒரு பாலம் இருக்கிறது. இவ்வளவு உயரத்திலிருந்து ஒரு மனிதன் கீழே குதிக்க முடியுமாவென்று சோதனை செய்து பார்த்தாராம் ஒருவர். இவர் இரண்டு கைகளினாலும் ஒரு கம்பளியைக் குடைபோல் பிடித்துக்கொண்டு பாலத்தின்மீதிருந்து நதியில் குதித்தெழுந்து பத்திரமாக கரை சேர்ந்தார். அங்கு போலீசார் இவரைக் கைது செய்வதற்குத் தயாராகக் காத்துக் கொண்டிருந்தனர்!

★

இருபதாம் நூற்றாண்டில் ஒழுக்கமும் தர்மமும் இல்லையென்று கூறுவது தவறு. 1924-ஆம் ஆண்டில் ஒரு கடையிலிருந்து ஒருவர் பன்னிரண்டணாவிற்குச் சாமான்கள் வாங்கினாராம். 1954-ஆம் ஆண்டில் (அதாவது முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு) அந்த மனிதன் அந்தக் கடைக்குச் சென்று பணங்கொடுக்கத் தாமதித்ததற்கு மன்னிப்புக் கேட்டுக்கொண்டு பன்னிரண்டணாவைக் கொடுத்துவிட்டாராம்.

பர்மியரின் ஹோலி பண்டிகை

வருஷம் முழுவதும் பண்டிகைகளைக் கொண்டாடிக் கொண்டே குதூகலமாக வாழ்க்கையை நடத்தும் வகுப்பார்களாகும் பர்மியர். இவ்வாறு கொண்டாடப்படும் பல பண்டிகைகளிலொன்றே 'நீர்த்திருவிழா' வருஷந்தோறும் இந்தவிழா ஏப்ரல் மாதம் 13–ந் தேதி ஆரம்பமாகி 15-ந் தேதி முடிவடைகிறது. பண்டிகையைக் கொண்டாடுங் தினங்களில் திரள் திரளாக வாலிபர்களும் யுவதிகளும் மிக அழகாக அலங்கரிக்கப்பட்ட மோட்டார்கார்களிலும் 'ஜீப்' களிலும் நகர்களிலெங்கும் சுற்றிக்கொண்டு தங்கள் நண்பர்கள் மீதும் மற்றவர்கள் மீதும் நீரை ஊற்றி விளையாடுவார்கள். இத் தினங்களில் கேளிக்கைகளும் கீத கோஷங்களும் நாடெங்கும் முழங்கிக் கொண்டிருக்கும். அளவு மீறின விளையாட்டுகளுக்கு இடங்கொடுக்கும் இந்தப் பண்டிகை மூலம் பூசல்கள் விளைவது சர்வசாதாரணம்.

இந்த 'நீர்த் திருவிழா' பர்மியர்களின் புதுவருஷக் கொண்டாட்டமே ஆகும். பர்மியர் சந்திர மாதத்தையொட்டிய பஞ்சாங்கத்தை அனுஷ்டிப்பவர்களானதால் இந்தத் திருவிழா, வருஷந்தோறும் கொண்டாடப்பட வேண்டிய தினத்திற்குத் திட்டமேயில்லாதிருந்தது. அதனால் தான் ஆங்கில மாதத்தேதிகளில் இந்த 'நீர்த் திருவிழா'வைக் கொண்டாடுவதென்ற முடிவிற்கு வந்துவிட்டனர் பர்மியர்கள்.

இந்த நீரை அடித்துக்கொண்டாடும் திருவிழாவிற்கு நம்நாட்டில் கொண்டாடப்படும் ஹோலிப் பண்டிகையை கிட்டத் தட்ட ஒப்பிடலாம். பழைய வருஷத்தைத் தொலைத்து முழுகுவதென்ற அர்த்தமல்ல, இந்த 'நீர்த்திருவிழா'வின் கருத்து. இந்தப் பண்டிகை எவ்வாறு ஆரம்பமாகியுள்ளதென்பதைக் குறித்து ஒரு சுவையான கதையுள்ளது.

ஒரு காலத்தில் தேவலோகத்தில் தேவர்களுக்கரசனான ஸாக்கியாவும் பிரம்மா என்ற ஒரு கந்தர்வனும் சூதாடிக்கொண்டிருந்தனர். விளையாட்டில் இவர்களுக்கிடையே ஏற்பட்ட போட்டியில் தோற்றவரின் தலையை வெட்டிவிட வேண்டுமென்ற முடிவுக்கு வந்தனர். இந்த முடிவுப் பிரகாரம் விளையாட்டில் தோல்வியுற்ற பிரம்மாவின் தலை

துண்டிக்கப்பட்டது. ஆனால் வெட்டிய தலையை என்ன செய்வதென்ற பிரச்னையை சக்யாவினால் சமாளிக்கமுடியவில்லை. ஏனென்றால் இந்தத்தலை பூமியில் பட்டால் பூமி அப்படியே எரிந்து சாம்பலாகிவிடும். இது நேரிடாமலிருப்பதற்காக பிரம்மாவின் நான்கு மனைவிகளையுமழைத்து அவர்கள் ஒவ்வொருவராக ஒவ்வொரு வருஷ காலத்திற்கு பிரம்மாவின் தலையைத் தங்கள் தலையில் தூக்கி வைத்துக்கொண்டு நிற்கவேண்டுமென்று ஸாக்கியா உத்தரவிட்டான். இதன் பிரகாரம் ஒரு வருஷம் ஒரு மனைவி தலையைத் தூக்கி நின்றுகொண்டிருந்த பிறகு இந்தத் தலையை மற்றொரு மனைவியிடங் கொடுத்துவிடுவாள். இப்படி இன்றும் நடந்துகொண்டிருக்கிறதென்பது பர்மியர்களின் நம்பிக்கை.

தலையின் தீராத உஷ்ணத்தைத் தண்ணீரால் தணிக்கும் சின்னமாகத் தான் பர்மியர்கள் புது வருஷத்தன்று அளவற்ற நீரை ஊற்றுகிறார்கள்.

இந்த விழாவைப் பற்றி நிலவி வரும் மற்றொரு நம்பிக்கை என்னவென்றால் ஸாக்கியாவே தன் கையில் கணக்குப் புத்தகத்தை வைத்துக்கொண்டுவிழா தினத்தன்று பூமிக்கு வருகிறானென்றும் பாபிகள் புரியும் தீங்குகளையெல்லாம் அந்தப் புத்தகத்தில் பதிவுசெய்கிறானென்பதும் தான்.

இதனாலேயே பர்மியப் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு 'நீர்விழா'வன்று கெட்ட காரியங்களொன்றுமே செய்யக்கூடாதென்று தீவிரமாகப் போதனை செய்கிறார்கள்.

—*Blend*, Calcutta

உழைப்பது பாவம்!

சமீபத்தில் கம்யூனிஸ்டு சீனா திபேத் ராஜ்யத்தில் தன் ஆட்சியை நிலைநிறுத்தியது. ஆனால் திபேத் ராஜ்யத்திலுள்ள பிச்சைக்காரர்களுக்கு கம்யூனிஸ்டு கொள்கைகளைப் பற்றி வெறுப்புத்தான். "இந்த ஜன்மத்தில் பிச்சையெடுப்பதன் காரணம், போன ஜன்மத்தில் செய்த பாவங்கள் தான்" அதனால் கம்யூனிஸ்டு கொள்கைகளுக்கிணங்கி இந்த ஜன்மத்தில் உழைத்து வயிறு வளர்த்தால் போன ஜன்மத்தில் செய்த பாவங்கள் எவ்வாறு தீரும்?

"இந்தக் காரணத்தால் உழைத்துப் பிழைப்பதை நாங்கள் சற்றேனும் விரும்பவில்லை" என்கிறார்களாம்.

பட்டப் பெயர்கள்

இந்தியா முழுவதும் "சர்மா" என்ற பட்டம் பிராமணர்களைக் குறிக்கும். "வர்மா" என்பது க்ஷத்திரியர்களைக் குறிக்கும். இந்த இரு இனங்களிலும் சேராதவர்களைக் குறிப்பிடுவதற்கு இந்தியா முழுவதிலும் உபயோகத்திலுள்ள ஒரே பதம் கிடையாது.

பெயரிடுவதில் நாம் தென்னிந்தியாவிலும் கையாண்டுவரும் பழக்கங்களுக்கும் இந்தியாவில் வேறு சில மாகாணங்களில் நிலவிவரும் பழக்கங்களுக்கும் ஒரு முக்கிய வித்தியாசமுண்டு. இங்கு நாம் குழந்தைகளுக்களிக்கும் பெயர்கள் குடும்ப சம்பிரதாயங்களையும் வகுப்புகளையும் ஒட்டியவையேயாகும். பெரும்பாலோர் இந்தப் பழக்க வழக்கங்களில் மாறுதலை விரும்புவதில்லை. காலப்போக்கில் நவீன நாகரிகக் கருத்துக்கள் இந்தப் பழக்கங்களையும் பாதிக்காமலில்லை.

பிரபல வங்க கவி அரசரை குறிக்கும் ரவீந்திரன், கவியரசியைக் குறிக்கும் சரோஜினி நம் தேச பிதாவைக் குறிக்கும், மோகன், இந்திய தேசிய ராணுவத் தலைவராயிருந்தவரைக் குறிக்கும் சுபாஷ் முதலியபெயர்கள் எல்லா வகுப்பினர்களும் தங்கள் குழந்தைகளுக்கு இப்போது வைக்கிறார்கள். வேறு சில மாகாணங்களில் வகுப்பையோ சமூகத்தையோ குறிக்கும் பட்டங்களைத் தவிர அவரவர்கள் குடும்பத்தினர்கள் செய்யும் தொழிலை யொட்டியுள்ள பெயர்களையுமளிப்பதுண்டு. 'வக்கீல்' (Vakil) 'பிரிண்டர்' Printer) (அச்சாபீஸ் முதலாளி) 'சோப் மேக்கர்' (Soap Maker) (ஸோப்பு தயாரிப்பவர்) 'காபினெட் மேக்கர்' (Cabinet Maker: அலமாரி, மரச்சாமான் தயாரிப்பவர்) 'டாக்டர்' (Doctor) வைத்தியர்) 'ஜோஷி' (Joshi: ஜோதிஷிலிருந்து) 'ஓஜா' (வைத்தியர்) வைத்தியா (வைத்தியர்) புரோகித் (புரோகிதர்) முன்ஷி (குமாஸ்தா) டலால், (தரகர்) மேத்தா (ஏஜெண்டு) பட்டேல் (கிராமத் தலைவர்) மோடி (பல் சரக்கு வியாபாரி) ஆச்சார்யா (ஆசிரியர்) போன்ற பம்பாய், உத்தரப் பிரதேசம் இன்னும் மற்ற இடங்களிலும் சர்வசாதாரணமாய் உள்ள பெயர்கள் இந்த ரகத்தைச் சேர்ந்தவைதான். ஆதிகாலத்தில் வேதாத்தியானத்தை அநேக குடும்பங்கள் எவ்வளவு அக்கறையோடு செய்து வந்தனரென்பதற்கும் 'சதுர்வேதி,' 'திரிவேதி,' 'துவேதி' 'சாஸ்திரி' முதலிய பட்டங்கள் தக்க அத்தாட்சியாகும்.

பெயர்களை யளிப்பதற்குச் சில மாகாணங்களில் மற்றொரு

பழக்கமும் வழக்கத்திலுண்டு. அது அவரவர்கள் குடும்பங்களின் சொந்த ஊர் என்று கொண்டாடும் இடங்களின் பெயர்களை யொட்டியது. இதனால் தான் பெரில்லி (Bareilly) என்ற இடத்திலுள்ள ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவருக்கு பிரல்வி என்றும் மதுரா (Mathura) என்ற இடத்திலுள்ள ஒரு குடும்பத்தைச்சேர்ந்தவருக்கு 'மதுர்' என்றும் 'பட்' (Bhat) நதியினருகேயுள்ள இடத்தில் வசித்த குடும்பத்தைச் சேர்ந்தவருக்கு 'பட்நகர்' என்றும் பெயர் வந்துவிடுகிறது. இந்த இடங்களையொட்டிய பெயர்கள் 'பார்ஸி' வகுப்பில் மிகவும் சகஜமானது. பூனா—வாலா, தாரப்பூர்—வாலா அங்கிளஸேரியா, (அங்கிளேஸ்வரை ஒட்டியது) பில்லிமோரியா, பில்லி மோராவை யொட்டியது). பருச்சா, (புரோச்சை ஒட்டியது) இவை மேற்கூறியவற்றிற்கு உதாரணங்கள். மகாராஷ்டிரியர்களிடையே சிவாஜி ஆட்சிபுரிந்த காலத்தில் உன்னத பதவியைவகித்து வந்தவர்களின் வார்சுகள் அந்தப் பதவிகளின் பெயர்களையே தங்கள் குடும்பங்களுக்குப் பட்டப் பெயர்களாக வழங்குவதும் வழக்கமுண்டு. தேஷ்முக்— (கிஸ்திவசூல் செய்பவர்) சிட்னிஸ்: (பத்திரம் எழுதுபவர்) நாயக். (தலைவன்) முதலியன உதாரணமாகும்.

பட்டப் பெயர்கள் வரிசையில் மிக விநோதமான ஒன்று, பார்ஸி வகுப்பாரைச் சேர்ந்தது. பிரெஞ்சு கிழக்கிந்தியக் கம்பெனி, பம்பாய், சூரத் முதலிய இடங்களில் வியாபாரஞ் செய்துகொண்டிருந்த காலத்தில் பம்பாயைச் சேர்ந்த ஒரு பார்ஸி அவர்களுக்கு உதவி புரிந்துவந்தார். இவர் தோற்றத்தில் குள்ளமானவர். இதனால் இவரை பிரெஞ்சு பாஷையில் 'சிறியவன்' என்று பிரெஞ்சுக்காரர் அழைத்தனர். (Petite) என்ற வார்த்தையை அந்தக் குடும்பத்தினர் பட்டப் பெயராக்கிக் கொண்டுவிட்டனர். பம்பாய் வியாபாரத் துறையில் மிகப் பிரபலஸ்தர்களான 'பெட்டிட்' என்ற பார்ஸி குடும்பத்தார் இந்த மேற்கூறிய 'குள்ளன்' பார்ஸி பரம்பரையைச் சேர்ந்தவர்களே.

எப்போதும் உற்சாகம் அளிப்பது
அசோகா சுகந்த பாக்குத்தூள்

மரியாதை ராமன் கதையைத் தழுவிய ஒரு சிறுவர் கதை.

தொட்டி, குட்டி போட்டால் மந்திரி பிள்ளையைப் பெறலாம்

அப்துல்காதரும், அய்யாசாமியும் அண்டை வீட்டுக்காரர்கள். இருவரும் வெவ்வேறு மதத்தினர்களாக இருந்தாலும், நெருங்கிய நண்பர்களாகவே இருந்தார்கள்.

காதர், உயர்ந்த ரக ஆட்டு மாமிசங்களை அரசனுக்கு அளித்து, அதன்மூலம் வாழ்ந்து வந்தான். தினமும் காலையில் தனது வீட்டின் கொல்லைப் பக்கத்தில் ஆடுகளை வெட்டுவான். வெட்டும்போது விழும் எலும்புகளை ஒரு பெரிய மரத்தொட்டியில் போடுவான்.

அய்யாசாமி, குடியானவன். அதிகாலையில் வயலுக்குக் கிளம்பிவிடுவான். அவனிடம் மிகவும் அழகான ராஜபாளையம் நாய் ஒன்று இருந்தது. அது சீமை ஜாதியைச் சேர்ந்தது. அம்மாதிரி நாய் அந்த வட்டாரத்திலேயே இல்லை. அய்யாசாமியுடன் அதுவும் அதிகாலையில் கிளம்பிவிடும். மாலையில் அவனுடன் வீடுதிரும்பியதும், நேராகக்காதர் வீட்டுக்கொல்லைப்பக்கம் ஓடிவிடும். அங்கே உள்ள மரத்தொட்டியில் கிடக்கும் எலும்புகளைச் சாப்பிடும்.

ஒரு நாள் திடீரென்று காதருக்கு நாயைத்தானே வளர்க்க வேண்டுமென்ற எண்ணம் தோன்றியது. அதாவது அய்யாசாமியிடம் கேட்டால் தரவே மாட்டான். எனவே, அன்று மாலையில் வழக்கம் போல எலும்புகளுக்காக வந்த அய்யாசாமியின் நாயைத் தன் வீட்டில் கட்டிப் போட்டுப் பேசாமலிருந்துவிட்டான்.

வழக்கம்போல் சென்ற நாய் அதன் படியே திரும்பாமலிருப்பதைக் கண்ட அய்யாசாமி அதைத்தேடினான். நாய் கிடைக்கவேயில்லை. ஆனால் மறுநாள் காலை தனது நாய் காதர் வீட்டிலிருப்பதைக் கண்டு விட்டான். காதரிடம் சென்று நாயைக்கேட்டான். காதர் மறுத்துவிட்டான். அய்யாசாமி கவலையுடன் வீடு சென்றான். மறுநாள் அய்யாசாமி அரசனுக்கு மனுச்செய்துகொண்டான். ஆனால் அதற்கு முன்பே காதர் தனக்கு அரண்மனையில் இருந்த சலுகையால் அரசனைப் பேட்டிகண்டு, முடிவைத் தன் பக்கம் வெற்றியடையும்படி செய்துகொண்டான்.

விசாரணை ஆரம்பமாயிற்று. அரசன் அய்யாசாமியைநோக்கி "இந்த நாய் உனக்கு ஏது...?"

என்றான். "இதற்கு முன்பு எங்கள் வீட்டில்இருந்தநாய்போட்ட குட்டிதான் இது..." என்றான் அய்யாசாமி காதரைநோக்கி அரசன், "இந்த நாய் உனக்கு ஏது...?" என்றான்.

உடனே காதர், "எங்கள் வீட்டின் கொல்லைப்பட்டக்கம். எலும்புகளைப் போடும் மரத் தொட்டி ஒன்று இருக்கிறது, அது போட்ட குட்டிதான் இது..." என்றான்.

அரசன் யோசிப்பதுபோல் பாவித்து, "சரி, நாயை உங்கள் இருவர் வீட்டிற்கும் முன்பு விடுகிறேன். யார் வீட்டுக்குச் செல்லுகிறதோ அந்த வீட்டு நாய் இது" என்று கூறினான். இருவரும் சம்மதித்தார்கள். நாய் இருவர் வீட்டின் முன்பும் அவிழ்த்துவிடப்பட்டது. இரண்டு முறைகளும் அது காதர் வீட்டு எலும்புத் தொட்டிக்கே ஓடியது. அதனால் "நாய் காதர் வீட்டு மரத்தொட்டிபோட்ட குட்டி தான். வீணை வழக்குத்தொடுத்த அய்யாசாமிக்கு 50 ரூபாய் அபராதம் போடுகிறேன்" என்று அரசன் தீர்ப்பளித்தான்.

எல்லோருக்கும் அரசனின் தீர்ப்பு அநீதி என்று தெரிந்தும் யாரும் அவனிடம் அதைக் கூற முன் வரவில்லை.

ஆனால் அந்நாட்டு மந்திரிமட்டும் அய்யரசாமியை தனியே அழைத்து 'அய்யாசாமி, கவலைப் படாதே, நாய் உன்னுடையது தான். அதுஎப்படியும் உனக்குக் கிடைக்கும். ஆனால் சிறிது பொறுமையாக இருக்கவேண்டும். இப்பொழுது இந்த அபராதத் தொகையை நானே கட்டி விடுகிறேன். முள்ளை முள்ளால் தான் எடுக்கவேண்டும்'' என்று கூறி, அபராதத்தைத் செலுத்தி விட்டுச்சென்றார். நாட்கள் பறந்தோடின.

ஒருநாள், பக்கத்து தேச அரசர், ஏதோ முக்கிய நேச ஒப்பந்தம் செய்ய அந்த தேசத்துக்கு வந்தார். உடன்படிக்கை கையெழுத்தாகும் சமயத்தில் மந்திரி 'மட்டம்' போட்டுவிட்டார்.

"எங்கே உங்கள் மந்திரி...! இன்னும் வரவில்லையே...! சீக்கிரம் வரச்சொல்லி செய்தியனுப்புங்கள்" என்றார் அயல் நாட்டு அரசர். அரசர் மந்திரியை வரச்சொல்லி யனுப்பினார். அப்படியும் மந்திரி வரவில்லை. இரு அரசர்களும் மந்திரியின் மாளிகைக்கே சென்றார்கள். மந்திரியின் மனைவியிடம் "எங்கே மந்திரி?" என்றார் அரசர்.

"உஸ், பேசாதீர்கள்...அவருக்கு இன்று காலை ஆண் குழந்தை பிறந்திருக்கிறது...?" என்றாள் அவர் மனைவி. இரு அரசர்களும் திகைத்து,

"என்ன ஆண் பிள்ளையான, மந்திரிக்கா, குழந்தை பிறந்திருக்கிறது?" என்றார்கள்.

உடனே மந்திரியின் மனைவி, அயல் நாட்டு அரசரைப் பார்த்து,

“ஆம் அரசே, இதில் என்ன அதிசயம் இருக்கிறது? சில தினங்களுக்கு முன்பு கூட காதர் என்னும் கசாப்புக் கடைக்காரனின் வீட்டு மரத்தொட்டி ஒரு நாய்க்குட்டி போட்டதே...... ஏன்? எங்கள் அரசர் தானே தீர்ப்புக்கூடச் செய்தார்” என்று அவர் எதிரில் அரசனின் குட்டை உடைத்து விட்டாள். அரசனுக்கு தான் செய்த தவறு புரிந்துவிட்டது. உள்ளே ஓடி மந்திரியிடம் மன்னிப்புக் கேட்டான்.

உடனேயே அரசாங்க வெகுமதிகளுடன் அய்யாசாமியின் நாய் அவனிடமே அளிக்கப்பட்டது. மந்திரியின்சம்பளம் உயர்ந்தது. ஆனால் ஐயோ பாவம்! அநியாயம் செய்த காதருக்குத்தான் வேலை போய்விட்டது. ஏனெனில் அரசன் மாமிசம் சாப்பிடுவதையே நிறுத்திவிட்டான்.

—ரேவதி

பாடுபட்டுச் சம்பாதிப்பவன்!

ஒரு வீதி முனையில் நின்று கொண்டு நாள் முழுவதும் அலைந்தும் ஒன்றும் கிடைக்காத பிச்சைக்காரன் ஒருவனைக் கண்டு பரிதாபங்கொண்ட ஒரு கனவான் ஒரு ரூபாயை நீட்டினார். மிக வெறுப்போடும் கோபத்தோடும் அந்தப் பிச்சைக்காரன் ரூபாயைவாங்க மறுத்து அலட்சியஞ் செய்துவிட்டான்.

“ஏனப்பா ரூபாய் வேண்டாமென்கிறாய்! நீ பிச்சைக்காரன் தான், அல்லவா?” என்றார் கனவான்.

“ஆம், நான் பிச்சைக்காரன் தான், ஆனால் கௌரவமுள்ளவன்” “நான் பிச்சையைக் கேட்பவரிடமிருந்துதான் பிச்சையைப் பெற்றுக்கொள்வேன், அப்பொழுதுதான் பாடுபட்டு சம்பாதிக்கும் திருப்தி எனக்கு ஏற்படுகிறது” என்றான் பிச்சைக்காரன்.

கத்திக்கும் கன்னக்கோலுக்கும் பேனாவின் உதவி

ஆங்கில இலக்கியத்தில் கொலைக் கதைகளும், துப்பறியுங் கதைகளும் ஒரு முக்கிய ஸ்தானம் பெறுகின்றது. முக்கிய ஸ்தானமென்றால் இலக்கியத் தரத்தில் முக்கியத்துவம் என்று அர்த்தமல்ல. வெளியாகும் புத்தகங்கள், பத்திரிகைக்ள் இவற்றின் எண்ணிக்கையில் ஒரு பெரும்பாகம் இவ்விதமான கொலைக் கதைகளும் துப்பறியுங் கதைகளும்தான். இந்தக் கதைகளுக்குப் போதை, தலைவலி மாத்திரை போல் மனிதனை வசிகரிக்கும் சக்தியுண்டு. தலைவலிஏற்பட்டால்தலைவலி மாத்திரையை உட்கொள்ளாமற் தலைவலி போவதில்லை. போதையை உட்கொள்ளும் பழக்க முள்ளவர்களுக்குப் போதையினால் மட்டுந்தான் அமைதி பெறமுடியும். இது போலவே கொலை, துப்பறியுங் கதைகள் படிப்போருக்கு இந்தக் கதைகளில் மட்டுந்தான் மகிழ்ச்சிபெற முடியும். நாள் முழுவதும் அரை வயிற்றுக் கஞ்சிக்காக உழைக்கும் ஆபீஸ் குமாஸ்தாவும் விடிய விடிய கவலைப்பட்டுக்கொண்டு தன் வியாபாரத்தை அபிவிருத்திச் செய்துகொள்ள முயலும் முதலாளியும் இரவு பகலென்று பாராமல் பாடுபடும் பத்திரிகையாளர்களுக்கும் சிறிது இன்பமளிக்கும் வழி கொலைக் கதைகள், துப்பறியும் கதைகள்தான் என்ற நிலைமை இப்பொழுது உலகெங்கும் பரவியுள்ளது.

கொலை, துப்பறியுந் துறையில் உள்ளது. புத்தகங்கள் மட்டுமல்ல. இந்தக் கதைகளால் நிரப்பப்பெற்றஅநேகபத்திரிகைகள் வாரந்தோறும், மாதந்தோறும் வெளியாகின்றன. சமீபத்தில் இம்மாதிரிக் கதைகளை எழுதுபவர்களுக்கும் வெளியிடுபவர்களுக்கும் ஒருவினோதமான யோசனை தோன்றிற்று: துப்பறியுங் கதைகளில் சாதாரணமாக துப்பறியும் வேலையிலீடுபட்டிருப்பவர்களுக்கு கிடைக்கும் துப்புகள் ஒருபிடி தலைரோமம், இரத்தக்கரைபடிந்த கத்தி, துணி முதலியவைதானே! சில வருஷங்களுக்கு முன்பு இம்மாதிரிப் பொருள்களையெல்லாம் புக்தகங்களிலேயே வைத்துக் கொலையைப் பற்றிப் போலீசாருக்கும் துப்பறியும் நிபுணருக்கும் கிடைத்துள்ள தகவல்களையுங் கொடுத்து ஒருரகப் புத்தகத்தை வெளியிட்டுக் கொண்டிருந்தனர். லக்ஷக்கணக்கான மக்கள் இம்மாதிரி தலைரோமம், பழைய கரைபடிந்த துணிகள் முதலியவையடங்கிய ரூபத்திலுள்ள மூட்டையை வாங்கி இரவில் தூக்கமின்றி கொலையாளி கொலை எப்படிச் செய்திருப்பானென்று தாங்கள் விலை கொடுத்து வாங்கியுள்ள துப்புகளிலிருந்து கண்டுபிடிக்க முய

லுவது ஒரு பொழுது போக்கா யிருந்தது. அல்பாயுசுபடைத்த இப்பிரசுரங்கள் மறைந்து விட்டன. ஏனென்றால் மக்களை ஏமாற்றுவதற்கும் ஒரு எல்லை யுண்டல்லவா ?

லக்ஷக்கணக்கான பிரதிகள் விற்றுக்கொண்டிருந்த இம்மாதிரி கொலை, கொள்ளை, துப்பறியும் வழிகள் முதலியவற்றை விரிவாகக் கொடுக்கும் புத்தகங்களால் சமூகத்திற்கும் ஒரு பெரும் தீங்குஏற்பட்டிருக்கிறது. மக்களுக்கு நல்லெண்ணத்தை யூட்டி நற்செயல்களுக்குத் தூண்டுதலாயிருந்து மனிதனுக்கு நல்ல காலத்திலும் சோதனை காலத்திலும் ஒன்று போல் திருப்தியளிக்கும் புத்தகங்கள் தான் சமுதாயத்திற்குப் பயன்படுபவை. கொலை, கொள்ளை, துப்பறியும் வழிகள் இவற்றைப் பற்றியுள்ள புத்தகங்களுக்குக் கிராக்கி யிருக்க வேண்டுமென்றால் புதிதாய் பிரசுரமாகும் புத்தகங்களில் புது தினுசான கொலைகளும் நவீன வழிகளில் நடக்கும் கொள்ளைகளும் இதற்கெல்லாம் ஏற்றவாறு துப்பறியும் வழிகளுமிருக்கவேண்டும். கொலையும் கொள்ளையும் செய்வதற்குப் புதிய வழிகளைக் கற்பனை செய்து புத்தகங்கள் எழுதுவதும் அவற்றைப் பிரசுரிப்பதும், எழுத்தாளர்களும் பிரசுரகர்த்தர்களும் சமூகத்திற்குச் செய்யும் ஒரு பெருந் தீங்கல்லவா ! இம்மாதிரிப் புத்தகங்களிலிருந்து திருடர்களும் கொள்ளைக்காரர்களும் அவர்கள் தொழில்களுக்கு பெரும் உதவி பெற்றிருக்கிறார்களென்பது மேல் நாடுகளிலுள்ள அநேக சட்ட நிபுணர்களின் அபிப்பிராயம்.

இம்மாதிரி தீங்கு விளைவிக்கும் புத்தகங்கள் ஆங்கிலத்தில் மட்டுந்தான் இதுவரை வெளிவந்து கொண்டிருந்தன. இப்பொழுதோ இவை தமிழிலும் தலைகாட்டத் தொடங்கிவிட்டன. இந்தப் புது ரகத்தைச் சேர்ந்த ஒரு தமிழ்மாத சஞ்சிகையைப் பற்றி ஒரு இலங்கைப்பத்திரிகை வெளியிட்டுள்ள சுவையான சில பகுதிகள் வருமாறு :—

"தமிழில் சில மர்மக் கொலைக் கதைகள் வெளிவந்திருந்தாலும் 'காமிக்குகள்' போன்ற பத்திரிகை இதுவரை வெளிவராததற்குக் காரணம், மலிவான விலையில் வர்ணப்படம் அச்சடிக்க வசதியில்லாததே."

"முதல் இதழில் மொத்தம் எட்டுக் கொலைக்கதைகள் இடம் பெற்றிருக்கின்றன. தேசபக்தி காரணமாக ஆள்மாறாட்டக் கொலை முதலாவது. நகை, வெள்ளிப் பாத்திரங்களுக்காகக் கூடி வாழ்ந்தவனைக்கொலை செய்து எச்சம் பாயில் சுருட்டி ரயில் பார்ஸலாக அனுப்பியது இரண்டாவது. ஜகஜ்ஜால ஜக்கனைக் கொலைசெய்ய ஒரு பெண்மீது அவன் விரோதியின் ஆவியை ஆரோகணம் செய்து 'கம்சவதம்' செய்வது மூன்றாவது. அண்ணனைக் கொன்ற தம்பி ஒரு சிறு தவறினால் அகப்

படுவது நான்காவது. விஷம் கலந்த 'கேக்கை'ப் பரிசளித்துப் பச்சைக் குழந்தையைக் கொலை செய்வது ஐந்தாவது. மருமகனைக் கொன்று மகனின் சீர்கெட்ட நடத்தைக்குப் பழி வாங்க அவனைத் தூக்கு மேடைக்கு அனுப்பியது ஆறுவது. சந்தேகத்தின் பேரில் மனைவியையும், தூக்கத்தில் இயங்கும் வியாதியினுலும் ஆவியழைப்பினுலும் குழந்தையையும் கொன்ற ராஜாவேலுவின் இரட்டைக் கொலை ஏழாவது. தற்கொலை என்று எண்ணும்படியான சூழ்நிலையில் ஆர்ஸெனிக் கொடுத்து ஆள் மாருட்டமாகத் தன் சகோதரியையே கொலை செய்த பின்பும் அதை உணராமல் துப்புத் துலக்கும் பரஞ்சோதியின் கதை எட்டாவது. இவையனைத்தும்போதாது என்று கொலை, களவு, காமம், தற்கொலை சம்பந்தப்பட்ட செய்திகளும் துணுக்குகளும் இதில் இடம் பெற்றுள்ளன.

"கல்யாணத்துக்கு முன் கர்ப்பிணியான உபாத்தியாயினி, துண்டித்த தலையைக் கையில் எடுத்துக்ககாண்டு போலீஸ நிலையத்துக்குச் சென்றதலையாரி மர்மக் கொலை விளம்பரத்தில் தலைகீழாக மாடிப்படியில் துடையும மார்பகமும் சற்றே தெரியும்படி வெளியாகி யிருக்கும் படம், மாமன் மகனைக் கொன்று சுகம் அனுபவிக்க நினைத்த பெத்தா சுப்பையா, இச்சைக்கு மறுத்த மனைவியைக் கொலை செய்த சின்னப் பையன், வீட்டுக்குக் கொள்ளி வைத்த பூங்காளி மூப்பன் கர்ப்பிணியின் வயிற்றில் குழந்தை வெளியே தெரியும்படியான கத்திக் குத்து முதலியவைப் பற்றிப் படிக்கும்போது அருவருப்பாயிருக்கிறது.

"குடும்பப்பெண்கள், தாசிகள், கன்னிப் பெண்கள், வயசானவர்கள், இளம் பெண்கள் என்ற வித்தியாசமில்லாமல் பெண் உருவங்களை இரவில் ஜகஜ்ஜால மக்கள் ஊரிலுள்ள வீடுகளிடிருந்து தூக்கிவந்து பாழ்படுத்தி மறுநாட் காலை காட்டுப்புறம் விட்டெறிவதும், பூவைப்போல கன்றிக்கிடந்த மூர்ச்சையான அபலைப் பெண்ணிடம் இரண்டு மிருகங்களைப்போல நடந்து கொண்டதும்.........படிக்கும் போதே விரஸமாக இருக்கிறது.

"இந்த ஆபாசங்களின் மத்தியில் உயிரைக் காப்பாற்றும் முயற்சியில் உயிரையே கொடுத்த சன்னியாசி, அபராதம் செலுத்தினுல் அனுதாபத்தைக் கவரும் அன்னபூரணி லஞ்சம் வாங்காத போலீஸ் அதிகாரி, மனைவியோடு சண்டை போட்டதை வெளியில் சொல்ல விரும்பாத மானஸ் தன் முதலானவர்களும் நடமாடுகிருர்கள்.

"வாள் வீசுவதுபோல, இவர்கள் ஆரம்பித்திருக்கும் பத்திரிகை, கொஞ்சம் தவறினுலும் அதனுல் சமூக ஆத்மாவே கொலைசெய்யப்பட்டு விடும் என்றே கூறவேண்டும்."

நாம வினோதங்கள்

பிறந்த குழந்தைகளுக்கு நாம கரணம் செய்வதற்குப் பலர் பல முறைகளைக் கையாளுகிறார்கள். சிலர், குழந்தைகளுக்கு தங்கள் பெற்றோர்களின் பெயர்களை வைக்கிறார்கள். இன்னுஞ் சிலர் குலதெய்வங்கள், வழக்கமாய், தரிசனம் செய்யப்போகும் ஆலயங்களிலுள்ள மூர்த்திகள்—இவற்றின் பெயர்களை இடுகிறார்கள். இம் மாதிரிப் பெயர்களைத் தேர்ந்தெடுப்பது காலப்போக்கில் ஒரு கட்டுப்பாடாக வளர்ந்து வந்திருக்கிறது. கட்டுப்பாடுகளையும் பின் பற்றுபவர்களுக்குத் தான் குழந்தைகளுக்குப் பெயரிடுவது ஒரு தலைவலி.

சில ராஜ்யங்களைச் சேர்ந்த காட்டுவாசிகள், குழந்தைகளுக்குத் "தாமரைக் குளம்," "மண்ணெண்ணெய்," "வாதநோய்" என்றெல்லாம் பெயர்களிடுவது வழக்கமாம். இம்மாதிரிப் பெயர்களைப் பொறுக்கியெடுப்பது எதற்கென்றால் இவை காதுக்கினிமையாயிருப்பதனால் தானாம்.

குழந்தைகளுக்குப் பெயரிடுவதைப் பற்றிய பழக்கங்களில் அநேக சுவையான தகவல்களிருக்கின்றன. ஒரே குழந்தை தான் தங்களுக்குப் பிறக்குமென்று எதிர்பார்த்த ஒரு தம்பதிகள் தங்கள் குழந்தைக்கு 'மங்களம்' என்று பெயரிட்டனராம். மறுபடியும் இவர்களுக்கு குழந்தை பிறந்ததனால் 'அநுபந்தம்' என்று பெயரிட்டனராம். மற்றொரு தம்பதிகளுக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. ஒன்றுக்கு 'கேட்' (Kate) மற்றொன்றுக்கு 'டூப்ளிகேட்' (Duplicate) நகல் என்றும் பெயரிட்டனராம். ஆனால் மாதா கோயிலில் பாதிரி இந்தப் பெயர்களை பதிவு செய்து கொள்ள மறுத்ததனால் இவர் பேரில் கோர்ட்டில் புகார் செய்தார்களாம்.

பிரெஞ்சு தேசத்தில் ஒரு சங்கீத ஆசிரியர் தனக்குப் பிறந்த ஏழு குழந்தைகள் மூலம் தன் தொழில் அபிவிருத்தியடைய வேண்டுமென்ற கருத்தோடு இந்தக் குழந்தைகளுக்கு ஸப்த சுரங்களின் பெயர்களை வைத்தார். இதன் பிரகாரம் அவர் குழந்தைகள் 'ச' 'ரி' 'க' 'ம' 'ப' 'த' 'நி' என்ற பெயர்களில் விளங்கினார்களாம்.

நம் நாட்டில் ராமன், கிருஷ்ணன் என்ற பெயர்கள் சகஜமாயிருப்பது போல், மேல் நாடுகளில் 'ஸ்மித்' என்ற பெயர் சகஜமானது.

அமெரிக்காவில் ஒருவர் அந்தத் தேசத்திலுள்ள ஒன்றரை லட்சம் ஸ்மித்துகளுக்கும் தன் மகனைப் பிறந்த ஸ்மித்திற்கும் ஏதாவது ஒரு முக்கியமான வித்தியாசமிருக்கவேண்டுமெனக் கருதினார். சிறிது குள்ளமாயிருந்த அந்தப் பையனுடைய உயரத்தைக் குறித்து 'இரண்டே கால் முழம் ஸ்மித்' என்று பெயரிட்டாராம்.

பிரான்சில் ஒருவர் தனக்கு இருப்பத்தாறுவதாகப் பிறந்த குழந்தைக்கு 'நம்பர் 26' என்றே பெயரை வைத்து விட்டார்! மற்றொரு நபரின் பெயர் '1792–ம் வருஷம்' என்பதாகும். அவர் தனக்குப் பிறந்த நான்கு குழந்தைகளுக்கு 'ஜனவரி,' 'பிப்ரவரி,' 'மார்ச்சு,' 'ஏப்ரல்' என்று பெயர் வைத்துவிட்டார்.

குழந்தைக்குப் பெயரளிப்பதிலும் சிலர் அபார கிறுக்கர்களாயிருக்கிறார்கள். இங்கிலாந்தில் 'மிளகு' (Pepper) என்ற நாமங்கொண்ட ஒருவர் தன் அருமைப் பெண் குழந்தைக்கு ஆங்கில பாஷையிலுள்ள 26 எழுத்துகளிலும் ஒவ்வொரு பெயர் கொண்ட ஒரு 'நாமாவளி'யைப் பெயராக்கிவிட்டார். குழந்தைக்கு அளித்த பெயர்: (Anna Bertha Cecilia Diana Emily Fanny Gertrude Hypatia Inez Jane Kate Louise Maude-Nora Oliver Phelia Quince Rebecca Starkey Teresa Ulysses Venus Winifred Xenophon Yetty Zeno).

அமெரிக்காவிலுள்ள ஒரு தம்பதிகள் தங்களுக்குப் பிறந்த ஒரே மகனுக்குத் தகுதியான பெயர் எதை இடுவதென்று புரியாமல் தவித்தனர். முடிவில் அவன் இஷ்டப்படி பெயரை வைத்துக்கொள்ளட்டும் என்று விட்டுவிட்டார்கள். 1939-ஆம் ஆண்டில், இறந்த இந்த மகனும் 'அவன் ஆயுள்பூராவும் அவனுக்குத்தகுந்தபெயர் என்னவென்று புலப்படாததால் 'பெயரில்லாப் பூச்சி'யாகவே மாண்டுபோக நேரிட்டது.

குழந்தைகளுக்குப் பெயரிடும் விஷயத்தில் பெற்றோர்கள் பெருந்தீங்கு புரிகிறார்களென்று மேல் நாடுகளில் பெரும்பாலோரின் அபிப்பிராயம் இந்த அபிப்பிராயத்தினால் வருஷந்தோறும் பல்லாயிரக் கணக்கானவர்கள் சர்க்காருக்குத் தெரிவித்து தங்கள் பெயர்களை மாற்றிக்கொள்கிறார்கள்.

—*Sunday Standard.*

தன் குஞ்சு பொன் குஞ்சு!

ஒரு தாயார் தன் குழந்தையைப் பள்ளியில் சேர்ப்பதற்காக வந்தாள். அவள் ஆசிரியரைக்கண்டு அவரிடம் "என் கண்ணனை மிக ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளவேண்டும்; அவன் மிகவும் ரோஷக்காரன். அவன் ஏதாவது தவறுகள் செய்தால் அவன் பக்கத்தில் உள்ள பையனை அடித்தால் அவன் திருந்திவிடுவான்" என்று கூறினாள்.

நிஜாமும் காயிதே அஜாமும்

ஒரு சந்தர்ப்பத்தில் ஹைதராபாத் நிஜாமும் முஸ்லீம் லீக் தலைவர் ஜின்னுவும் சந்திக்க நேர்ந்தது. வழக்கம் போல் ஜனுப் ஜின்னு வாயில் சுருட்டை வைத்துக்கொண்டே நிஜாம் அறைக்குள் பிரவேசித்து அவர்முன்னுல் இருந்த நாற்காலிமீது அமர்ந்து கால்களை நீட்டினூர். தன்னை, ஆண்டவனை வணங்கு வது போல் வணங்குவோரை மட்டுமே வழக்கமாய் சந்திக்கும் நிஜாமுக்கு ஜின்னுவின் நடத்தை எவ்வளவு வெறுப்பையும் ஆத்திரத்தையுமளித்ததென்பது ஒரே கணத்தில் புலனுயிற்று.

"நான் யார் என்று தெரியுமா உனக்கு? ஹைதரா பாத் நிஜாமிடம் இப்படித்தானு நடந்து கொள்வது" என்று கோபாவேசத்துடன் சத்தம் போட்டார். நிஜாமின் இந்த எதிர் பாராத தாக்குதல் ஜனுப் ஜின்னுவைத் திடுக்கிடச் செய்தது. உடனே நீட்டிய கால்களை மடக்கிக்கொண்டார். சுருட்டை யும் விட்டெறிந்துவிட்டு நிஜாமிடம் மனமார்ந்த மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்.

ஆனுல் நிஜாமுக்கு வந்த கோபம் ஜனுப் ஜின்னு மன்னிப் புக் கோரியதால் தணியவில்லை. "உனக்கென்ன வேண் டும்? என்னிடம் நீ என்ன சொல்ல விரும்புகிருய்? என் றெல்லாம் கேள்விகளைக் கேட்டுக்கொண்டேயிருந்தார்.

சர் மிர்ஸா இஸ்மெயிலை ஹைதராபாத் பிரதம மந்திரியாக நியமனஞ் செய்வதைத் தடுப்பதற்காகத்தான் ஜனுப் ஜின்னு நிஜாமைச் சந்திக்க வந்திருந்தார். அதைப் பற்றி ஏதோ சொல்ல முயன்ருர். ஆனுல் அவர் வாயெடுப்பதற்கு முன்பே நிஜாம் "உன்னைப்போன்ற வெளி ஆட்கள் என் ராஜ்ய விவகாரங்களில் தலையிட நான் சம்மதிக்கமாட்டேன். என் காரியங்களைக் கவனித்துக்கொள்ள எனக்குத்தெரியும்" என்று நிஜாம் போட்ட சத்தம் அரண்மனை முழுவதுமே ஒலித்தது. நிஜாமுக்கு இதுபோன்ற கோபம் வந்து பார்த்ததே யில்லை யென்று நிஜாமின் அந்தரங்க ஆட்கள் கூறுகிருர்கள். இப்படி நிஜாம் கோபாவேசங்கொண்டிருக்கும் சமயத்தில், ஜனுப் ஜின்னு தன் யோசனையை நிராகரித்தால் நிஜாமுக்கும் அவ ருடைய சர்க்காருக்கும் முஸ்லீம் லீக் உதவியொன்றும் புரியா தென்று உளறிக்கொட்டிவிட்டார். இவ் வார்த்தைகள் நிஜா மின் காதில் பட்டவுடன் அவர்கோபம் எல்லையைக் கடந்தது.

"உன் உதவியை யார் நாடுகிருர்கள்? உன்னுல் எனக்கு இதுவரையிலும் ஒரு உதவியுமில்லை. இனிமேல் உன் உதவி யைக் கோரப்போவதுமில்லை. மறு கணத்தில், வேறு விஷ யம் ஒன்றும் பேசுவதற்கில்லாவிட்டால் நீ வெளியே போக லாம்" என்று சீறினூர்.

—*Caravan.*

நிருபருக்கழகு நிபுணத்துவம்

தினந்தோறும் பத்திரிகையில் எவ்வளவோ செய்திகளை படிக்கும் வாசகர்களுக்கு ஒவ்வொரு செய்தியையும் திரட்டுவதற்கு எவ்வளவு பாடுபட வேண்டுமென்பது தெரியாது. உதாரணமாக டில்லியில் இன்று நடக்கும் ஒரு நிகழ்ச்சி நாளை உலகமெங்கும் பரவும் ஒரு செய்தி. ஒரு செய்தி கிடைப்பதற்கு நிருபர்கள் எடுத்துக்கொள்ளும் முயற்சிகள் எவ்வளவென்று நாம் அனைவரும் அறிந்துகொள்ள வேண்டிய விஷயம்.

புது டெல்லியில் சுமார் இருநூறு நிருபர்கள் இருக்கின்றனர். எங்கு சென்றாலும் இவர்களைக் காணலாம். சமீபத்தில் இந்தோ-சீனா யுத்த நிறுத்த தூது கோஷ்டியின் கிளைகளுக்குத் தலைகளாகச்சில இந்தியர்கள் இந்தோ சீனாவிற்குச் சென்றிருக்கிறார்கள் இந்தியர்களை அனுப்புவார்கள் என்று தெரிந்தவுடன் இவர்கள் யார் என்று தெரிந்து கொள்வதற்கு நிருபர்கள் எவ்வளவோ முயற்சி செய்தும் பயனில்லாமல் போய்விட்டது. அயல் நாட்டு விவகார இலாகாவிலும் அயல்நாட்டுத் தூதர்களின் காரியாலயங்களிலும் அயல் நாடுகளிலிருந்து இங்கு வந்த தூதர்கள் தங்கும் ஹோட்டல்களிலும் நாட்கணக்காகக் காத்திருந்தும் ஒரு தகவலும் கிடைக்கவில்லை. மேற்கூறிய இடங்களிலெல்லாம் எந்தப் பிரமுகர்களைக் கண்டாலும் நிருபர்கள் அவர்களைக் கேள்விகள் கேட்டுத் தகவலை அறிய முயன்றார்கள். அன்றுடம் கூட்டங்கள் நடைபெற்றதென்றும் ஒருவரோடொருவர் அன்பாயும் ஆதரவாயும் அங்கத்தினர்கள் நடந்து கொண்டார்களென்றும் கூட்டம் இனிதாக முடிந்ததென்றும் சர்க்கார் அதிகாரிகள் அறிக்கைகளை வெளியிட்டு வந்

நக்ஷத்திர மாலை

ஒரு சினிமாப்பட முதலாளி தான் பிடித்துக்கொண்டிருந்த படத்தின் 'மின்னும் நக்ஷத்திரத்திற்கு' அவள் பிறந்த நாளன்று ஒரு முத்து மாலையைப் பரிசாக அளிக்கப்போவதாகத் தன் நண்பரிடஞ் சொன்னார்.

அதற்கு நண்பர் "ஒரு மோட்டார்காரை யளித்தால் அவளுக்கு உபயோகமாக இருக்குமே" என்றார்.

"முத்துமாலையில் போலி ரகம் மலிவாகக் கிடைப்பது போல் மோட்டார் காரில் போலி ரகங் கிடையாதே" என்றார் முதலாளி.

தனர். எவரும் செய்திகளை அளிக்காததால் தாங்களே உண்மையைக் கண்டு பிடித்து விடவேண்டுமென்று தீர்மானித்தனர் நிருபர்கள். இந்த முடிவுக்கு வந்த பிறகு செய்திகளுக்காக எங்கேபோவது யாரைப் பார்ப்பது என்ற கலக்கம் ஏற்பட்டது.

முடிவில் நிருபர்களுக்கு ஒரு யோசனை தோன்றியது. வெளியூர்களுக்குச் செல்வோர் அனைவருக்கும் அம்மைக் குத்துவது போல் காலரா, டைபாய்ட் முதலிய நோய்களைத் தடுப்பதற்கு இஞ்செக்ஷன் செய்துகொள்ள வேண்டுமல்லவா ? அதனால் புது டெல்லியிலுள்ள வைத்தியசாலைகளுக்கெல்லாம் சென்று எவரெவர்கள் மேற்கூறிய நோய்களுக்கு தடுப்பு இஞ்செக்ஷன் செய்துகொண்டிருக்கிறார்களென்று விசாரித்தால் சமீபத்தில்யார் யார் அயல் நாடுகளுக்குச் செல்லப் போகிறார்களென்பதை தெரிந்துகொள்ளலாம் என்ற ஆராய்ச்சியை ஆரம்பித்துவிட்டனர் டெல்லி நிருபர்கள்.

இரண்டே தினங்களில் இந்த இஞ்செக்ஷன் செய்துகொண்டவர்களின் ஜாபிதாவில் கண்டவர்களெல்லாம் இந்திய சர்க்கார் உத்தியோகஸ்தர்களென்பது நிருபர்களுக்குத் தெரிந்த விஷயம். பின்னர் எவரெவர்கள் இந்தோ சீனாவிற்குச் செல்லப்போகிறார்களென்பதை நிருபருக்கு யார் கூறவேண்டும்.?

செய்திகளைத் திரட்டும் வேலை, மனிதன் அவனுக்குத் தெரிந்த சாமர்த்தியமெல்லாம் உபயோகிக்கவேண்டிய துறையாகும் என்பதற்கு மேற்கூறிய சம்பவம் ஒரு தகுந்த உதாரணமாகும்.

—*Bharat Jyoti*, Bombay

காதை அறுப்பதா,
வாலை அறுப்பதா?

●

உத்தரப்பிரதேச மக்கள் படுந்துயரங்களிலொன்று குரங்குகள் புரியும் சேஷ்டைகளாகும்.

குரங்குகள் பயிர் பச்சைகளை அழித்துவிடுகின்றன. மரங்களில் ஏறிப் பழங்களைத் தின்றுவிடுகின்றன. இதனால் பழ வியாபாரிகளுக்கும் பழத் தோட்டக்காரர்களுக்கும் பெரும் நஷ்டமேற்படுகிறது. உத்தரப் பிரதேச சர்க்கார் குரங்குகளை ஒழிக்கவேண்டுமெனத் தீர்மானித்திருக்கிறார்கள். குரங்குகளைக் கொல்பவர்களுக்கெல்லாம் சன்மானம் அளிப்பதாக அறிக்கையும் விடுத்துள்ளார்கள்.

இதைப் பற்றி இப்போதுள்ள பிரச்னை ஒன்றே ஒன்று தான். குரங்குகளைக் கொன்றதற்கு அத்தாட்சியாக எதைக் கொள்வதென்பதே குரங்குகளைக் கொன்றதற்கு நம்பிக்கையான அத்தாட்சி கொடுப்போருக்குத் தானே சன்மானம் கொடுக்கமுடியும். இதைப் பற்றி ஒரு தீர்மானஞ் செய்வதற்காக ஒரிஸ்ஸா, பஞ்சாப், மத்தியப்பிரதேசம் முதலிய மாகாண சர்க்கார்கள் கையாண்டுள்ள வழிகளைப் பற்றி உத்தரப் பிரதேச சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் சமீபத்தில் ஆராய்ச்சி செய்தார்கள். இம் மாகாணங்களிலெல்லாம் ஒரு குரங்கைக் கொன்றால் ஒரு ரூபாயிலிருந்து இரண்டு ரூபாய்கள் வரை சன்மானம் என்ற திட்டம் அமலிலுள்ளது. குரங்கின் வாலோ நான்கு பாதங்களோ, அல்லது இவை இரண்டையுமோ அத்தாட்சியாகக் காண்பிக்கவேண்டும்.

உத்தரப் பிரதேச சர்க்கார் அதிகாரிகளுக்கு இந்த ஏற்பாடு அவ்வளவு திருப்திகரமாகத் தோன்றவில்லை. ஏதோ சில காரணங்களுக்காக குரங்கின் இடது காது தான் தகுந்த அத்தாட்சியாகுமென்று அவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். இதில் ஒரு நன்மை என்னவென்றால் குரங்கின் உடலை அவ்வளவாக ஹிம்சிக்கவேண்டியதில்லை யென்பது தான்.

குரங்கின் காதைப்போல் மற்றெந்தப் பிராணியின் காதுமிருக்காது. அதற்கிணையாக ஏதாவது மிருகத்தின் காது இருக்குமானால் அது மனிதனின் காதுதான். மனிதனின் காது எவருக்கும் ஒரு ரூபாய்க்கும் இரண்டு ரூபாய்க்கும் கிடைக்காதென்று திட்டமாய்க் கூறலாம். அதனால் உத்தரப் பிரதேச சர்க்காரின் யோசனை சரியானதென்பதுதான் எங்கள் அபிப்பிராயம்.

—*Statesman*, New Delhi.

இந்திய கடிகாரம்
தோன்றியது இந்தூரிலே

காந்திஜி தன் வாழ்க்கையில் முக்கியமாகக் கைக்கொண்ட ஒரு விரதம் சுதேசிப் பொருள்களையே உபயோகிப்பது என்பதாகும். இந்த விரதத்திற்கு விதிவிலக்காகச் சில விதேசிப் பொருள்களும் அவரிடம் இருந்தன. அவற்றில் ஒன்று 'பாக்கெட்' கடிகாரம் ஆகும்.

"காந்திஜியின் விதிவிலக்குப் பொருள்களின் ஜாபிதாவிலிருந்து ஒரு பொருளையாவது நீக்கிவிடுவேன்" என்று இந்தூரைச் சேர்ந்த முதியவர் ஒருவர் 32 ஆண்டுகளுக்கு முன்பு சபதம் எடுத்துக் கொண்டார். சபதப்பிரகாரம் அவர் ஒரு சுதேசி கடிகாரத்தை தயாரித்தார். அவர் துவக்கிவைத்த இந்த தொழிற்சாலை இந்தூர் சர்க்காரின் உதவியிலும் ஆதரவிலும் நடந்துவருகிறது.

இந்த தொழிற்சாலையைத் துவக்கியவர் பெயர் எம். ஏ. கஸ்தூரே. சர்க்கார் இலாக்காவில் குமாஸ்தாவாக இருந்துகொண்டிருந்த இவர் ஓய்வு நேரங்களில் ஒரு சுதேசி கடிகாரத்தை தயாரிக்க முயற்சி செய்துகொண்டிருந்தார். 1935-ம் ஆண்டில் மகாத்மா காந்திஜீயின் பிறந்த தினத்தன்று ஒரு சிறு கடிகாரத்தைத் தயாரித்து தன் சபதத்தை நிறைவேற்றினர். காந்திஜீக்கு தான் ஒரு சிறு கடிகாரத்தை தயாரித்துள்ளதாக தந்தி மூலம் அறிவித்தார். சில தினங்கள் கழித்து அதை காந்திஜிக்கு அனுப்பிவைத்தார். மிகச் சிறிய அளவில்தான் ஸ்ரீமான் கஸ்தூரே தன் கடிகாரத் தொழிற்சாலையைத் தோற்றுவித்தார். பிறகு இவருடைய தொழிற்சாலையில் பல பெரிய, பெரிய கடிகாரங்களைத் தயாரித்துள்ளார்.

கடிகாரத்தின் பாகங்கள் அனைத்தையும் கஸ்தூரே தன் தொழிற்சாலையிலேயே தயாரிக்கிறார். இந்தியாவில் தயாரிப்பது மிகச் சிரமமென்று கருதப்படும் பாகங்களைக்கூட ஸ்ரீ கஸ்தூரே இங்குதான் தயாரிக்கிறார். கடிகாரத்தின் முக்கிய பாகங்களின் திருகுகள், 'ஸ்பிரிங்குகள்' இன்னும் நுணுக்கமான பாகங்கள் யாவும் இவருடைய தொழிற்சாலையிலேயே தயாராகின்றன என்பது மகிழ்ச்சிக்குரிய உண்மையாகும்.

கடிகாரத்திலுள்ள பாகங்கள் மட்டுமின்றி இந்தப் பாகங்களைத் தயாரிக்கும் இயந்திரங்களும் ஸ்ரீமான் கஸ்தூரேயால் தயாரிக்கப்பட்டவை. ஸ்ரீ கஸ்தூரேயின் தொழிற்சாலைக்குப் படாடோபமான கட்டிடங்கிடையாது. தன் தொழிலை ஒரு குடிசைத் தொழில் என்று கருதும் ஸ்ரீ கஸ்தூரே ஒரு சாதாரண கூரை வேய்ந்த குடிசையில்தான் தன் தொழிற்சாலையை நடத்துகிறார்;

—*Hindustan Times*, New Delhi.

திருக்குற்ருலம்

"தில்லையிலும், சேதுவிலும்,
[காசியிலும்
வாசிபெறும் திருக்குற்ருலம்
சொல்லையிலும் நாவூறும்,
[கேட்கையிலும்
செவிதிறக்கும்."

இந்தியாவிலுள்ள சிம்லா, கொடைக்கானல், உதகமண்டலம் போன்ற கோடை வாசஸ்தலங்களில் மிகவும் சிறந்தது திருக்குற்ருலம். எத்தகைய சீதோஷ்ணப் பிரதேசங்களில் வாழ்பவர்களுக்கும் சுகாதார பேதம் விளைவிக்காமல் சுகாதாரத்தை அபிவிருத்தி செய்வது திருக்குற்ருலம்.

திருக்குற்ருலம் மேற்குத் தொடர்ச்சி மலையின் தென் பாகத்தில் உள்ளது. இது தென்காசியிலிருந்து மூன்று மைல்களுக்கு மேற்கே உள்ளது. மலையின் வடகீழ் பாகத்தில் க்ஷேத்திரம் அமைந்திருக்கிறது. மூர்த்தியின் பெயர் குற்ருல நாதர். அம்பிகையின் பெயர் குழல்வாய் மொழி. சிவக்ஷேத்திரங்களிலே இது மிகவும் முக்கியமானதாகும். இது தேவாரப் பாடல் பெற்ற ஸ்தலம். பதினெட்டு சித்தர்களும் குற்ருல மலைமீதிருந்ததாக அருணகிரி நாதரும் திருப்புகழில் கூறியுள்ளார்.

பார்ப்போர் மனம் பரவசமடையும்படி குற்ருல மலை, மிகுந்த இயற்கை வளம் உடையது. இம் மலையிலே உற்பத்தியாகும் நதிக்கு 'சித்ரா' நதி என்று பெயர். 'ஞானிகளும் அறியாச் சித்ரா நதிமூலம்' என்ற பெரியோர்களின் வாக்குக்கிணங்க மலைமீதுள்ள கானகத்தில் இந்நதியின் உற்பத்தி ஸ்தானத்தைக் கண்டு கொள்ள இயலாது. இந்நதி மலைமீதிருந்து அருவியாக விழுகின்றது. இது சுமார் 35 அடி உயரத்திலிருந்து விழுகிறது. கோவிலின் தென் மேற்குப் பாகத்தில் தான் இது இருக்கிறது.

மே, ஜுன், ஜுலை ஆகிய மாதங்களே குற்ருலத்தில் வசிப்பதற்குத் தகுந்த மாதங்களாம். தென் மேற்கு பருவக்காற்று (South West Monsoon) பாலக்காட்டுக் கணவாய் வழியாக குற்ருல மலைமீது மோதுகிறது. ஆகையால்தான் இவ்விடத்தில் மேற்கூறிய மூன்று மாதங்களிலும் சாரல் மழை பெய்கிறது.

குற்ருலத்தில் பெய்யும் சாரல் மழையில், இடி, மின்னல் இருக்காது. கோடை மழை போலவும், ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் பெய்யும் கால மழை போலவும், அதி உக்கிரமான கனத்த மழையாகவும் பொழியாது. மெல்லிய நீர்த்துளிகளே மழையாகப் பொழியும். பார்ப்பதற்கு ஒரு புகைபோல் தோன்றும். பத்துநிமிஷங்களில் மூன்று முறை மழைபெய்து வெறிக்கும் சரீரத்திற்கு சுகத்தைக் கொடுக்கக்கூடிய மெல்லிய குளிர்ந்த காற்று வீசிக்கொண்டே இருக்

கும். சிற்சில சமயங்களில்தான் சூரிய வெளிச்சம் தென்படும். வெயிலும் மஞ்சள் வெயிலாகவே அடிக்கும். வெயில் அடித்துக்கொண்டிருக்கும் பொழுது மழை பெய்யும். மழைத்துளிகளெல்லாம் அவ்வேளையில் வெயிலின் நிறமாகிய மஞ்சள் நிறமாகவே, மஞ்சள் நீராட்டுவது போன்று ஆனந்தமாகக் காட்சியளிக்கும் மஞ்சள் மழை. ஆம், மஞ்சளை அரைத்து எங்கும் தெளிப்பது போல் ஒரே மஞ்சளாக இருக்கும். மாநிலத்தோரே! உங்கள் வாழ்க்கையில் மங்களம் உண்டாவதாக! என்று வான லோகத்தில் உள்ளவர்கள் மஞ்சள் நீர் மூலம் நமக்கு வரப்பிரசாதம் கொடுப்பது போலும் அங்கே மஞ்சள் மழை பெய்யும். மெல்லிய ஆடை அணிந்து கட்டிடத்திற்குள் இருக்காமல் வெளியிலே நிற்கலாம். ஒரு மழையில் வஸ்திரமெல்லாம் நனையும். அதை யடுத்து வீசும் மந்தமாருதத்தில் ஆடைகளெல்லாம் உலர்ந்து விடும். கோடை மழை, கால மழை இவற்றில் நனைவதால் ஏற்படும் ஜலதோஷம், டைபாய்டு, நிமோனியா போன்ற ஜுரங்கள் குற்ருலத்தில், சுகாதாரத்திற்காக வந்தவர்கள் சாரல் மழையில் நனைவதால் ஏற்படுவதில்லை.



குறும்பலா ஈஸ்வரர் ஆலயம் [பின்புறம் மலைச்சாரல்]

சுகாதாரத்தை விரும்பி திருக்குற்ருலத்தை நாடிவருபவர்கள் அருவியில் நீராடுவதற்கு மிகுந்த ஆவலுடன் இருப்பார்கள். அருவியில் நீராடுவதனல் தான் உண்மையில் எல்லோரும் சுகாதாரத்தை அடைகிருர்கள். அருவியில் நீராடவேண்டுமென்று அருவியை நாடி வந்தவர்கள் தன்னை மறந்து மலையில் உள்ள பல ஜாதி மரங்கள் வானளாவிச் செழித்து முகில் தாங்கி நிற்கும் காட்சியைக் கண்டு பிரமித்து விடுவார்கள். அம்மரங்கள் கற்பாறையிலேயே பிறந்து, வளர்ந்து, வைபிரமாகி வானத்

தைத் தொடும் அளவு கம்பீர மாக காட்சி அளிப்பதைப் போல், வாழக் கூடியவர்கள் எப்படியும் வாழலாம் என அம் மரங்களே பார்ப்பவர்களுக்கு கற்பனையின் மூலம் பாடம் கற் பிப்பதைக் கண்டு தம்மையே மறந்து நிற்பார்கள். இவ்வித மாக அரை மணி நேரம் பிர மித்து நின்றுவிட்டு பின் தேறிய மனதோடு அருவியில் நீராடச் சித்தமாவார்கள்.

அருவியை அடுத்து அவர்கள் செல்லச் செல்ல அதிகமான குளிர் ஏற்படும். நடுக்கமும் உண்டாகும். பின்னர் அருவி யில் போய் நின்றவுடன் குளிர்ச்சி சரீரத்தைப் பாதிப்ப தில்லை. அருவியில் நிற்கும் பொழுது சரீரத்தில் உள்ள உஷ்ணம் வெளியேறுவதால் சரீரத்தில் ஒருவித உஷ்ணம் தோன்றும். சரீரத்தில் உள்ள இரத்தமெல்லாம் வேகமாக ஓடும். நீராடுவோர்களுக்கு அருவியை விட்டு வெளியே வரு வதற்கு மனமே வராது. சிலர் ஒரு மணி அல்லது இரண்டு மணி நேரம் வரை நீராடுவார்கள். குளித்துவிட்டு வெளியே வந்தவுடன் குளிரே அவர்களுக்குத் தோன்றுவ தில்லை. குளிர்ந்த காற்று, மழை இவைகள் அவர்களின் சரீரத் திற்கு மிக சுகமாகத் தெரியும். சரீர நடுக்கமே ஏற்படாது. உறைவிடம் தேடவேண்டிய அவ சியமும் கிடையாது.

முதலில் குற்றாலத்தில் குளிப் பவர்களுக்கு முதல் மூன்று நாட்களில் உஷ்ணம் அதிகரிக் கும். பின்னர் ஒரு வாரத்தில் சமநிலையை அடையும். குற்றா லத்தில் குறைந்தது ஒரு மாத மாவது இருக்கவேண்டும். சாரல் மாதமாகிய மூன்று மாதங்களிலும் குற்றாலத்தில் தங்குவது மிகவும் நல்லது. ஒரு மாதமோ அல்லது மூன்று மாதங்களோ குற்றாலத்தில் தங்கு பவர்களுக்கு ஒரு வருஷம் வரை எவ்வித உஷ்ண ரோகங்களும் ஏற்படாது என்று உறுதியாகக் கூறலாம். குற்றாலத்தின் அருவி பலவித மூலிகைகள்மீது மோதி வருவதால்தான், அந்த நீரில் சஞ்சீவிகள் கலக்கப்பட்டு வியாதியையும் குணமாகும் படிச் செய்கிறது. அருவியின் நீர் மக்களுக்கு ஓர் ஔடதமாக இருக்கின்றது.

இரத்த அழுத்தம், பித்தப் பைத்திய, சித்தப் பிரேமை போன்ற கொடிய வியாதிக ளெல்லாம் அருவியில் நீராடுவ தால் குணமாகிறது.

ஆலயத்தின் தென் மேற்கி லிருக்கும் இவ்வருவியைத் தவிர மற்றும் பல அருவிகள் இருக் கின்றன.

செண்பகாதேவி என்று ஒரு அருவி இருக்கின்றது. இந்த அருவி சுமார் 20 அடி உயரத்திலிருந்து விழுகின்றது. அதன் பக்கத்தில் செண்பக வல்லி அம்மன் என்ற ஆலய மும் இருக்கின்றது. பௌர்ணமி தோறும் அதற்குப் பக்தர்கள் சென்று வருகிறார்கள். இது

காட்டுக்குள் சுமார் ஒரு மைல் இருக்கும்; மலைமீது ஏறிவரும் மாநிலத்தோரே! உங்களுடைய வாழ்க்கையிலும் இப்படியே தான் ஏற்றத்தாழ்வுகள் உண்டு என்று நமக்கு வழிகாட்டும் பாதையின் வழியேதான் பிரயாணிகள் செல்வார்கள். காய்ந்த சருகுகளும், பழுத்த இலைகளும் இப்பாதையில் நடப்போர்களுக்கு மெத்தைகள் போல் இருக்கின்றன. மரங்களிலிருந்து விழும் பூக்கள் அவர்களுக்கு மாலை யணிவிப்பது போலிருக்கும். நீர் வீழ்ச்சியிலிருந்து துள்ளிவரும் நீர்த்துளிகள் அவர்களுக்கு பன்னீர் தெளித்து அவர்களை வரவேற்பதுபோலும் இருக்கும். இவ்வளவு சிறப்புக்கள் செய்து வழிப்போக்கர்களை வரவேற்கின்றது செண்பகாதேவி. தென்றல் காற்றிலே மிதந்துவரும் செண்பகமலரின் நறுமணமும், குயில்களின் கீதமும், மற்றும் புஷ்பக் கொடிகள் காற்றினால் உல்லாசமாய் நடனமாடும் காட்சியும் வழிப்போக்கர்களின் களைப்பைத் தீர்க்கின்றன. மனக் கவலையை மாற்றுகின்றன.

சிற்றருவி :—இது ஆலயத்திலிருந்து நேர் வடக்காக இருக்கின்றது. இது சமதளத்திலிருந்து சுமார் 2 பர்லாங்கு தூரத்தில் மலையில் இருக்கிறது. அருவி சுமார் 8 அடி உயரத்திலிருந்து விழுகிறது. இவ்வருவிக்கு நேர் வடக்காக அரை மைல் தூரத்தில் 'சித்திரசபை' என்று ஒரு ஆலயம் இருக்கின்றது. மூர்த்தி நடராஜர். சிவனின் திருவிளையாடல்களை சுவரில் சித்திரமாகத் தீட்டப் பட்டிருக்கின்றது. கட்டிடத்தின் மீது செம்பாலான தகடுகளை ஓடுகளாக வேயப்பட்டிருக்கின்றன. அதற்கு முன் தெப்பம் ஒன்று இருக்கிறது. தை மாதம் மகநட்சத்திரத்தில் தெப்பத் திருநாள் அங்கு மிகச் சிறப்பாக நடைபெறும். அத்திருவிழாவின் போது ஐந்து ரதங்கள் ஓடும். இக் கருத்தைத்தான் 'ஐந்து ரதம் ஓடும் அதிக ஸ்தலம் குற்றாலம்' எனப் பெண்கள் தமது தாலாட்டுப் பாட்டில் கூறுகிறார்கள்.

ஐந்தருவி:—இது குற்றாலத்திலிருந்து சுமார் இரண்டரைமைல் தூரத்தில் நேர்மேற்காக இருக்கின்றது. 'சித்திர சபை'யின் தென்புரத்திலிருந்து ரோடு செல்கின்றது. ஒரே நீரோட்டம் மலைச் சரிவில் ஐந்து பிரிவாகப் பிரிந்து விழுகின்றது. ஐந்து அருவிகள் விழுவதால் இதற்கு ஐந்தருவி எனப் பெயர் வந்தது. இவற்றின் உயரம் சுமார் எட்டு அடி.

தேனருவி:—இந்த அருவியில் தேன் ஓடி வராது. சிறப்புப் பெயருக்குத்தான் தேனருவி என்று பெயர். இங்கே தேன் கூடுகள் அதிகம் இருப்பதனால் தான் மேற்கூறிய பெயர் வந்தது. இது சுமார் 5 மைல் தூரம் மலைமீது இருக்கின்றது. இது 40 அடிஉயரத்திலிருந்து விழுகிறது. துணையாட்களோடுதான் இங்கு செல்லவேண்டும். மனத்துணி

வும், சரீர திடகாத்திரமும் உள்ள வர்கள் அதில் நீந்திப் போய் குளிக்கலாம். இவ்வருவியின் தென் பாகத்தில் தெற்கு மலை என்றொரு எஸ்டேட்டும் இருக் கின்றது.

புலி அருவி (Tiger Falls) குற்றாலத்திலிருந்து கிழக்கே சுமார் 4 மைல் தூரத்தில் இருக் கிறது. மலையின் கானில் ஓடும் நீரோடையிலிருந்து வெட்டி செயற்கை நீர் வீழ்ச்சியாகவும், குளிப்பதற்கு வேண்டிய வசதி யோடும் இதை அமைத்திருக் கிறார்கள்.

திருவிதாங்கூர் ராஜப்பிரமுக ருடைய மாளிகை, நான்குசதுர மைல் அமைந்த தோப்பின் நடு விலே மிக உன்னதமாக அமைந் திருக்கின்றது. அதுபோலவே பல குறுநில மன்னர்கள், பிர பல பிரபுக்கள், பேர் பெற்ற தன வைசியர்கள் ஆகியோர் களின் மாளிகைகளெல்லாம் ஏராளமாய் இருக்கின்றன. சாரல் காலத்திலே மேற்கூறிய சகல பிரமுகர்களும் ஏராள மாய் குற்றாலத்திற்கு வந்து சேர் வார்கள். அச்சமயம் குற்றாலம் பார்ப்பதற்கு ஒரு 'பூலோக சுவர்க்கம்' போலவே காட்சி யளிக்கும்.

இன்னும், சிலு சிலு வென்று ஓடும் சிற்றோடைகள், சிற்பி களின் சிற்றுளியின் கீதங்கள், கண்ணைக்கவரும் கட்டிடங்கள், உல்லாச ஊஞ்சலாடும் புல் வெளிகள், களிப்புக் கொஞ்சும் வெளிப்புறங்கள் இவை யெல் லாம் கண்கொளாக் காட்சி யாகும். இவை மட்டுமல்ல இன்பம் தருவது. இன்னும் அநேகம் இருக்கின்றன. மலை யின் அருவி, மாமயிலின் நட னம், மழலையின் சிரிப்பொலி, மங்கையின் சிலம்பொலி, மண் டபத்தின் எதிரொலி, சித்திர சபையின் எழில் மிகுந்த ஓவி யங்கள், ஆஹா! என்ன இன் பம். என்ன இயற்கைக் காட்சி என்னே இறைவனின் படைப்பு!

இது தவிர, திருக்குற்றால மலை யில் சத்துப் பொருந்திய மிகுந்த அபூர்வமான பொருள்களும், வாசனைப் பொருள்களும், ஏரா ளமாகக் கிடைக்கின்றன. மங் கிஸ்தான் என்ற பழம் உஷ் ணப் பிரதேசத்தில் கிடைப்ப தில்லை. இங்கு இவை ஏராள மாய் கிடைக்கின்றன. இது உடலுக்கு மிகவும் குளிர்ச்சியை அளிக்கும். இப்பழம் நாவில் பட்டதும் 'ஐஸ்'போன்று தான கவே கரைந்துவிடும். இதன் இனிமைக்கு எந்த இனிமையும் உவமானம் சொல்லமுடியாது. அதைப் புசித்தவர்களுக்கே தெரியும் அதன் ருசி.

தவிர, மா, பலா, வாழை ஆகிய முக்கனிகள் ஏராளமாய் கிடைக்கும். பலாவில் சிலாக்கிய மான வேர்ப் பலா, வர்க்கைப் பலா முதலிய அதிமதுரமான பலாப் பழங்களுக்கு புகழ் பெற்ற இடம் திருக்குற்றாலமே. ஏராளமான சந்தன மரங்கள் உண்டு. கிராம்பு, ஏலக்காய், ஜாதிக்காய் இவையும் இங்கே

ஏராளமாய் கிடைக்கும். எப்பொழுதும் குற்றாலத்தைப் பரிமளிக்கச் செய்யும் செண்பக மலரும் ஏராளமாய் உண்டு. செண்பகமலரை பெரும்பாலோருக்குத் தெரியாமல் இருக்கலாம். புஷ்பவகைகளிலே செண்பகம் போன்ற மிகுந்த வாசனையுடைய புஷ்பம் எதுவுமே இல்லை என்று கூறலாம். ரோஜா மிகவும் எழில் உடையது. சுமுகமான வாசனையுடையது. ஆனால் செண்பகமோ ரோஜாப்பூ போன்று பார்வைக்கு மிகுந்த அழகில்லையாயினும் அதன் வாசனை அனுபவிப்பதற்குக் களிப்பூட்டும் சக்தி உடையது. புஷ்பம் இருந்த இடத்திலிருந்து வெகுதூரம் வரை அதன் நறுமணம் வீசும். நாள் முழுவதும் அதன் வாசனை இருந்துகொண்டே இருக்கும்.

அப்புஷ்பத்தை வைத்திருந்த வஸ்திரங்களிலும் இதர பொருள்களிலும் இவ்வாசனை பல நாட்களுக்கு இருக்கும்.

பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவில் நிலைத்த சமயத்தில் குற்றாலத்தின் சிறப்பைக் கண்ணுற்ற மலையாளத்து மகாராஜா கன்னியா குமரியை பிரிட்டிஷாரிடம் விட்டுவிடுவதாகவும் அதற்குப் பதில் திருக்குற்றாலத்தை தமக்கு விட்டுவிட வேண்டுமென்றும் ஓர் ஒப்பந்தம் செய்யக் கோரினார். ஆனால் அதற்குப் பிரிட்டிஷார் இணங்கவில்லை. நம் நாட்டிலுள்ள சுகவாச ஸ்தலங்களில் திருக்குற்றாலம் தலைசிறந்து விளங்கும் உண்மையைக் கண்டுதான் பிரிட்டிஷார் அவ்விதம் இணங்க மறுத்தது.

நம் நாட்டினர், அதிலும் நம் தமிழ் நாட்டினரில் பலர் இன்னும் இத்தகைய உயரிய சுகாதார சுகவாசஸ்தலமாகிய திருக்குற்றாலத்தைப் பாராமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்கது. நம் தமிழ் நாட்டிலுள்ள பெரிய தனவந்தர்களும் சுக வாழ்வைத் தேடி சிம்லா முதலிய இடங்களுக்குச் செல்லாது, அச் சுக வாழ்க்கைக்கு திருக்குற்றாலத்தை நாடி வருவது மிகவும் நல்லது. திருக்குற்றாலத்திற்கு வருவது, பொருளாதார சிக்கனத்துடன் அதிக ஆரோக்கியமும் அபிவிருத்தியாகிறது.

தவிரவும் நடுத்தர மக்களும், சாதாரண மக்களும், அவர்களின் பல குடும்ப இதர தொழில் துறைகளுக்கிடையே, நம் தமிழ் நாட்டிலுள்ள திருக்குற்றாலத்தைக் கண்டு ஆனந்திப்பது அவர்கள் தமிழ் நாட்டில் பிறந்ததின் பெரும் பயனாகும்.

—எஸ். தெட்சணாமூர்த்தி

சமூகத்தில் அநேகர் இவ்விரு பிரச்னைகளி லொன்றுல்தான் பாதிக்கப்படுகின்றனர்.

இரு கடிதங்கள்

மூத்த மகளின் கடிதம்

அன்புள்ள அம்மாவுக்கு,

இங்கு க்ஷேமந்தான்.

ஏன் நீங்கள் யாரும் இப்பொழுது வருவதே கிடையாது. நீ வந்து ஒரு இரண்டு மாதங்கள் இருந்தால், எனக்கு கொஞ்சம் நிம்மதி ஏற்படும். நானும் எதிர்வீட்டு மங்களம் மாதிரி கல்யாணம் பண்ணிக்கொள்ளாமல் ஒரு உபாத்தியாயினியாகவோ அல்லது நர்ஸாகவோ போயிருந்தால், எவ்வளவோ நன்றுயிருந்திருக்கு மென்று நான் அடிக்கடி ஏங்குவதுண்டு. இப்பொழுது அப்படி நினைப்பதில் என்ன பலன்? சம்சார சாகரத்தில் இடிபட்டுக் கொண்டு, போதும், இந்த குழந்தைகளுடன் தினமும் போராடி சமாளிப்பதே ஒரு பெரிய காரியமாக இருக்கிறது.

ராகவன் பிறந்தபொழுது ஒரு குழந்தை போதும் என்று சொல்லிக்கொண்டு வந்தேன். ஆனல் இப்பொழுது எனக்கு ஏற்பட்டிருக்கிற சந்தான விருத்தி அவர் பரம்பரை வழியிலும், என் பரம்பரை வழியிலும் இல்லாத ஒரு நூதனமாயிருக்கிறது. கல்யாணம் ஆன ஏழு வருடங்களுக்குள் ஐந்து குழந்தைகளுக்குத் தாயாராகிவிட்டேனென்றல் எனக்கு எங்கிருந்து நிம்மதி ஏற்படும்!

புதுக் குடித்தனம் பண்ணின ஒரு வருடத்திற்குள் ராகவன் பிறந்தான். மறுவருடத்தில் 'லக்ஷ்மி' அவனேடு தினம் குஸ்தி போடுவதற்கே பிறந்தாள். ஒரு பிள்ளை. ஒரு பெண் என்ற கர்வத்திலே காலங்கழித்தேன். காசிக்குப் போகவேண்டிய தொல்லையில்லை; மலடியென்ற பெயரும் வாங்கவேண்டிய நியாயமும் இல்லை. மூன்ரும் வருடத்தில் 'குவா குவா' என்று கூவிக்கொண்டு 'சீனு' பிறந்தான். பிறகு அவனுக்குப் போட்டியாக பத்மா'. கல்யாணம் ஆன ஏழாம் வருடத்தில் அவதரித்தவன் கோபு'.

இவர்களின் பெயர்கள் கூட உனக்குச் சரியாகத் தெரியாது என்று நினைக்கிறேன். பெரிய பையன் ராகவன் பள்ளிக்கூடம் சென்று படிக்கிருன். இவன் படுத்தும்பாடு கொஞ்சம் நஞ்சமல்ல. ஜவஹர்லால் போட்டுக்கொள்கிறமாதிரி ஒரு ஷெர்வாணியும் ஜிப்பாவும் வேணுமாம். நிஜார், பூட்ஸ், தலைக்கு ஹாட் இல்லாமல் பள்ளிக்கூடத்திற்கு கிளம்புவது கிடையாது. பிஸ்கட், சாக்லெட், ஸ்வீட்ஸ், எல்லாம் வாரத்திற்கு நான்கு ரூபாய்கள் செலவு.

லக்ஷ்மியும் வீட்டுக்குக்கிட்ட இருக்கிற ஒரு பள்ளிக்குப் போகிருள். இவளுக்கு தினம் அரை டஜன் பலப்பத்துண்டுகள் தர வேண்டும். தினம் தலையில் வைத்துக்கொள்வதற்கு இரண்டணு பூ வாங்கவேண்டும்.

ராகவன் பள்ளியிலிருந்து வரும் போதே ஏதாவது ஒரு சண்டையுடன் தான் வீட்டுக்கு வருவான். கொஞ்சம் போக்கிரி. ஏதாவது ரத்த காயம் தினம் உடம்பில் தெரியும். நேற்றைய தினம் 'பத்மா' என்ன செய்தாளென்று முக்கியமாய் உனக்குத் தெரியப்படுத்தவேண்டும். உன் மாப்பிள்ளை புதியதாய் வாங்கின பவுண்டன் பேனவை எடுத்து, சாக்கட்டியால் எழுதுகிறமாதிரி தரையில் முனையைக் கொண்டு கிறுக்கிவிட்டு, தன் பற்களால் பதம் பார்த்துவிட்டாள். பேனவின் உயிர்போய்விட்டது. முதுகில் ஒன்று சூடாகவே கொடுத்துவிட்டேன். "பேன போனல் போகிறது. குழந்தைகளை அடித்தால் கையை நொறுக்கி விடுவேன்" என்று உன் மாப்பிள்ளை குழந்தைகளுக்கு பரிந்து பேசுகிருர்.

சப்தஸ்வரங்களையும் எங்கள் வீட்டில் கேட்கலாம். ஒரு குழந்தை முகாரி பாடும். ஒன்று இருமிக்கொண்டிருக்கும். ஒன்றை ஒன்று மிரட்டிக்கொண்டிருக்கும். எல்லாம் ராக்ஷச கும்பல்கள். ஒரு ரப்பர் பந்து, ஏன், ஒருபலூன் வாங்கினல்கூட அரை டஜன் வாங்கவேண்டியதாயிருக்கிறது என் நிலைமை.

அம்மா! அடுத்த தடவை நான் உன்னை நமஸ்காரம் பண்ணும் பொழுது 'பத்தும் பெற்று பெருவாழ்வு வாழவேண்டும் என்று ஆசீர்வாதம் செய்யாமல், 'குழந்தைகள் போதும்' என்று ஆசி கூறுங்கள்.

இப்படிக்கு
உன் பிரியமுள்ள மூத்த மகள்,
ராஜலக்ஷ்மி.

II

இரண்டாவது மகளின் கடிதம்

பிரியமுள்ள அன்னைக்கு,

உன் கடிதம் வந்து சேர்ந்தது. ராஜம் தன் குழந்தைகளுடன் சவுக்கியமாய் இருப்பதாக எழுதியிருந்தாயே! நீ போய் அங்கு குழந்தைகளை பார்த்துவிட்டு வா! அப்பொழுது தான் பேரன் பேத்திகளுக்கும் உன்னிடம் பற்று இருக்கும்.

இங்கு பிள்ளை விசாரமே பெரிதாய்ப் போச்சு. சந்ததிக்கு பிள்ளையில்லாமல் போனாலும் ஒரு பெண்ணாகிலும் ஏன் பிறக்கக் கூடாது. ஆமாம் எதற்கும் கொடுப்பனை வேண்டும். அரச மரத்தை சுற்றவோ, விரதங்களை அனுஷ்டிக்கவோ ஒன்றும் குறைச்சல் கிடையாது. நீ கூறியபடி காசிக்கும் ராமேஸ்வரத்திற்கும் போய் வந்தோம். அப்பா யோசனைப்படி நாகப் பிரதிஷ்டை செய்தாய்விட்டது. ராஜத்தின் அகத்துக்காரர் எழுதியபடி கர்ப்பப்பை பரிசோதனைக்காக பெண்கள் ஆஸ்பத்திரியில் ஒரு வாரம் இருந்தேன். பணத்தை தண்ணீர் மாதிரி செலவு செய்தாகிவிட்டது.

திருச்செந்தூரில் யாரோ சாமியார் இருக்கிறார். குழந்தையில்லாதவர்களுக்கு ரக்ஷை கொடுக்கிறாரென்று கேள்விப்பட்டு உன் மாப்பிள்ளையும் நானும் மூன்று மாதத்திற்கு முன்பு அங்கே சென்று வந்தோம். செலவு ரூபாய் ஐம்பதுக்கு மேலேதான். பலனோ—மக்குப் பையன், கணக்குப் பரீக்ஷயில் வாங்கும் சுழி தான்!

என் நாத்தனாருக்கு இப்பொழுது மூன்றாவதாக ஆண் குழந்தை பிறந்திருக்கிறதாம். இவர் மாமா ஆசீர்வாதமாக ரூபாய் நூறு தந்தி மணியார்டர் செய்தார். குழந்தைகள் மூலம், அண்ணா தம்பி மூலம் செய்துகொள்வதற்கு அதிர்ஷ்டம் பண்ணியிருக்கவேண்டும். இங்கு ஒரு குழந்தைக்கு தவம் கிடக்கிறோம். ஊரார் குழந்தைகளுக்கு யோகம் அடிக்கிறது.

எனக்கு ஒரு யுக்தி தோன்றுகிறது அம்மா. ஏன்? ராஜத்தின் ஐந்து குழந்தைகளில் ஒன்றை அழைத்து வந்து வைத்துக்கொள்ளக்

கூடாது. ஏதாவது நல்ல சூடிகையாயிருக்கிறதை ஏன் வளர்க்கக் கூடாது : உடனேபதில்.

இப்படிக்கு
உன் பிரியமுள்ள மகள்,
விசாலாட்சி.

III

அன்னையின் கவலை

"இந்த இரண்டு கடிதங்களும் என் மனசைப் பிளக்கின்றன. ஒன்று குழந்தையே இல்லாது சந்ததியே போய்விட்டாற்போல் அலறுகிறது. மற்றொன்று அதிகமான குழந்தைகளைப் பெற்று குடும்ப பாரத்தைச் சுமக்க முடியாமல் தவிக்கின்றது.

விசாலாட்சிக்கு ராஜத்தின் குழந்தைகளில் ஏதாவது ஒன்றை வளர்க்கவேண்டுமென்ற ஆசையிருக்கிறது. அவள் புருஷன் சம்மதிக்க வேண்டும். தன் சந்ததி விளங்கவேண்டுமென்றால் விசாலாட்சியின் கணவன், தன் தம்பி குழந்தைகளில், ஒன்றைத்தான் தத்து எடுத்துக்கொண்டு வளர்ப்பான். ராஜத்தின் குழந்தையை நாட மாட்டான். ராஜத்தின் புருஷனும் மகா முன்கோபி. அவன் குழந்தையை தத்துக்கேட்டால் "என்ன நிறைய குழந்தைகள் பெற்றுவிட்டேன் என்று கேலியா? தத்து என்ற பேச்சு எடுத்தால் வெளியே துரத்துவேன்'' என்று கத்துவான். கடவுள் விட்டவழி நடக்கட்டும்'' என்றாள் காமாக்ஷி.

—நாமகிரி ஸ்ரீனிவாசன்.

முடிசூடிய மன்னரும் முடிசூடா மன்னரும்

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி நிலவியிருந்த காலத்தில் இந்திய சுதந்திர இயக்கத்தை மிகத் தீவிரமாக எதிர்த்துக்கொண்டிருந்த பிரிட்டிஷாரானவர் சர் சாமூவேல் ஹோர் என்பவர். இவர் ஒரு காலத்தில் இந்தியா மந்திரியாயிருந்தார். இப்பொழுது இவருக்கு 'டெம்பிள்வுட்' பிரபு என்ற பட்டத்தைப் பிரிட்டிஷ் சர்க்கார் அளித்திருக்கிறார்கள். இவர் ஒரு சமயத்தில் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் இந்திய சுதந்திர இயக்கத்தையும் அதன் தலைவர்களையும் தாக்கிப் பேசும் போது நாய்கள் எவ்வளவு தான் குரைத்தாலும் பிரிட்டிஷ் ஆட்சியின் ஜோதி ஒருக்காலும் மங்காது. (The Dogs may bark, but the Caravan passes on) என்று ஏளனஞ் செய்ததை இந்தியர்கள் மறந்திருக்க முடியாது. இதிலிருந்து இந்திய சுதந்திர இயக்கத்தைப் பற்றி அவருக்கிருந்த வெறுப்பு நன்கு தெளிவாகிறது.

1930-ல் லண்டனில் நடந்த இரண்டாவது வட்டமேஜை மகா நாட்டில் கலந்துகொள்ள காந்திஜி லண்டனுக்குச் சென்றார். மகா நாட்டில் அரசியல் விஷயங்களைப் பற்றிப் பேசியதோடு அநேக பிரிட்டிஷ் சங்கங்களின் கூட்டங்களுக்கும் சென்று சொற்பொழிவாற்றினார். ஆயிரக்கணக்கான ஏழை மக்களையும் சந்தித்தார். இதன்றி ஐந்தாம் ஜார்ஜ் மன்னரையும் சந்தித்தார். ஆனால் ஜார்ஜ் மன்னருக்கும் காந்திஜிக்குமிடையே நடந்த சம்பாஷணையைப்பற்றிச் சென்ற இருபத்தைந்து வருஷங்களாக ஒரு தகவலுங் கிடையாது. சமீபத்தில் டெம்பிள்வுட் பிரபு எழுதிய தன் சுய சரிதையில் காந்திஜீயின் சம்பாஷணையைப் பற்றி ருசிகரமான சில விவரங்களைக் கொடுத்திருக்கிறார்.

'தரித்திர நாராயணனின்' சின்னமாக, காந்திஜி வழக்கமாய் அணிந்திருந்த அரை வேஷ்டியின் மீது ஆங்கிலேயர்களின் வெறுப்பை அவருடைய அரசியல் கிளர்ச்சி மீதிருந்த வெறுப்புக்கு இணையாகக் கூறலாம். இம்மாதிரி ஆடையணிவது மனித தர்மத்திற்கும் மரியாதைக்கு மேற்றதல்ல என்ற அபிப்பிராயம்

அநேக ஆங்கிலேயர்களுக்கிருந்தது. ஜார்ஜ் மன்னரும் இந்த அபிப் பிராயங் கொண்டவரென்பதை டெம்பிள்வுட் பிரபு அறிந் திருந்தார். அதனால் காந்திஜிக்கு ஜார்ஜ் மன்னர் வேறு பிரபலஸ் தர்களுக்குக்கொடுக்கும் மரியாதையைச் செலுத்துவாரோவென்ற சந்தேகமுமிருந்ததாம் டெம்பிள்வுட் பிரபுவிற்கு.

" இந்தியாவில் நான் செலுத்தும் ஆட்சியைக் கவிழ்க்க மிகத் தீவிரமாக முயலும் இந்த அரை நிர்வாண பக்கிரிக்கு என் அரண் மனையில் என்ன வேலை?'' என்று ஐந்தாம் ஜார்ஜ் பிரபு டெம்பிள் வுட் பிரவுவிடம் கேட்டாலும் காந்திஜியின் கவர்ச்சிகரமான புன்னகையையும், நடையையும் கண்டவுடனே ஜார்ஜ் மன்னர் தான் கொண்ட வெறுப்பையெல்லாம் மறந்து அவருடன் குதூ கலமாகச் சற்றுநேரம் சம்பாஷித்துக்கொண்டிருந்தாராம். சம்பா ஷித்துக்கொண்டிருக்கும் பொழுதும் அடிக்கடி காந்திஜியின் ஆடை ஜார்ஜ் மன்னரின் கண்ணை உறுத்தியதுபோல் டெம் பிள்வுட் பிரபுவிற்குத் தோன்றியதாம். அப்பொழுதெல்லாம் பல விஷயங்களைப் பற்றிச் சம்பாஷித்த பிறகு இந்திய அரசியலைப் பற்றியும் ஒரு வார்த்தையாவது பேசவேண்டுமென்று ஜார்ஜ் மன்னர் நினைத்தார்.

அவர் கூறிய வார்த்தைகள் மன்னர்கள் வெறுங் கூண்டுக் கிளிகள்தானென்றும் அவரைச் சூழ்ந்திருப்பவர்கள் கூறும் தகவல்களைத் தவிர மற்றொன்றும் தெரியாதென்பதற்கும் தகுந்த உ.தாரணமாகும்.

விடைபெற்றுக் கொள்வதற்காக எழுந்த காந்திஜியிடம் ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் "மிஸ்டர் காந்தி, என் ஆட்சியை எதிர்ப் பதற்குள்ள சிக்ஷையை மறந்துவிடாதீர்கள்'' என்று கூறினர்.

காந்திஜியா முடிசூடிய மன்னருக்கோ அவர்களுடைய மிரட் டலுக்கோ பணிபவர் ?

மிகக் கௌரவத்துடன், "தங்கள் உபசாரத்தைப் பெற்றுக் கொண்டு தங்களிடமே ஒரு அரசியல் வாதத்தில் ஈடுபடுவது நியாய மாகாதென்பது என் அபிப்பிராயம்'' என்று பதில் கூறினர். ஜார்ஜ் மன்னரின் அகம்பாவ மொழிகளுக்கு இது எவ்வளவு தக்க சூடான பதிலாகும்.

காந்திஜியின் அரை வேஷ்டியைப் பற்றி வெள்ளையருக்கிருந்த வெறுப்புக்குக் காரணம் முழங்கால்கள் வெளியே தெரிவதுதான்.

இந்த ஆக்ஷேபம் மிக விந்தையான தென்பது வாசகர்கள் சற்று யோசித்தால் தெரியும். வெள்ளையர்கள் 'அரை நிஜார்' அணிவது சர்வ சாதாரணமானது. இவற்றை யணிந்துகொள்பவர்களுடைய முழங்கால்கள் தெரிவது பற்றி வெள்ளையர்களுக்கும் இங்கிலாந்து மன்னருக்கும் வெறுப்பில்லாத காரணம் அவர்களுக்கே வெளிச்சம்!

மேல் நாட்டு மாதர்கள் அணியும் ஆடைகள் அவர்களுடைய முழங்கால்களை எப்போதுமே மறைப்பதில்லை. மாதர்களின் முழங்கால்கள் வெளியே தெரிவது பற்றி வெள்ளையர்களுக்கு ஆக்ஷேபணையேயில்லை. இதற்கெல்லாம் மனப்பான்மைதான் காரணமேயொழிய வேறெதைச் சொல்ல?

காந்திஜிக்கு 'அரை நிர்வாணப் பக்கிரி' என்று பெயர் கொடுத்தது இப்போது இங்கிலாந்தின் பிரதமராயிருக்கும் சர்ச்சில் துரையென்பது யாவருமறிந்த விஷயம். சமீபத்தில் இந்தியப் பிரதமர் ஜவஹர்லால்ஜி இங்கிலாந்திற்குச் சென்றிருந்தபோது சர்ச்சில் துரையைச் சந்தித்தாராம். இவ்விருவர்களிடையே நடந்த சம்பாஷணையைப் பற்றி விரிவாக இப்போது ஒன்றும் தெரியாது. சர்ச்சிலும் ஒன்றுங் கூறமாட்டார். இந்தியப் பிரதமரும் இதுவரை வாய்த்திறக்கவில்லை, சில வருஷங்களுக்குப் பிறகு தான் இதைப் பற்றின விவரங்கள் தெரியும். ஆனாலும் இதைப் பற்றிய சில அபிப்பிராயங்களை இப்பொழுதே கூறமுடியும். உலகமே போற்றும் புனிதனை 'அரை நிர்வாணப் பக்கிரி' என்று அருவருப்புடன் அழைத்தவர், அந்தப் பக்கிரியின் வாரிசான ஜவஹர்லால்ஜிக்கு எவ்வளவு தான் மரியாதை யளித்திருக்கமுடியும்? சர்ச்சிலைப் போல் இந்தியாவைப் பற்றிக் காரணமில்லாமல் வெறுப்புக் கொண்டவருக்கு ஜவஹர்லால் நேருவும் அவ்வளவாகக் கௌரவமளித்திருக்கமாட்டாரென்பதில் என்ன சந்தேகம்?

ASOKA SCENTED BETELNUT POWDER

பூதானம் செய்யுங்கள்

விநோபாஜியின் வேண்டுகோள்

(பரலி. சு. நெல்லையப்பர்)

விருத்தம்

ஊரிலே செல்வர்களாய் வாழும் நல்லோர்
ஒன்றுமிலா ஏழைகளுக் குதவ வேண்டும்
சீரெலாம் பெருகுதற்கு வழியீ தாகும்
செல்வர்களே ஏழைகளுக் குதவி செய்வீர்
பாரிலே சிலர் உண்டு களித்து வாழப்
பலகோடி மக்கள் இங்கே வருந்துகின்றார்
கார்போலும் கருணையுடன் உதவ வேண்டும்
கடவுள்உமக் கருள்செய்வார் கடமை செய்வீர். 1

நிலம்படைத்த நல்லோர்கள் நிலத்தோர் பாகம்
நிதிபடைத்த செல்வர்கள் நிதியோர் பாகம்
பலம்படைத்திங் கெளியோர்கள் உய்யுமாறு
பரிவுடனே உதவுவீர் பாவம் தேய்ந்து
நலம்படைத்து வறுமை ஒழிந் துலகமெல்லாம்
நல்வாழ்வு தோன்றிடுமால் நாளும் இங்கே
குலம்படைத்த பெரியோரே தேசம் உய்யக்
கும்பிட்டேன் வேண்டினேன் குறைதீர்ப்பீரே. 2

ஆறில்ஒரு பங்குநிலம் தாரீ ரென்று
அருள்படைத்த விநோபாவா வேண்டு கின்றார்
மாறிலாக் கருணையுளம் படைத்த செல்வர்
வண்மையுடன் உதவுவீர் வறுமை போக்கீர்
சோறிலா ஏழை மக்கள் துயரம் தீரும்
சொல்லொணு நலங்கள் பல விளையும் இங்கே
நீறுபடத் தீமையெலாம் ஒழியப் பாரில்
கிருத யுகம் நிலவிடவே துணைசெய் வீரே. 3

அன்போங்க வையகத்தில் அறங்கள் ஓங்க
அறிவோங்க ஆக்கங்கள் அனைத்தும் ஓங்க
துன்பங்கள் துயரங்கள் எல்லாம் நீங்க
சொல்லொணு வறுமைநிலை தொலைந்து நீங்க
மின்போலும் வாழ்க்கை இது ; செல்வம் நில்லா ;
விரைந்தோடி உதவுவீர் மெலிந்தோ ருக்கே
இன்பங்கள் ஓங்கவே எங்கும் ஓங்கும்
ஈசனுர் அருள் ஓங்க ஏத்து வோமே. 4

'குமண'னாயினும் குடியைக் கெடுக்கக்கூடாது

●

தாராள குணம் அல்லது உதார குணம் இருதயத்திலிருந்து உண்டாகின்றது. இது பிறப்பிலேயே உண்டாகும் ஒரு தன்மை. இந்தத் தன்மையை தாய்ப்பால் குடிக்கும் இளம் குழந்தையிடம் கூடக் காணலாம். எவ்வளவு சிறிய குழந்தைகள் தங்களிடம் இருக்கும் பொம்மையையோ அல்லது வேறு விளையாட்டுக் கருவியையோ கேட்டவுடன் நம்மிடம் கொடுத்துவிடுகின்றன. அதற்கு நேர்மாருக எவ்வளவு குழந்தைகள், கேட்டவுடன், தங்கள் விளையாட்டுக் கருவிகளை கொடுக்காமலும், கைகளை நீட்டாமலும், கெட்டியாய் அழுத்தி வைத்துக்கொள்கின்றன. முதலாக நாம் கேட்டதற்கு அக்குழந்தைகள் சங்கீதம் பாட ஆரம்பித்து விடுகின்றன. வீட்டில் இருக்கும் பாட்டிமார்கள், முதலில் கூறப்படும் தாராள மனப்பான்மையுடைய குழந்தைகளை 'கர்ணன்' என்றும், இரண்டாவதாகச் சொல்லப்பட்ட குழந்தைகளை 'கஞ்சன்' என்றும் கூறி கேலி செய்வதுண்டு.

வளர வளர குழந்தைகளுக்கு இவ்விதமான மனப்பான்மை, நல்லது, கெட்டது முதலிய குணங்கள் வளர்ந்துகொண்டே போகின்றன. ஒரு குழந்தை பெரியவனுகி, தன்னிடம் உள்ளதைப் பிறருக்கு ஈந்து, தானும் சுகமாக வாழ்வான். மற்றொரு குழந்தை ஒருவருக்கும் ஒன்றும் கொடாமல் 'சுக்கான் செட்டியாய்' வாழ்வான்.

நான் சில குழந்தைகளின் பிறந்த தினக்கொண்டாட்டங்களில் கலந்துகொண்டு, அவர்களை கவனித்திருக்கிறேன். தனக்கு வந்த வெகுமதிகளையெல்லாம் சாதாரணமாக குழந்தைகள் தங்கள் பெற்றோரிடம் கொடுத்துவிடுவார்கள். ஆனால் சில குழந்தைகளோ, யாரிடமும் கொடுக்காமல், தாங்களே வைத்துக் கொண்டு விளையாட வேண்டுமென்று பிடிவாதங்கொள்வார்கள் போன வருஷம் தீபாவளியன்று எனது நண்பர் ஒருவர் என்னை அவர் வீட்டு விருந்துக்கு அழைத்திருந்தார். அங்கே சென்ற

பொழுது, ஒரு ஆச்சரியமான நிகழ்ச்சி நடந்தது. விருந்துக்கழைத்தவரின் எட்டு வயதுடைய ஒரே புதல்விக்கு அநேக பெட்டி மத்தாப்புக்களும், பட்டாசுகளும் பரிசாக கிடைத்தன. அந்தச் சிறுமி தனக்கு சிறிதளவு பட்டாசுகளையும், மத்தாப்புக்களையும் வைத்துக் கொண்டு, மீதி எல்லாவற்றையும் அக்கம் பக்கமிருக்கும் குழந்தைகளுக்கு தானம் செய்துவிட்டாள். எல்லாம் அந்த தாராள மனசு தான் காரணம்.

இயற்கையாய் தாராள மனப்பான்மையில்லாதவர்கள் கூட, செயற்கையாய் இந்த நற்குணத்தை மனசில் படியச்செய்யலாம். முதலாவது ஏதாவது மற்றவர்க்குக் கொடுப்பதாலேயே தாராள மனப்பான்மை அடைந்துவிட்டோமென்ற எண்ணம் உண்டாகக் கூடாது. நம் மனத்தில் கொடுக்கவேண்டுமென்ற நல்ல எண்ணம் உண்டாகவேண்டும். இரண்டாவதாக நாம் கொடுத்ததற்கு பிரதி பலன் எதிர்பார்க்கக்கூடாது. ஒருவன் தன் பெயரை பிரமாதமாக பத்திரிகையில் பிரசுரிப்பதற்கு தர்மம் செய்தல், அல்லது மறு பிறப்பில் நல்வாழ்வு கிடைக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் தர்மம் செய்தல் முதலியன அவனுடைய தன்னலத்தையே பிரதி பலிக்கச் செய்கின்றது. இதை உணர்ந்தால் தாராள குணத்தை செயற்கையாகவும் பெறலாம்.

துரதிருஷ்டவசமாக, எத்தனையோ லோபிகள் காலணா கூட பிச்சைக்காரர்களுக்கு ஈயாத மக்கள் உலகில் இருக்கின்றனர். இம்மாதிரி லோபித்தனம் இவர்களுடைய பிறப்பிலேயே ஊறி யுள்ளது. ஆனல் இப்பேர்ப்பட்ட லோபிகளால்கூட சில சமயங்களில் அதிர்ச்சியடையும்படியான சம்பவங்கள் நடைபெறுகின்றன. அவர்களது பணத்தை திருடர்கள் சூறையாடுகின்றனர். அவர்கள் பணம் போட்டிருக்கும் பாங்கிகள் முறிந்துவிடுகின்றன. இப்பேர்ப்பட்ட சம்பவங்கள் நேரிடாமல் இருந்தாலும், ஒரு காலத்தில், இந்த லோபிகள் மனம் வருந்த நேரிடும். வயதான காலத்தில் பந்துக்கள், நண்பர்கள் ஒருவரும் கூப்பிட்ட குரலுக்கு ஏன் என்று பதில் கூறமாட்டார்கள். முதிய வயதில் தான் துணையும் நண்பர்களும் தேவை. உடம்பில் இரத்தமும் ஊட்டமும் இருக்கும் வரையில் இவர்கள் தேவையில்லை என்று தமாஷாக ஒரு ஆங்கிலப் புலவர் கூறியுள்ளார். உலகத்தில் இந்த

லோபிகள், பிறர் உதவியின்றி, தனியாகத் தான் வாழ நேரிடும். ஆனால் தாராள மனப்பான்மை படைத்தவர்களுக்கு இச் சங்கடங்கள் ஏற்படாது. அவர்களுக்கு நண்பர்களின் அனுகூலமும், அனுதாபமும், உதவியும் எக்காலத்திலும் கிடைக்கும்.

ஒரு தாராள மனப்பான்மையுடையவரும், ஒரு லோபியும் சந்தித்தார்களாம். தாராளமானவர் ஒரு வட்ட வடிவமுள்ள ரூபாய் நாணயத்தை எடுத்துக்காட்டி "இதோ பார். பணம் வட்ட வடிவமாயுள்ளது. அது எல்லோரிடமும் போய்ச் சேரத்தான் வட்டமாயிருக்கிறது. அப்பொழுது தான் எல்லோரும் சுகமாய் இருப்பார்கள்" என்றார்.

உடனே லோபி தன்னிடமுள்ள ஒரு ரூபாய் நோட்டை எடுத்துக்காட்டி "ஏன் இப்படி காகிதத்தில் தட்டையாய் பணத்தை அச்சடிக்கிறார்கள் தெரியுமா? அப்படி அப்படியே கட்டுக் கட்டாக கட்டி இரும்புப்பெட்டியில் வைத்து அழுத்திப் பூட்டுவதற்குத்தான்" என்றாராம்.

மிதமிஞ்சி தாராளமாயுமிருத்தல் கூடாது. நாம் சில முக்கிய விதிகளை அனுசரிக்கவேண்டும். 'தர்மம் வீட்டில் ஆரம்பிக்கின்றது' என்பது ஆங்கிலப் பழமொழி. அதிக தர்மஞ்செய்து சிலர் தங்கள் குடும்பத்தினர்களை தவிக்க விட்டிருக்கிறார்கள். ஒரு நடுத்தர கொள்கையும் நோக்கமும் கொள்வது மேல். எல்லோருக்கும் நாம் உதவுவது நல்லதுதான். ஆனால் நம்மை நம்பியிருக்கும் குடும்பத்தினர்களை கஷ்டத்தில் தவிக்கவிடாமலிருப்பதும் நம் முக்கிய கடமையாகும்.

—எம். கே. எஸ்.

அசோகா சுகந்த பாக்குத்தூள்

அமுதமொழிகள்

நீ கூறப்போகும் வார்த்தை மௌனத்தை விடச் சிறந்ததென்று திட்டமாகத் தெரியும் வரையிலும் வாயைத் திறவாதே.

—*Anon.*

★

மனிதன் தன் ஆயுள் பூராவும் உழைத்து மனிதத் தன்மை பெறுகிறான். அதைப் பெற்றதும் அவன் ஆயுள் முடிவடைந்து விடுகிறது.

—*S. Cloete.*

★

சொன்னதைப் பற்றி வருந்துவதை விடச் சொல்லாததைப் பற்றி வருந்துவதே நலம்.

—*Arabian Proverb.*

★

எல்லாம் நாளைக்குச் செய்துவிடுவேன் என்பது சோம்பேறி கடைபிடிக்கும் வாசகம்.

—*E. Leterman.*

★

எல்லோரும் வீட்டை விட்டு விலகும்போது உள்ளே வருபவன் உத்தம நண்பன்.

—*J. S. Chevalier.*

★

மனிதனின் உண்மை ஆஸ்தி அவனுடைய தரம் தான்; அவன் பொருளல்ல.

—*Henry Ward Beecher.*

★

நல்லெண்ணமின்றி சொல்லும் உண்மை, உன் அசல் பொய்யை விடப் பன்மடங்கு தீமை.

—*William Blake.*

Compiled By "*Dorai*"

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
600 008
19873

ஆண்டவனே பொறுத்தால் அடிமையும் பொறுக்கலாம்

ஹஸரத் இப்ராஹீம் என்னும் பெரியார் கானகத்திலே தங்கியிருந்த சமயம் ஓர் இரவிலே இடியும் மழையும், மின்னலும் பலமாக அடித்தன. அச் சமயத்தில் வயோதிகர் ஒருவர் அவருடைய குடிசைக்கு வந்தார். இருளிலே வந்த அதிதியை இப்ராஹீம் கைகால் கழுவ நீர் கொடுத்து உபசரித்து, உணவருந்த உள்ளன்போடு அழைத்தார்.

இருவரும் உண்ண அமர்ந்தனர். மஜூஸீ என்ற நாமங்கொண்ட அந்த அதிதி ரொட்டித் துண்டை அவசர அவசரமாக எடுத்து வாயிலே வைக்கப்போனர். இதைக்கண்ட இப்ராஹீம் உடனே அவர் கையைப் பிடித்துக்கொண்டு "ஆண்டவன் நாமத்தை துதித்து உண்ணுங்கள்" என்று கூறினர்.

மஜூஸீயோ ரொட்டியைத் தட்டிலே வைத்துவிட்டு, "எனக்கு எழுபது வயதாகிறது; இதுவரை உணவருந்தும் பொழுது எவர் பெயரையுஞ் சொன்னதில்லை" என்ருர். "படைத்துக் காத்துத் துயர் போக்கும் ஆண்டவனின் பெயரை உண்ணும் பொழுதாவது சொல்லவேண்டாமா?" எனக் கூறி மஜூஸீயை ஆண்டவனின் பெயரைச் சொல்லுமாறு வற்புறுத்தினர் இப்ராஹீம்.

என்ன கூறியும் மஜூஸீ ஆண்டவன் பெயரைச் சொல்ல மறுத்துவிட்டார்.

"அப்படியென்றுல் ஆண்டவனை மதிக்காத எவரும் என்னிடம் உதவிபெற முடியாது" என்று கூறி குடிசையைவிட்டுச் செல்லுமாறு மஜூஸீக்குக் கட்டளையிட்டார் இப்ராஹீம்.

இருள் நிறைந்த இரவிலே மஜூஸீ வெளியேறினர்.

குடிசையின் உள்ளே அன்பும் அறிவும் நிறைந்த ஆண்டவனின் குரல் கேட்டது.

"இப்ராஹீம், இந்தக் கிழவன் எழுபது ஆண்டுகளாக

இப்படிப் பிடிவாதக்காரஞக இருக்கிருன். எழுபது ஆண்டுகளாக இவன் பிழையைப் பொறுத்துவந்திருக்கிறேன். உமக்கு அவன் பிழைசெய்வது இதுவே முதல் தடவை. ஆனுல் ஒரு தடவை அவன் செய்த பிழையை உம்மால் பொறுக்கமுடியவில்லையே!''

ஆண்டவன் அன்புமொழியைக்கேட்ட இப்ராஹீம் உள்ளம் வேதனை அடைந்தது.

"அன்புருவே'' ஆத்திரத்தில் ஆகாத காரியஞ் செய்து விட்டேன்'' என்று மனம் நொந்தார்.

உடனே வெளியே துரத்தி விட்ட மஜூஸியை வீட்டுக் கழைத்து வந்து மறுபடியும் உபசாரஞ் செய்து ஆகாரமளித்தார். இதைக் கண்ட மஜூஸி "இதென்ன கூத்து! நீங்கள் இப்படி மாறக் காரணமென்ன?'' என்று கேட்டார்.

பெரியார் ஆண்டவனிடம் கேட்ட அறிவுரைகளைக் கூறியவுடன் மஜூஸி 'ஆனந்தப் பரவசமடைந்து "அன்னையினும் மிக்கதயையுடைய தயாளனையா இதுவரை நான் மதியாதிருந்தேன்'' என்று கண்ணீர் பெருக ஆண்டவனின் கருணையை வியந்தவாறே முற்றிலும் மாறியவராய் "இன்று முதல் உன் வழியைப் பின்பற்றுபவர்களில் யானும் ஒருவனுகிவிட்டேன், என் பாவத்தைப் பொறுத்துக்கொள்'' என்று இப்ராஹீமின் இரு கைகளையும் பிடித்துக்கொண்டார்.

குடிசைக்கு வெளியே புயலும் மழையும் அடித்துக்கொண்டிருந்தன. குடிசையினுள்ளோ அன்பும் சாந்தியும் கலந்த இரு உள்ளங்கள் இன்பத்தில் திளைத்தன.

—இமாம் ஸஅதியின் "பூஸ்தானிலிருந்து"

புது வாழ்வு!

வறுமையால் வாடிக்கொண்டிருந்த ஒரு பிரெஞ்சு எழுத்தாளருக்கு அவருடைய நெருங்கிய உறவினரொருவர் அவர் இறந்துபோகும் பொழுது, தன் சொத்துக்களில் ஒரு பாகத்தை அவருக்கு எழுதி வைத்து, அவருடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தினர். இந்தத் தகவலைப் பற்றித் தனது நண்பர்களுக்கு பிரெஞ்சு எழுத்தாளர் அறிவித்த விதம் இவ்வாறு:—

"இன்றைய தினம் காலையில் ஐந்து மணிக்கு எனது மாமாவிற்கும் எனக்கும் ஒரு புது வாழ்வு தொடங்கிவிட்டது.''

இந்தியத் தலைநகரம் அளிக்கும் விசித்திரத் தோற்றம்

சங்கம நகரம்

டில்லி நகரத்திற்கு இரு முகங்கள். ஒன்று புராதனம்; மற்றொன்று நவீனம்.

டில்லியிலே இரு சர்க்கார்களிருக்கின்றன. ஒன்று இந்திய மத்திய சர்க்கார்; மற்றொன்று டில்லி மாகாண சர்க்கார்.

டில்லி நகரத்தில் வசிக்கும் பிரதமர்கள் இருவர். ஒருவர் அழகான தோற்றங்கொண்ட ஜவஹர். மற்றொருவர் அவ்வளவு அழகில்லாத பிரம்ம பிரகாஷ்.

இவ்விருவர்களின் ஆட்சியின்கீழ் வசிக்கும் மனித ரகங்கள் அநேகம் :— ராஜகுமாரர்கள், அரசியல்வாதிகள், கொள்ளை லாபம் சம்பாதிக்கும் வியாபாரிகள், வாசனைதிரவிய வியாபாரிகள், போதைப் பொருள் வியாபாரிகள் 'கள்ள மார்க்கெட்' வியாபாரிகள், ராஜ தந்திரிகள், அயல்நாட்டு தூதர்கள், ஒற்றர்கள், விபசாரிகள், விபசாரத் தரகர்கள், கதர் குல்லாய் தரித்த காங்கிரஸ் வாதிகள்.

இந்நகரத்திற்கு பெயர்களுமிரண்டு. (1) பழைய டில்லி, (2) புதுடில்லி. புராதன சரித்திர மகத்துவமட்டுமுள்ள சுமார் ஒன்பதரை லக்ஷம் 'நடைபிணங்களான' மக்கள் பழைய டில்லியில் வசிக்கின்றனர். புது டில்லியில் வசிக்கும் சுமார் மூன்று லக்ஷம் மக்கள் பாவவழிகள் மூலமாகவே தங்களுக்குப் புகழும், சரித்திரத்தில் ஒரு ஸ்தானமும் பெற முயல்கிறார்கள்.

டில்லி நகரத்தை இந்திராணிக்கு ஒப்பிடலாம். ஒருவர் பின்னால் ஒருவராக வந்து எவ்வளவு அரசர்கள் பட்டத்திற்குவந்தாலும் பட்டமகிஷி எப்போதும் இந்திராணிதான் என்பதுபோல் புராணக் காலத்தில் இந்திரப்பிரஸ்தம் என்று பெயர்கொண்ட டில்லியை ஆண்ட பாண்டவர்களிலிருந்து 1947-ம் ஆண்டு ஆகஸ்டு மீ 15-ந் தேதி நள்ளிரவில் இந்தியாவைவிட்டு வெளியேறிய வெள்ளைக்காரர்கள் வரையிலும் டில்லியை ஆண்டுவந்த எவ்வளவோ அரசர்களுக்கும் கொள்ளைக்காரர்களுக்கும் தலைநகரம் டில்லிதான்.

பன்னிரண்டாம் நூற்றாண்டில்தான் டில்லி முஸ்லீம் ஆக்ரமிப்பாளர்களை வசீகரித்தது. மகமது கோரி, குத்புதீன்

ஐபக், சம்ஷுபீன், அல்டாமிஷ், கியாஸ்ஸுடீன் பால்பான், அல்லாவுத்தீன் கில்ஜி, மாலிக் காபூர்; மகமது துக்லக், பிரோஷ்ஷா துக்லக், சைனுலாபுத்தீன், மகமது ஷா; அகமதுஷா, பஹலுல் லோடி, சிக்கந்தர் லோடி, பாபர், ஹுமாயூன், அக்பர், ஜஹாங்கீர், ஷாஜஹான், அவுரங்கஜீப், நாதிர்ஷா, அகமத்ஷா அப்தாலி, ஷாஆலம், பகதூர்ஷா. இவர்கள் தான் டில்லியை ஆண்ட ஆக்கிரமிப்புக்காரர்களில் வரிசைக்கிரமமானவர்கள்.

1771-ல் மராட்டியத் தலைவரான மாதவராவ் ஸிந்தியா டில்லியைக் கைப்பற்றினாலும் முப்பது ஆண்டுகளுக்கு மேல் அது அவர் வசமிருக்கவில்லை. பத்து நூற்றாண்டுகளாக காலம் என்ற மண்ணில் பதிந்த அடிச்சுவடுகள்கொண்ட கருவூலமே டில்லி நகரம். சூரியதேவனை வணங்கும் அரசர்கள், அவர்களின் ஞாபகார்த்தமாக இரும்பு ஸ்தூபங்களைக் கட்டிவைத்திருக்கிறார்கள். பிறைச் சந்திரனை வணங்கிய மன்னர்கள் அவர்கள் ஞாபகார்த்தமாக ஏராளமான சமாதிகளைக் கட்டி வைத்திருக்கிறார்கள். டில்லியை ஆண்டுவந்த முகலாய மன்னர்கள் தாங்கள் உயிரோடிருக்கும்போதே அவர்கள் சமாதியைக் கட்டி வைத்துவிட்டனர். ஏனென்றால் இறந்துபோனவரின் சவத்தை, அவனுக்குப்பின் வருவோர் அலட்சியஞ் செய்து கழுகுக்கிரையாக்கி விடுவார்களென்ற பயத்தால்தான்.

இம்மாதிரி ஞாபகச் சின்னங்களில் 22 அடி உயரமுள்ள அணங்கபால்துவாரின் இரும்பு ஸ்தூபம், குதப்மீனார். அலி தார் வாஜா, நிஜாமுடீன் மசூதி, கலான் மசூதி, புராண கில்லா, ஜமாலி மசூதி, ஹுமாயூன் மசூதி, டில்லிக்கோட்டை, சப்தார்ஜங் சமாதி, ஜும்மா மசூதி, போன்ற நூற்றுக்கணக்கான, சமாதிகள், மசூதிகள், ஸ்தூபங்கள் முதலியவை கொண்டதாகும் டில்லி நகரம். இந்த மசூதிகளில் ஒன்றாக இருந்து அரசர்களும் அநேக லட்ச மக்களும் ஆண்டவனைத் தொழுதார்கள். இவர்கள் மரணத்திற்குப் பின் அரசர்கள் சலவைக்கல்லால் கட்டப்பெற்ற சமாதிகளையடைந்தார்கள். மக்களோ ஆண்டவனுக்குக்கூடத் தட்டுப்படாத அளவுக்குச் சிதறிப்போனார்கள்.

மசூதிகளால் நிறைந்த டில்லியில் ஹிந்து ஆலயங்களுமுண்டு. மதமாற்றமோ, அதை எதிர்ப்பதனால் விளையும் உயிர்ச்சேதமோ,

தங்களுக்கு ஏற்படக்கூடாதே யென்று நடுங்கிக்கொண்டே ஹிந்துக்கள் ஆண்டவனை வணங்கினார்கள். நடுங்கியவர்களுக்குத் தைரிய மூட்டுமாறு இன்று தாராளமான காற்றும், வெளிச்சமும், தெய்வங்களுங்கொண்ட ஒரு லக்ஷ்மிநாராயணனின் ஆலயத்தை பெருத்த பணச்செலவில் ஜுகல் கிஷோர் பிர்லா கட்டியுள்ளார். டில்லியிலுள்ள அழகான காட்சிகளில் ஒன்று இந்த ஆலயமாகும். நவீனத்தாலும் நாகரித்தாலும் நிறைந்தது டில்லி அரசாங்கம். பிரிட்டிஷார் ஆட்சியில் அநேக பிரம்மாண்ட கட்டிடங்கள் சிவந்த கற்களால் கட்டப்பட்டுள்ளது. இந்தக் கற்களுக்கு வர்ணமளிப்பது மக்களின் இரத்தம். டில்லியில் பார்க்கவேண்டியவை எவ்வளவோ இருக்கின்றன. மனிதர்களைக் கொன்று அரசுரிமையைக் கையாண்ட காலங்களில் வெற்றிபெற்றவர்களெல்லாம் தங்கள் பெயர்களை நிலைநிறுத்த முயற்சி செய்தனர். பட்டாணியர்கள், அமைதியை விரும்பும் இந்தியர்களின் மீது புரிந்த கொடுமைகளின் ஞாபகச்சின்னமாகும் குதப்மீனார். இதன் உயரம் 238அடி. பட்டாணியர்களுக்குக் கடவுளைத் தேடி இன்னும் அதிகமாக உயரச்செல்லமுடியவில்லை போலும்! டில்லியிலுள்ள செங்கோட்டையை ஷாஜஹான் சக்கரவர்த்தி 1639-ல் கட்ட ஆரம்பித்து 1648.ல் முடித்தார். இந்தக் கோட்டையைக் கட்டுவதற்கு எத்தனை ஆயிரக்கணக்கான அடிமைகள் பாடுபட்டுத் தங்கள் இரத்தத்தை சிந்தியிருக்கிறார்களென்பதை எவராலுமே கணக்கிடமுடியாது. கையில் வாளேந்தி மதப்பிரசாரஞ் செய்தவர்களின் ஞாபகச் சின்னமானது இந்த செங்கோட்டை புது டில்லியில் ஒரு முக்கிய வீதியின் பெயர் 'கிங்ஸ் வே' [ராஜவீதி] என்பதாகும். ஒரு அரசன் இந்த வீதி வழியே சென்றதால்தான் இந்த வீதிக்கு இப்பெயர் வந்தது. அந்த அரசன் பெயர்தான் ஐந்தாம் ஜார்ஜ். மனிதன் அடிச்சுவடை மக்கள் தொழுது முத்தமிட்டு வணங்கிய 'நாட்களின் ஞாபகச் சின்னமாகும் 'கிங்ஸ்வே!' தன்பெயரை இந்த வீதிக்களித்த அரசன் இப்போது லண்டனிலுள்ள ஒரு தேவாலயத்தில் மீளா நித்திரையிலாழ்ந்துள்ளார். இன்று இந்த வீதியில் நடமாடும் அரசன் லட்சக்கணக்கான மக்களின் இதயபீடத்தில் வீற்றிருக்கும் ஜவஹர்லால் நேரு.

—*Filmindia*, Bombay.

மதியால் தப்பிய பதி

முன்னொரு காலத்திலே ஈரான் தேசத்திலே இரு அரசர்களுக்கிடையே சண்டை மூண்டது. யுத்தம் நடந்தது. இருதரப்பிலும் ஏராளமான உயிர்ச்சேதம். கடைசியில் கலிப் என்ற அரசன் வெற்றியடைந்தான். தோல்வியுற்றவர்கள் அனைவரும் கைதிகளானார்கள். அவர்களில் ஹார்மோஸானும் ஒருவன். அவன் மிகவும் புத்திசாலி. அவன், தான் கைதியானதைக் குறித்து மற்றவர்களைப் போலத் துக்கப்படவில்லை.

கலிப் தன்னுடைய கைதிகளிற் சிலரை மரணத்திற்குள்ளாக்கத் தீர்மானித்தான். அப்படித் தீர்மானிக்கப்பட்டவர்களில் ஹார்மோஸானும் ஒருவன். அப்படியிருந்தும் அவன் சிறிதும் மனங் கலங்கவில்லை. கடைசியாக அந்தத் தினமும் வந்தது. ஹார்மோஸான் கொலைக்களத்திற்கும் வந்துவிட்டான். கொலையாளிகள் வாளையும் உருவி விட்டனர்.

அப்பொழுது ஹார்மோஸான், கலிப்பைப் பார்த்து, "அரசே! இறக்குமுன் நான் உங்களுக்கு ஒரு சிறு விண்ணப்பம் செய்துகொள்ள விரும்புகிறேன்" என்றான். "கேள்" என்று கலிப் உத்தரவிட்டான். ஹார்மோஸான் பணிவுடன் "அரசே! எனக்குப் பொறுக்க முடியாத தாகமாயிருக்கிறது. எனவே எனக்குக் கொஞ்சம் தண்ணீர் தந்தீர்களானால் எனது தாகத்தை தீர்த்துக்கொள்வேன். பின்பு எனக்குரிய தண்டனையை நிறைவேற்றலாம்" என்று சொன்னான்.

"பூ! இவ்வளவுதானா?" என்று ஏளனமாக நினைத்த கலிப் ஒரு பாத்திரத்தில் தண்ணீர் கொண்டுவரும்படி தன் படை வீரனுக்கு கட்டளையிட்டான். தண்ணீரும் வந்தது. பாத்திரத்தைக் கையில்வாங்கிய ஹார்மோஸான் குடிக்காமல் தயங்கினான். இதைக் கவனித்த கலிப் சிரித்துக்கொண்டே "என்ன பார்க்கிறாய்? நீ அதைக் குடித்துக்கொண்டிருக்கும் பொழுதே என் படைவீரர்கள் உன்னைக் கொன்றுவிடுவார்களோ என்றா? பயப்படாதே. நீ அப் பாத்திரத்திலுள்ள தண்ணீர் முழுவதையும் குடித்த பின்புதான் உன் தண்டனை நிறைவேற்றப்படும்" என்றான்.

இதைக்கேட்ட ஹார்மோஸானுக்கு மின்னல் வேகத்தில் ஒரு யோசனை தோன்றியது. உடனே தொப்பென்று பாத்திரத்தைக்கீழேபோட்டான். பாத்திரம் உடைந்துசுக்குநூருகியது. தண்ணீரை மணல் உறிஞ்சிவிட்டது. ஹார்மோஸான் தலை நிமிர்ந்து கலிப்பை நோக்கி, "அரசே! தாங்கள் எனக்கு, 'நீ இப்பாத்திரத்திலுள்ள தண்ணீர் முழுவதையும் குடித்த பின்புதான் உனக்குத் தண்டனை நிறைவேற்றப்படும்' என்கிறீர்கள். நான் அந்த நீரைக் குடிக்கவில்லை. அவ்வளவும் மணலில் கொட்டிவிட்டது. திரும்பவும் அந்தத் தண்ணீர் அப் பாத்திரத்தில் வந்து அதை நான் குடித்த பின்புதான் என் தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும். நீங்கள் அரசர். சொன்ன சொல் தவறக்கூடாது" என்ருன்.

கலிப்புக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஹார்மோஸான் கூறியது நியாயமென்றே அவன் உணர்ந்தான். அவனுடைய கூறிய சமயோசித புத்தியைக் கண்டு வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தான். அவனைப் பாராட்டி, அவனைத் தன் மெய்க் காப்பாளனுக்கினுன்.

ஹார்மோஸான் தன் கூரிய மதியினுதவியால் மரணத்தினின்றும் தப்பியதோடு ஓர் உயர்ந்த பதவியையும் அடைந்தான்.

—*Eelakesari*

குற்றங்களைக் குறைக்கும் ஒலிபெருக்கி

●

திருடர்களையும் கலகஞ் செய்பவர்களையும் தடுப்பதற்கு மேல் நாடுகளில் ஒரு நூதன வழியைக் கண்டுபிடித்திருக்கிருர்கள். இந்த வழியைக் கையாளுவதன் மூலம் திருட்டோ மற்ற அக்கிரமமோ நடக்குமிடத்திற்கு அந்தப் பக்கத்தில் சஞ்சரித்துக் கொண்டிருக்கும் போலீஸாரை வெகு சீக்கிரத்தில் வரவழைக்கலாம்.

மிகச் சிறிய ஒலிபெருக்கி இயந்திரமொன்றை அமெரிக்காவில் இப்போது தயார் செய்துள்ளார்கள். இந்த இயந்திரத்தை போலீஸ்காரர் குல்லாய்க்குள் அடக்கிவிடலாம். திருட்டு, கலகம் முதலியவை நடப்பதைப் பற்றித் தகவல் கிடைத்தால் உடனே இந்த ஒலிபெருக்கி மூலம் தகவலை போலீசார் நகரத்தில் எங்கெங்கு சுற்றிக்கொண்டிருக்கிருர்களோ அங்கெல்லாம் அனுப்பிவிடலாம். இந்த நவீனக் கருவியின் மூலம் அமெரிக்க நகரங்களில் குற்றங்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்து விட்டதாம்.

விநாயகரின் விவாகம்

வெண் பனி சூழ்ந்திருக்கும் கைலாய மலை. பொன் மயமாக விளங்கும் சபாமண்டபம். அதன் நடுவே இரத்தினங்கள் இழைக்கப்பட்ட சிம்மாஸனம். தேவகணங்கள் புடை சூழ்ந்து நிற்கின்றனர். தும்புருவின் நரம்புகளைத் தடவி இசையமுதத்தைப் பெருக்கிக் கொண்டே சபாமண்டபத்தில் நுழைந்தார் நாரதர். சிம்மாஸனத்தில் வீற்றிருக்கும் நிர்மல ஸ்வரூபியான விநாயகக்கடவுள் வீற்றிருக்கும் காட்சியைக்கண்டு களித்தார். அவர் நா துதி பாடியது. தும்புருவை ஒரு புறமாக வைத்து கரங்களைக் கூப்பி வணங்கி நின்றார். தலையை அசைத்து விநாயகரும் வரவேற்றார் நாரதரை.

“சர்வ பரிபூரண கருணா மூர்த்தியே! பிரும்ம தேவர் சிந்தையினின்று உதித்த கன்னிகைகளைத் தங்களுக்குத் திருமணம் செய்துதரத் திருவுள்ளம் கொண்டுள்ளார். அக்கன்னியர்களைப் படைக்குங் காலத்திலேயே தங்களை மனத்திற் கொண்டே படைத்துள்ளார். அக்கன்னியர்கள் பேரழகின் பெருமைதான் என்ன?” என்று அவர்களைப் பற்றி வர்ணிக்க ஆரம்பித்தார், நாரதர்.

விநாயகர் புன்முறுவலினால் நாரதரை உற்சாகமூட்டினார்.

“அனிச்ச மலரின் மீது அடி வைத்தாலும் குழைந்து வெப்பமடையும் தன்மையுள்ள அழகிய செந்தாமரை மலர்போல் சிவந்திருக்கும் உள்ளங்கால்கள் பவளத்துண்டங்களைப் பழிக்கும் பாத விரல்கள், செங்கழுநீர் மலரைச் செருக்குறச் செய்யும் நகக்கூட்டங்கள், கோணல் என்னும் குற்றங்களற்றுப் பிரகாசிக்கும் புறவடிகள், கைப்பந்துக் கொப்பான குதிகால்கள், சிறு தராசின் தட்டையொத்த வட்டமான பரடுகள், கன்னிக் கதலியைத் ஒத்த தொடைகள், நரம்பும் ரோமமும் கலவாது விளங்கும் கணைக்கால்கள்...” என்று நிறுத்திப் பெருமூச்சு விட்டார் நாரதர். விநாயகர் கண்களை

மூடியவாறு பாத வர்ணனையில் லயித்திருந்தார்.

"பாத வர்ணனைதான் முடிந் திருக்கிறது" என்று கூறி விநாயகரின் கவனத்தைக் கவர்ந்தார் நாரதர்.

"ஆஹா! பாதங்களே இவ்வாறு இருந்தால்?" என்ற கேள்விக் குறியை நாரதர் முன்னே நிறுத்த மேலும் கன்னிகைகளை வர்ணிக்க முற்பட்டார் கலகப் பிரியர்.

இடப்பக்கத்திற் பள்ளமான சுழிகளில்லாது எழில் வாய்ந்த மடிப்புகள். கொங்கைகளால் வருத்தமெய்தி மெலிவுற்றிருக்கும் மருங்குகள். ஆலிலை போன்ற வயிறு. தடையில்லாமல் பருத்துப் பூரித்து இடையினை வருத்தி நிமிர்ந்திருக்கின்ற ஸ்தனங்கள். நீலோற்பல மலரை வென்ற கைவிரல்கள். கிளியின் மூக்கைப்போன்று சிவந்து பிரகாசிக்கின்ற கைவிரல்களின் நகக் கூட்டங்கள், மிருதுவான தசையினால் மறைக்கப்பட்டு, வனப்பு மிகுந்திருக்கும் முதுகு, எழில்வாய்ந்திருக்கும் பிடரி, கமுகு மரத்தினை நாணச்செய்து அழகு நிறைந்திருக்கின்ற கண்டம், எழில்கொண்டு இன்பந்தருவனவாகிய மோவாய், சிறந்த பவளத் துண்டுபோல் திரண்டு இருபுறமும் குவிந்து அழகிய ரேகையொன்று பொருந்தி பிரகாசிக்கும் கீழ் அதரம். சற்று உயர்ந்து வனப்பு வாய்ந்திருக்கும் மேல் அதரம், பவளத்தைப் போன்று சிவந்திருக்கும் வாய், முல்லையரும்புகளை யொத்த முப்பத்திரண்டு பற்கள், எள்ளின் மலரை யொத்த நாசி, கண்ணாடி போன்ற கபோலங்கள், நீலமணி போல சிறப்புறக் கருத்து வெண்மை யொளி கொண்டு கடையிற் செவ்வரி பறந்து நெருங்கிய கருமை வாய்ந்த மெல்லிய ரோமங்கள் பொருந்தி விளங்குகின்ற நீண்ட விழிகள், வில்லைப்போன்று வளைந்த புருவங்கள். மலரிதழை ஒத்த செவிகள், கருமைகொண்டிழைத்ததுபோன்ற கூந்தல் இவ்வளவு அழகுடன் விளங்கும் கன்னிகைகள் மணப்பருவத்தை அடைந்திருக்கின்றனர்.

"மனம் வாக்கு காயங்கட்கு அளவுபடாத பரிபூர்ண ஸ்வரூபராகிய கணேசமூர்த்தியே! ஒப்பற்ற அம் மங்கையருடைய அழகின் சாயல்களை எவரால் வர்ணிக்க முடியும்? தங்கள் சம்மதம்பெற்று வரும்படி எனக்குக் கட்டளையிட்டார் படைக்கும் கடவுள்" என்று கூறினார் வீணகானப்பிரியரான தேவலோகத் தூதர்.

கணேசமூர்த்தி கடைக்கண்ணால் அரை விநாடி அவரைப் பார்த்தார். உள்ளக் கருத்தை அறிந்து கொண்ட அவர் கணேசரின் அடிகளில் வணங்கிப் புறப்பட்டார் பிருமன் வீட்டிற்கு. அங்கு இவர் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்த பிரும்ம குமாரிகளும் நாரதரை வரவேற்று உபசரித்தனர். நாரதரின் நாவிலிருந்து சொற்கள்

நகருமுன்பே நான்முகனின் நங்கையர்கள் அவர் கருத்தைப் புரிந்துகொண்டனர்.

“இம்மை மறுமைப் பயனை விளைவிக்கவல்ல அன்னையீரே! விநாயகக் கடவுளிடம் சென்று தங்கள் வனப்புக்களனைத்தையும் எடுத்துரைத்தேன். அவர் தங்களைத் திருக்கல்யாணம் செய்துகொள்ளத் திருவுள்ளம் கொண்டிருக்கிறார்” என்று கூறினார் நாரதர்.

அவர் வார்த்தைகளைக்கேட்டு ஆனந்தப்பரவசமானார்கள் அணங்குகள். பிறகு நாரதர் பிரும்மனிடம் சென்று விநாயகரின் உள்ளத்தை எடுத்துரைத்தார்.

பிருமன் களிப்படைந்து கைலாயத்திற்குக் கிளம்பினார். மூன்று கண்களையும் ஐந்து முகங்களையும் உடைய மூவருக்கும் முதல்வராய் வீற்றிருக்கின்ற சிவபெருமானைப் பணிந்து பலமுறை துதித்து நின்றார் பிரும்மா. சிவபெருமானும் வந்த காரணத்தைக் கேட்டார்.

“லக்ஷ்மியும் கண்டு நாணத்தக்க வனப்புடைய என் புத்திரிகளை கணேசமூர்த்திக்கு மணஞ் செய்து கொடுக்க ஆவல்கொண்டிருக்கிறேன். அதற்குத் தங்கள் அநுமதியைப்பெற வந்தேன்” என்றார்.

அதற்குச் சிவபெருமான் அருகிலிருந்த பார்வதியின் பக்கம் கண்களைச் செலுத்தினார். பார்வதியும், “விநாயகருக்குக் கல்யாணம் செய்வதால் யாவர்க்கும் நன்மையுண்டாகும். அதனால் விரைவில் மணத்தை முடிக்கவேண்டும்” என்று கூறினார்.

தாய்தந்தையர்களின் சம்மதத்தைப் பெற்று மனமகிழ்ந்தார் பிரமன். கருணை மதத்தைப் பொழியும் யானைமுகத்தோனை வணங்கி, “சர்வாநுக்கிரக காரணகர்த்தரே! அடியேன் இவ்வுலகங்களைச் சிருஷ்டிக்குமாறு தாங்கள் முன்னர் இரண்டு சக்திகளைக் கொடுத்தருளினீர். அச் சக்திகளைத் திருமணம் செய்துகொள்ள வேண்டும். ஆண்களோடு பெண்கள் மனங்கலந்து கூடினாலல்லாது தாங்கள் எனக்குக் கற்பித்தருளிய படைக்கும் தொழில் நடைபெறாது. தாங்கள் அதை நடத்திக் காண்பிக்க வேண்டும்” என்று பகர்ந்தார்.

அதற்கு அஷ்டமூர்த்தி வடிவமாகிய விநாயகர் இசைந்து, “பரமனே! நீர் கல்யாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளை நடத்திக்கொண்டிரும். யாம் அவ்விடத்திற்கு யாவருடனும் வருகிறோம்” என்று விடை கொடுத்தார்.

விடைபெற்றுக் கொண்ட பிரமன் வைகுந்தத்தை யடைந்து திருமாலை வணங்கித் தன் புத்திரிகளின் திருக்கல்யாணத்தை உரைத்தார். பிறகு சத்யலோகம் சென்று இந்திரனையும் மற்று

முள்ள ரிஷிகளையும் திருமணத்திற்கு வந்து சேரும்படி அழைத்தார்.

எல்லோருக்கும் திருமணஓலை அனுப்பப்பட்டது. தேவலோக சிற்பியான விசுவகர்மாவுக்கு அழைப்புப் பறந்தது. அவரும் வந்துசேர்ந்தார்.

திருக்கல்யாணத்தைக் காண வரும் விண்ணாட்டினர், பூமண்டலத்தினர், பாதாள வாசிகள் முதலானவர்கள் வீற்றிருப்பதற்குத் தகுதியான இடங்களையும் கல்யாண மண்டபத்தையும் சிருஷ்டிக்குமாறு உத்திரவிட்டார். விசுவகர்மாவும் மனக்களிப்புடன் திருமண வைபவத்திற்காக ஒரு நகரத்தையே படைக்க ஆரம்பித்தார்.

ஒரு நகரத்தை யுண்டாக்கி அதனைச் சுற்றிக் கனமாக ஓங்கியிருக்கின்ற மதில்களை எழுப்பினார். நாற்புறங்களிலும் விசித்திர முற்று விளங்கும் கோபுரங்களை எழுப்பினர். அதனுட்புறத்தில் கலியாண வைபவத்திற்கு வருபவர்கள் மன வெழுச்சியுடன் வசிக்கத்தக்க கூடங்களையும் உப்பரிகைகளையும் ஏற்படுத்தினர். விசாலமான வீதிகள், இடையிடையே சித்திர கூடங்கள், பளிங்கு மண்டபங்கள், சந்திரகாந்தத்திண்ணைகள் முதலியவைகளை வரிசை வரிசையாக வகுத்தார். கலியாணத்திற்குரிய பண்டங்களை வைக்கத்தக்க அறைகளை முடித்தார். தாமரை அல்லி முதலிய மலர்கள் மலிந்திருக்கும் தடாகங்களை வெட்டினர். வாழையளாவத் தழைத்தோங்கிக் குளிர்ந்த நிழலைப் பரப்பிக்கனிவர்க்கங்களைக் கொண்டிருக்கும் சோலைகளையும் உண்டாக்கினர். பரிமள மிகுந்த பல புஷ்பஜாதிகள் மலிந்திருக்கும் பூங்காவைச் சிருஷ்டித்தார். நகரத்தின் நடுவில் கலியாண மண்டபம் விசாலமாக அமைக்கப்பட்டது. அதன் மத்தியில் நவரத்தின மயமாகிய சிம்மாஸனம் ஒன்றை பல விசித்திரங்களோடு அமைத்தார். அதைச் சூழ்ந்து திருமால் முதலிய தேவர்களும் முனிவர்களும் களித்திருக்கத்தக்க பீடங்களை அணியணியாக வகுத்தார். பல நிறப்பட்டுகளால் விதானங்களை ஜோடித்தார். சொர்ணமயமாய்த் தோற்றுகின்ற மண்டபத்தின் மேற்புறத்தில் முத்துமாலைகள் புஷ்பசரங்கள் முதலியவைகளை தொங்கவிட்டார். நவரத்தினங்கள் இழைத்திருக்கும் சுவர்புறங்களிலும் ஓங்கி நிற்கும் பலவிதத் தூண்களிலும் பொற்பாவைகள் சித்திரப்பிரதிமைகள் நிலக்கண்ணாடிகள் முதலியவைகளைப் பதித்தார். வாழை, கமுகு, தெங்கின் குலை முதலிய சிறப்புக்களை வேண்டுமிடங்களில் அணிபெற நாட்டச் செய்தார். வீதிகள் தோறும் பனிநீரை தெளித்து புழுதியடக்கப்பட்டது. முற்றம் முழுவதும் சந்தனக் குழம்பினல் மெழுகிப் பல விசித்திரக் கோலங்களையும் இடுவித்தார். ஹோமகுண்டத்தையும் விசாலமாகப் படைத்து பிரும்மதேவரிடம் அறிவித்தார்.

பிரும்மதேவர் அவற்றின் சிறப்புக்களைக் கண்டு மகாமேருவும் கண்டு நாணத்தக்க பிரகாசத்தோடிருக்கும் இந்நகரத்தின் அழகைக்காண இந்திரனைப்போல் ஆயிரம் கண்கள் தனக்கு இல்லையே என்று வருத்தமுற்றார். தேவத் தச்சரால் நிருமித்த நகரத்தின் சிறப்புக்களை அளவிட்டு உரைக்க முடியாமல் தவித்தார்.

திருமண ஓலைகள் எல்லோருக்கும் சேர்ப்பிக்கப்பட்டன. மணவோலையை வாங்கிப் படித்து அகமகிழ்ந்தனர். சந்திர சூரியர் முதலிய நவக்கிருகங்கள், முப்பத்து முக்கோடி தேவர்கள் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள், கருடர், கந்தர்வர், சித்தர், வித்தியாதரர், கின்னரர், கிம்புருஷர், ஆகாய வாசிகள், பாதாளவாசிகள், நாகராஜர்கள் எல்லோரும் தங்கள் தங்கள் மனைவிமக்கள் சுற்றத்தாருடன் ஏகமாகத் திரண்டு கணேசமூர்த்தியின் திருமண ஸம்பரமத்தைக்கண்டு களிக்க நகரத்தை வந்தடைந்தனர்.

வந்த விருந்தினர்களை வரவேற்று கவனித்து உணவுஉடைகளை அளிக்கும்படி பிரும தேவர், சங்கநிதி, பத்ம நிதி, சிந்தாமணி, பஞ்ச தரு, காமதேனு முதலானவர்கட்குக் கட்டளையிட்டார். காமதேனு கொடுக்கும் உண்டிகளையும் கற்பகத்தரு அளிக்கின்ற அணிகலன்களையும் பெற்றுக்கொள்வதனால் வந்தவர்கள் தங்கள் பெயரில் மாத்திரம் வேறுபட்டிருந்தார்களே யன்றி உருவத்தில் ஒருவரை யொருவர் ஒத்திருந்தனர்.

பஞ்ச தருக்கள் அடர்ந்த சோலைகளால் பல அதிசயங்களை உண்டாக்க அதில் திளைத்திருந்தனர் சிலர். பருவ மங்கைகளும் பருவம் பொருந்திய மைந்தர்களும் சோலைகளில் ஆடிப்பாடி மகிழ்ந்தனர். சில பெண்கள் அம்மானை யாடினர்கள். சிலர் ஊஞ்சலாடினார்கள். சிலர் கிளிப்பிள்ளைகளினுடைய மெல்லியச் சொற்களைத் தங்கள் சொற்களால் கீழ்ப்படுத்தினர்கள் ஆடவர்களில் சிலர் யானைகளோடு யானைகளையும், குதிரைகளோடு குதிரைகளையும், ஆடுகளோடு ஆடுகளையும், காடைகளோடு காடைகளையும், கோழிகளோடு கோழிகளையும் பொருவித்து வெற்றிகொண்டு களிப்படைந்தார்கள். வசிஷ்டர் முதலான மகா தபஸ்விகள் தருமவாதம் செய்தனர். மற்றும் பல முனிபுங்கவர்கள் அர்த்தவாதத்தில் ஈடுபட்டனர். இன்னும் பல தவசிரேஷ்டர்கள் காமவாதத்திலும் மோக்ஷவாதத்திலும் முனைந்து நின்றார்கள். சனகர் முதலானவர்கள் பரதத்துவ ஸ்வரூபியாகிய சிவபெருமானது ஆகம பிரமாணத்தினாலும் மேலாகிய பதிபசு பாசங்களின் தன்மையை விளக்கிக்கொண்டிருந்தார்கள். அணிமாதி அஷ்ட சித்திகள் பெற்ற சித்தர்கள் பல அற்புதங்களை நிகழ்த்தி தம்மை

வணங்காதவர்களை வணங்கச் செய்தனர்.

கலியாண ஏற்பாடுகள் குறைவின்றி நிறைவேறியிருப்பதைக் கண்ட நாரதர் மனங்களித்து விரைந்தெழுந்து வெள்ளியங்கிரியைச் சேர்ந்தார். அங்கு சிவபெருமான் சந்நிதியை யடைந்து வணங்கி, "தயாநிதியே! விநாயகப் பெருமானின் திருக்கல்யாணத்திற்கான சகல அலங்காரங்களும் நிறைவேறியிருக்கின்றன. தேவர்களும் முனிவர்களும் வந்து சேர்ந்திருக்கிறார்கள். தாங்கள் எழுந்தருளவேண்டும்" என வேண்டினர். சிவபெருமானும் உடனே விநாயகரை யழைத்து, "கல்யாண கோலத்தைக் கொள்ளுக" என்று கூறினர்.

விநாயகர் தெய்வகங்கையில் நீராடி, பீதாம்பரத்தை உடுத்தி பரிமள சந்தணத்தைப் பூசிக் கொண்டார். ஒளிபொருந்திய நவமணிகளை வரிசையாகப் பதித்த பொன் முடியைச் சூட்டிக்கொண்டார். பொன் முடியிலணிந்த மூன்றும் பிறையினது நிலவென்று சொல்லும்படி ஒப்பற்ற நெற்றியில் வெண்திருநீற்றை யணிந்து அதன் நடுவில் மிக்க வாசனை கலந்திழைத்திருக்கின்ற சிவந்த திலகமிட்டுக் கொண்டார். அழகு நிறைந்த மணிகளாற்செய்யப்பட்ட குண்டலங்களைக் காதில் அழகுற அணிந்துகொண்டார். கண்டத்தில் தாளமாலைகளையும் பொன்னாபரங்களையும் அணிந்து கைகளில் கடகங்களைப் பூண்டு விரல்களில் மோதிரங்கள் அணிந்து திருவடிகளில் சிலம்புகளைப் பூண்டார்.

விநாயகரின் மணக்கோலத்தைக் கண்டு களித்த சிவபெருமான் ஐராவதத்தை அவருக்குக் கொடுத்து தானும் பார்வதியும் ரிஷபவாகனத்தில் எழுந்தருளினார். வேலாயுதத்தைக் கையில் ஏந்தி முருகக் கடவுள் மயில் வாகனத்தில் வந்தார். அஷ்டவசுக்கள் அஷ்டதிக் பாலகர்கள் முதலானவர் ஸர்வாலங்கார பூஷிதராய் தங்கள் தங்கள் வாகனத்திலமர்ந்து புடை சூழ்ந்தார்கள்.

நிகும்பன், கும்பன் முதலான பூதகணத் தலைவர்களோடு நந்தி கேசுவரரும் நெருங்கினர். யாவரும் துதித்தற்குரிய முதன்மை பெற்றிருக்கும் பிரணவ மந்திரம், வேதங்கள், அவற்றின்கிளைகள், காலங்கள், ராசிகள், ஸப்த கோடி மகா மந்திரங்கள் முதலியவற்றோடு இருபத்தெட்டு ஆகமங்களும் ஒவ்வொரு தேவ வடிவமாகத் திரண்டு வந்தன.

இவ்வாறு சகல பரிவாரங்களும் புடை சூழ்ந்து நெருங்கிய சமயத்தில் விநாயகர் ஐராவதத் திலமர்ந்து பூதகணங்கள் புகழ் பாட, மாதவர் வேதமோத, சந்திரவட்டக் குடைகள் ஆகாய வெளியை மறைக்க பலவித பட்டுக் கொடிகள் பறக்க, சிலர் சாமரங்கள் வீச, பஞ்சவாத்யங்கள் முழங்க கிளம்பி வந்தார் விநாயகர்.

பிரமன் விஷ்ணு முதலானவர்கள் எதிர்கொண்டழைத்து கற்பக மலரைத் தூவி நகர ராஜ வீதி வழியாக அழைத்துக் கொண்டு கல்யாண மண்டபத்தில் எழுந்தருளச் செய்தார்கள்.

சரஸ்வதிதேவி பொன் கலசத்தில் கங்கை நீரை ஏந்தி வந்து கணேசரின் திருவடிகளை அலம்பி மெல்லிய ஆடை கொண்டு ஒற்றினுள்.

சிவபெருமானும் உமாதேவியும்ஓராசனத்திலிருந்தனர். முருகக் கடவுள் முதலியவர்கள் வெவ்வேறு ஆசனங்களில் வீற்றிருந்தனர். விநாயகர் மண்டபத்தின் நடுவே அமைந்திருந்த மாணிக்க சிம்மாதனத்தில் அமர்ந்தார். தேவ மாதுகள் பாகு, வாழைக் கனி, தெங்கின் கனி முதலியவைகளையும் அணிகலன்கள், பூமாலைகள், சித்திரப் பட்டுகள் முதலான மங்கள வரிசைகளைத் தனித்தனியாக பொன் தட்டுகளில் நிரப்பிக் கையில் ஏந்திவந்து சாமரம் முதலிய அஷ்ட மங்களத்துடன் பல வாத்யங்கள் முழங்க நகர வீதியை வலமாக வந்து கல்யாண மண்டபத்திற்கு வந்து விநாயகரின் முன் வைத்து வணங்கி நின்ருர்கள்.

பயனற்றது

மனக் கவலை கொண்டு வாடுபவர்களால் நிறைந்தது இந்தப் பிரபஞ்சம். "மனக் கவலையால் பயனுண்டோ" என்ற ஒரு ஆராய்ச்சி மூலம் ஒருமேல் நாட்டு சர்வகலாசாலைக்குக் கிடைத்த தகவல்கள் பின் வருமாறு :—

மனிதனுக்குள்ள கவலைகளில் 40 சதவிகிதம் நடக்கவே முடியாத விஷயங்களைப் பற்றியதாகும்.

22சதவிகிதம் பயனில்லாத மிகவும் அற்பமான விஷயங்களைப் பற்றியதாகும். 30 சத விகிதம் எவராலும் சற்றேனும் மாற்றமுடியாத விஷயங்களைப் பற்றியதாகும். எட்டு சத விகிதம் கவலைப்படாமல் நிம்மதியோடு யோசனைசெய்து மனித முயற்சி மூலம் பெறலாமென்ற விஷயங்களைப் பற்றியதாகும்.

இந்த உண்மைகளைப் பற்றி அறிந்தவர்கள் மனக் கவலைகளுக்காளாவார்களா ?

அந்தப்புரத்திலிருக்கும் சித்தி புத்தி என்ற கன்னியர்களை சரஸ்வதி, இந்திராணி, லக்ஷ்மி, அதிதி, அநுசூயை, அருந்ததி என்ற தேவமாதர்கள் அறுவரும் புடைசூழ்ந்து பற்பல ஏவல்களை புரிந்துவர திருமஞ்சனமாட்டினுர்கள். பரிமளம் மிகுந்த தைலத்தைக் கூந்தலில் தடவி பல மாதர்கள் மங்கள வாழ்த்துக்கள் கூற நலங்கிட்டு கங்கைநீரில் திருமஞ்சனம் செய்துவைத்தார்கள். பனியை நிகர்த்த ஆடைகளினுல் திருமேனியில் ஈரம்

புலர்த்தி பட்டாடைகளை உடுத்தினார்கள். கூந்தலுக்கு அகில் புகையிட்டு ரத்னமாலைகளையொத்த பன்னிற மலர் மாலைகளைச் சூட்டிக் கொண்டையிட்டார்கள்.

உச்சிக் கொண்டையில் முல்லை மாலைகளைச் சூழ வணிந்து முத்துமாலைகளைத் தொங்கவிட்டார்கள். சிவந்த நிறத்தையுடைய மணிகளை அழகாக நெற்றியில் அணிவித்தார்கள். திலகமிட்டுக் கண்களுக்கு அஞ்சனந் தீட்டினார்கள். தோள்களுக்கு வாகுவளையத்தினையும் கைகட்கு வளையல்களையும்விரல்கட்கு மோதிரங்களையும் அணிவித்தார்கள். பவள மாலை, முத்துமாலை, வச்சிர மாலை, கோமேதக மாலை முதலியவைகளோடு அணிபெறக் கோத்த பூமாலைகளையும் போட்டுவித்தார்கள்.

பின்னர் சிவிகையில் ஏறி பலவித விண் மாதர்களும் தோழியர்களும் சூழ்ந்துவர கல்யாண மண்டபம் வந்து கற்பகத்தருவின் இருமருங்கிலும் படர்ந்திருக்கின்ற காமவல்லிக் கொடி போல கணேசருடைய பக்கத்தில் அமர்ந்தார்கள்.

பிரமன் பொன்தட்டில் விநாயகருடைய திருவடிகளைச் சேர்த்துத் தன் தேவி தங்கக் குடத்தில் சேர்த்து வைத்திருக்கும் கங்கா ஜலத்தை வார்த்து வர, தான் சுத்திசெய்து, ஆடையால் ஈரத்தைத் துடைத்து சந்தனக் குழம்பைத் தடவி பஞ்சதருக்களின் மலர்களைக்கொண்டு அர்ச்சித்தார். தனது புத்திரிகளாகிய சித்தி புத்திகளின் திருக்கரங்களைச் சேர்த்து, "சுவாமி! அடியேன் அருமையாக வளர்த்த இம்மங்கையரைத் தேவரீர் அங்கீகரித்து ஆட்கொள்ளவேண்டும்" என்று சொல்லி சரஸ்வதி தேவியால் வார்க்கப்பட்ட தீர்த்தத்தால் தாரை வார்த்துக்கொடுத்தார்.

மங்களபேரி, முரசம், மத்தளம், டமா, குடமுழா முதலிய பல மங்கள வாத்யங்கள் அண்டங்கள் அதிர்ந்து திசைகள் செவிடுபட தாம்தாம் எனமுழங்கியது. தேவர்கள் கின்னர கிம்புருடர் முதலிய ஸகல ஜனங்களும் மனவெழுச்சியுடன் கரங்களைக் கொட்டி ஜயஜய எனப் போற்றினர். ஏகர்தசருத்திரர் அஷ்டதிக்பாலகர்கள் முதலியவர் மங்கள வாழ்த்துக்கூறினர். அத்திரி, ஆங்கிரஸ், கௌதமர்

நாய் ஜோதிடம்

ஒரு அமெரிக்கப் பத்திரிகையில் பிரசுரமான விளம்பரம்:

"உங்கள் நாயின் பிறந்த தினத்தை தெரிவித்தீர்களானால் அதன் ஜாதகத்தை கணித்து அனுப்புகிறோம். இவ்வாறு உங்கள் நாயை நன்கு தெரிந்துகொள்ளலாம். ஜாதகம் கணிப்பதற்கு சார்ஜ் ரூபாய் ஐந்து."

முதலிய முனிபுங்கவர்கள் வேத மங்களங்களால் துதித்து வாழ்த்தினர். ஆகாயத்தில் தேவதுந்துபிகள் கணகண வென்று சப்தித்தன. சனக மகாமுனிவர் ஓம குண்டத்தைச் சேர்த்து சுற்றிலும் அந்தணர்களை யிருத்தி தர்ப்பைகளைப் பரப்பி அக்ஷதைகளை யிறைத்து மந்திர மலர்களால் பிரணவம் முதலிய தேவதைகளை வழிபட்டு முத்தீக்களையும் மந்திர பூர்வமாக ஹோம குண்டத்தில் எழுப்பி விநாயகரை சித்தி புத்தி இருவர்களுடன் எழுந்தருளச் செய்தார். ஹோமங்கள் முடிவடைந்தன. மணமகனுக்கு மகாவிஷ்ணு தோழராயிருந்து கைலாகுக் கொடுத்து பீடத்திலிருந்து எழுப்பினர். லக்ஷ்மி முதலிய அறுவர்கள் சித்தி புத்திகளின் கனிட்ட விரல்களை விநாயகருடைய கனிட்ட விரல்களால் பற்றச் செய்தார்கள். மும்முறை ஹோமத் தீயை வலம் வந்து வட பாரிசாதத்தில் சேர்ந்து மணப் பெண்களின் திருவடிகளைத் தமது திருக்கரத்தால் தூக்கித் தூக்கி நிலத்திலிட்டு முடிவில் அம்மியின் மேல்வைத்து பதிவிரதா சிரோமணியாகிய வசிஷ்டரின் பத்னி அருந்ததியை எதிரில் அழைத்து அவர் மீது தமது திருக்கண் சாத்தினார்கள். எல்லோர் முன்னிலையிலும் திருக்கல்யாண வைபவம் முடிந்தது. விநாயகர் தமது தேவியரோடு தாய் தந்தையின் திருவடிகளை வணங்கினார். தாய் தந்தையர் ஆசீர்வதித்து மனம் பூரித்து ஆசனத்தில் இருத்தி திருமாலை நோக்கினர். திருமாலும் சிவபிரானை வணங்கி தேவேந்திரன் எடுத்து நீட்டுகின்ற தாம்பூலாதிகளை எல்லா தேவர்கட்கும் முறையாகக் கொடுத்து வந்தார்.

இவ்வாறு திருக்கல்யாண சம்பிரமங்கள் முழுவதும் நிறைவேறிய பின்னர் தேவர்கள் முனிவர்கள் யாவரும் சிவபெருமான் பார்வதிதேவியரோடு வீற்றிருக்கின்ற சபையைச் சேர்ந்து வணங்கி விடைபெற்றுக்கொண்டனர்.

சித்தி புத்தி மணாளராகிய கணேசமூர்த்தியை அழைத்துக் கொண்டு பார்வதி தேவியுடன் சிவபெருமான் கைலைக்கு எழுந்தருளினார்.

—பைங்கா நாடு

ASOKA SCENTED BETELNUT POWDER

மானத்திற்கு ஆதாரம் மண்டை ரோமம்!

•

குறும்பு புரிபவர்களை அடக்க எவ்வளவோ விதத் தண்டனைகளைப் பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். இவற்றில் சில, மிக விநோதமானவை. பழங்காலத்தில் திருடர்களை அவமானப் படுத்துவதற்கு அவர்கள் தலைகளை மொட்டையடித்து செம்புள்ளிகள் கரும்புள்ளிகள் குத்தி கழுதை மீது வாலை நோக்கி உட்கார வைத்து ஊர்வலம் வரச்செய்வது வழக்கமாயிருந்தது.

தலையை மொட்டையடிப்பது, உடலெல்லாம் புள்ளிகள் குத்துவது, கழுதை மீது வால் பக்கமாய் உட்காரச்செய்வதென்பதெல்லாம் பகுத்தறிவு படைத்த மனிதனுக்கு அவமானமானதனாலேயே இவை குற்றம் புரிந்த மனிதனுக்குத் தண்டனையாகிறது.

தலையை மொட்டையடிப்பது இப்பொழுதும் வாலிபர்களுக்கும் ஒரு தண்டனையாக மேல் நாடுகளில் இருந்துவருகிறது.

அநேக சட்ட நிபுணர்கள் வாலிபக் குற்றவாளிகளையடக்குவதற்கு, அவர்களின் தலைகளை மழுங்க மொட்டையடிப்பது ஒரு சிறந்த வழியென்று அபிப்பிராயப்படுகிறார்களாம்.

இங்கிலாந்தில் பிரபுக்கள் சபையில் கூட ஒரு அங்கத்தினர் வாலிபக் குற்றவாளிகளுக்கு ஒரு பாடங் கற்பிக்க அவர்கள் தலைகளை மொட்டையடிப்பது சிறந்த வழியென்று சர்க்காருக்கு யோசனை கூறியுள்ளார்.

இந்தியாவில் மட்டுமல்ல, மற்ற அநேக தேசங்களிலும் குற்றவாளிகளையடக்குவதற்கு இந்த வழியைக் கையாண்டிருக்கிறார்கள்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவிலுள்ள ஒரு வாலிபக் குற்றவாளி தன் வழக்கு விசாரணையின்போது கூறிய தகவல்களிலிருந்து, அவனது அழகான தலை ரோமத்தை மிக அக்கறையோடு வளர்த்துள்ளானென்று தற்செயலாய் நீதிபதிக்குத்

தெரியநேர்ந்தது. வழக்கு விசாரணை முடிந்ததும் நீதிபதி குற்றவாளியை நோக்கி "இந்தக் குற்றத்திற்கு உன் தலையை மொட்டையடித்துவிடும்படி தண்டனை யளிக்கிறேன்" என்றுதீர்ப்பளித்தார்... இதைக்கேட்டதும் வாலிபன் அழத்தொடங்கினன். நீதிபதியின் காலில் விழுந்து "தான் சிறைவாசஞ் செய்யத் தயார்" என்று மிகவும் மன்றுடிக் கேட்டுக்கொண்டான். இவனைச் சீர்திருத்த வேண்டுமென்று தீர்மானித்த நீதிபதி இவன் வார்த்தைகளுக்குச் செவி சாய்க்காமல் தலையை மொட்டையடிக்கஉத்தரவிட்டார்.

வாலிபர்களுக்கே தலையை மொட்டையடிப்பதைப் பற்றி இவ்வளவு வெறுப்பும் பயமுமிருக்குமானல் வாலிபப் பெண் குற்றவாளிகளுக்கு எவ்வாறிருக்குமென்று சொல்லவேண்டியதில்லையே! ஜெமெய்க்கா ராஜ்யத்துச் சர்க்கார் ஒரு நூற்றூண்டுக்கு முன்பு சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட வாலிபப் பெண் குற்றவாளிகளின் தலைகளை மொட்டை யடித்துவிட வேண்டுமென்று உத்தரவிட்ட பின்பு அங்கு ஸ்திரீ குற்றவாளிகளின் எண்ணிக்கை மிகவும் குறைந்துவிட்டதாம்.

பிரிட்டனில் மேற்கூறிய ஜெமெய்க்கா தகவல் தெரிந்தும் ஸ்திரீ குற்றவாளிகளின் தலைகளை மொட்டையடிக்கக்கூடாதென்ற உத்தரவு அமலுக்கு வந்து அநேக வருஷங்களாகின்றன. குற்றம் புரிந்த ஸ்திரீகள் சிறைவாசம் அனுபவித்த பின்னர் நன்னடத்தையுள்ளவர்களென்று பேர் வாங்குவதற்கு அவர்கள் தலைகளை மொட்டையாக்குவது பெரும் தடங்கலாயிருக்குமென்பதே பிரிட்டிஷ் சர்க்காரின் அபிப்பிராயம்.

ஸ்திரீகள் அழகின் ஒரு அம்சமாக மட்டுமல்ல, பொதுவாக ஆண்—பெண் வாழ்க்கையிலேயே தலைரோமம் எவ்வளவு முக்கியத்துவம் பெற்றது!

ஹிந்து மதத்திலும் ஆண்டவனைக்கண்ட முஸ்லீம்

ஷாஜஹான் சக்கரவர்த்தியின் மூத்த புதல்வனை தாராஷிக்கூ என்ற இளவரசன் 1615-ம் வருஷம் மார்ச் மாதம் 20-ம் தேதி பிறந்தார். இவருடைய இளம்பிராயத்தைப் பற்றிய தகவல்கள் சரித்திரக்காரர்களுக்கு அவ்வளவாக கிடைக்கவில்லை. இவருக்குக் கல்வி கற்றுக்கொடுத்த முல்லா அப்துல் லத்தீப் என்பவர்தான் இவரது அறிவுப் பசியைக் கிளறிவிட்டார். இஸ்லாமிய இலக்கியத்திலுள்ள வேதாந்த நூல்களனைத்தையும் இவர் இளம் வயதிலேயே கற்றறிந்திருந்தார், ஞானத்தையே சதா தேடிக் கொண்டிருந்த இந்த இளவரசன் சம்ஸ்கிருத பாஷையிலுள்ள ஹிந்து வேதாந்த நூல்களையும் கற்றறிந்ததில் அதிசயமில்லை. தாராஷிக்கூ வகுப்புப் பேதமின்றி எல்லா பண்டிதர்களையும் போற்றி வந்தார். தோற்றத்தில் வேற்றுமை காணப்படும் ஹிந்துமதத்திலும் இஸ்லாம் மதத்திலும் உண்மையொன்றேதான் என்ற கொள்கையைக் கொண்டவர். ஒரே ஆண்டவனை அடைவதற்குள்ள இரு மார்க்கங்கள்தான் இஸ்லாம் மதமும் ஹிந்து மதமுமென்று இவர் துணிவோடு பிரசாரஞ் செய்ததின் பலனாக வைதீகமான முஸ்லீம்கள் இவரையொரு மதத் துரோகியென்று அழைக்கத்தொடங்கினர்கள். அந்தக் காலத்தில் சர்மத்ஷஹீத் என்ற தெய்வ பக்தியில் மெய்மறந்த ஒரு இஸ்லாமிய பக்தர் தாராஷிக்கூவைச் சந்தித்தார். இளம் பருவத்திலேயே வேதாந்தத்தில் பற்றுக்கொண்ட தாராஷிக்கூவிற்கு பக்தி ரசத்திலேயே சதா மூழ்கிக்கொண்டிருந்த இந்த பக்கீரின் தொடர்பு மிகவும் குதூகலமளித்தது. பிரபஞ்ச வாழ்க்கையின் சிகரத்தையே சர்மத்ஷஹீத் அடைந்துவிட்டாரென்றுதான் தாராஷிக்கூ கருதியிருந்தார். எவ்வளவோ முயற்சிசெய்து தானும் அம்மாதிரி நிலையை யடையவேண்டுமென்ற அபிப்பிராயத்தை அவர் சற்றும் ஒளிக்கவேயில்லை.

தன் இளைய சகோதரனும் தன்னை மீறி ராஜ்யத்தை ஆண்டு வந்தவருமான அவுரங்கஜீப்பினால் இவர் மாளும்படி நேரிட்டது.

இஸ்லாமிய வேதாந்த நூல்களை மட்டுமே இவர் இயற்றியிருந்தால் இஸ்லாமிய இலக்கியத்தைப் படிப்பவர்கள் மாத்திரந்தான்

இவரைப் பற்றி அறிந்திருக்கக்கூடும். இந்தியாவில் அநேக நூற்றுண்டுகளாக மிகச் சிறப்புடன் விளங்கிவந்துள்ள ஹிந்து மதத்திலும் அநேக தத்துவங்கள் உள்ளன என்ற கொள்கையோடு இவர் சம்ஸ்கிருத நூல்களையும் ஏராளமாகக் கற்றுக்கொண்டார்.

காசியிலுள்ள சம்ஸ்கிருதப் பண்டிதர்கள் ஹிந்து இலக்கியங்களை கற்றுக்கொள்வதற்கும் வேதாந்த தத்துவங்களை அறிந்து கொள்வதற்கும் மனமார்ந்த உதவி செய்தனர். ஐம்பது உபநிஷத்துக்களை பர்ஷியப் பாஷையில் இவர் மொழிபெயர்த்ததைத் தவிர யோகவாஸிஷ்டம், பகவத்கீதை இவையிரண்டையும் இரானிய பாஷையில் மொழிபெயர்த்துள்ளார். இதைத் தவிர இரானிய பாஷையில், "மஜ்மணீ பஹ்ரெயின்" மகா சமுத்திரங்களின் சங்கமம். என்ற பெயர்கொண்ட ஒரு நூலில் இஸ்லாம மதத்திலும் ஹிந்து மதத்திலும் உள்ள தத்துவங்களையெல்லாம் எடுத்துரைத்துள்ளார். இந்த நூலைப் படிப்பவர்களுக்கு இவ்விரண்டு மதங்களின் அடிப்படைத் தத்துவங்களெல்லாம் ஒன்றே தானென்று நன்கு விளங்கும். குர்ஆனிலுள்ள தத்துவங்களுக்கும் ஹிந்து மதத் தத்துவங்களுக்கும் வித்தியாசமில்லையென்று இவர் கூறியதை முஸ்லீம் பண்டிதர்கள் ஹிந்து மதம் இஸ்லாம் மதத்தை விட மேலானதென்று இவர் கூறியிருப்பதாகத் தவருகப் பிரசாரஞ் செய்துவந்தனர்.

இரானிய பாஷையில் தாராஷிக்கூவின் உபநிஷத்து மொழி பெயர்ப்பு இலக்கியச் சரித்திரத்திலேயே மிக முக்கியத்தும் வாய்ந்தது. 1775-ம் ஆண்டில் இந்நூலை டில்லியிலிருந்த பிரெஞ்சு சர்க்காரின் தூதர் பாரிஸிலுள்ள ஒரு பிரெஞ்சுப் பண்டிதருக்கு அனுப்பி வைத்தார். இந்தப் பிரெஞ்சுப் பண்டிதர் தாராஷிக்கூவின் இரானிய பாஷையின் மொழிபெயர்ப்பை பிரெஞ்சு பாஷையிலும் லத்தீன் பாஷையிலும் மொழிபெயர்த்தார். இவ்வாறுதான் நமது உபநிஷத்துக்கள் மேல் நாடுகளில் முதல் முதலாகத் தோன்றியது. நம் நாட்டிலுள்ள இரு முக்கிய மதங்களுக்கு ஒரு ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்தவரும் பாரத நாட்டின் புராதன இலக்கியத்தை வெளிநாடுகளுக்கு அறிமுகப்படுத்தத் தொடங்கியவருமான தாராஷிக்கூ இந்திய சரித்திரத்தில் ஒரு சிறப்பான ஸ்தானத்தைப் பெற்றவராகும்.

—Condensed from *The Hindu*

[பத்திரிகை உலகில் நிகழ்ந்த ஒரு புகழ்பெற்ற சம்பவம்]

சீர்திருத்தத்திற்குச் சிறைத் தண்டனை

●

பத்திரிகைக்காரர்களென்றால் எழுத்து வேலையில் மட்டுந்தான் ஈடுபடுபவர்களென்பது பொதுஜன அபிப்பிராயம். அன்றாடம் கிளம்பும் சில முக்கியமான பிரச்னைகளைப் பற்றி அபிப்பிராயங்களைத் தலையங்கங்கள் மூலம் வெளியிடுவதோடு அவர்கள் கடமைகள் முடிந்துவிடுகிறதென்று தான் அநேகர் கருதுகின்றனர். பெரும்பாலான பத்திரிகைக்காரர்களைப் பற்றி இந்தக் கருத்து வாஸ்தவமே. தொண்டில் தீவிரமாக ஈடுபட்டு எழுத்து வேலையோடு தன் கடமை பூர்த்தியாகி விட்டதென்று கருதாத பத்திரிகையாளர்களுமிருந்திருக்கின்றனர். இவர்களில் ஒருவராகும் டபிள்யூ. டி. ஸ்டெட் (W. T. Stead) என்பவர்.

இவர் லண்டனில் "பால் மால் கெஜட்" என்ற தினசரிப் பத்திரிகையின் ஆசிரியராயிருந்தார். "ரெவ்யூ ஆப் ரெவ்யூஸ்" (Review of Reviews) என்ற மாத சஞ்சிகையை இவர் தொடங்கி சிறிது காலம் உலகம் போற்றுமளவுக்கு நடத்தி வந்தார். அந்தக் காலத்தில் இந்த மாதாந்தர சஞ்சிகை மிகப் புகழ்பெற்றதும் பல்லாயிரக் கணக்கான வாசகர்களைப் பெற்றதுமாய் விளங்கி வந்தது.

இருபதாம் நூற்றாண்டு வரையில் இங்கிலாந்திலும் ஸ்திரீகள் நிலைமை சற்று பரிதாபகரமாகத்தானிருந்தது. சமூக விஷயங்களில் சகல உரிமைகளைப் பெற்றிருந்தாலும் இலக்கியம், சங்கீதம், நாடகம் போன்ற துறைகளில் உன்னதமான ஸ்திதியைப் பெற்றிருந்தாலும் ஸ்திரீகளுக்குச் சட்டப்பிரகாரம் ஆண்களோடு சம அந்தஸ்து இல்லாமலிருந்தது. உதாரணமாக 13 வயதான எந்தப் பெண்ணுக்கும் தன் நடத்தையைக் கெடுக்க அனுமதி அளிக்கும் உரிமை இருந்தது. இந்த நிலைமையினால் விபசாரத் தொழிலில் பல்லாயிரக் கணக்கான யுவதிகள் அகப்பட்டுக்கொண்டிருந்தனர். பொதுஜனங்களின் ஏழ்மை ஸ்திதியினால் அநேக பெற்றோர்கள் கிடைத்த பணத்திற்குத் தங்கள் பெண் குழந்தைகளை விற்றுக்

கொண்டிருந்தார்கள். தரகர்களின் சூழ்ச்சிகளாலும் மக்களின் வறுமையினாலும் இந்த நிலைமையை மாற்ற சமூக ஊழியர்கள் எவ்வளவோ முயற்சி செய்தும் பயனில்லை.

இதைப் பற்றிப் பத்திரிகைகளிலோ பொதுக்கூட்டங்களிலோ பிரசாரஞ் செய்யாமலே இருந்தார்கள். சிறு பெண்கள் நாசமடைவதைப் பற்றிப் பேசுவதையே கேவலமாகத் தான் கருதி வந்தார்கள். இதனால் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த பெண் குழந்தைகளுக்கு நேரிட்டுக்கொண்டிருந்த இகழ்ச்சிக்கும் அவமதிப்புக்கும் அளவில்லாமலிருந்தது. இந்த விஷயத்தைப் பற்றி லண்டன் நகர சபையைச் சேர்ந்த ஒரு அதிகாரி டபிள்யூ. டி. டிஸ்டெடிடம் விரிவாகக் கூறினார். ஸ்டெட்டிற்கும் இந்த விஷயம் அதுவரையிலும் தெரியாமல்தானிருந்தது. அதனால் லண்டன் முதலிய நகரங்களிலுள்ள நிலைமையைப் பற்றிக் கேட்டதும் ஸ்டெட் அளவற்ற ஆத்திரமடைந்தார். இந்த நிலைமையை மாற்றி பாமர குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கும் ஒரு கௌரவ ஸ்தானத்தையளிப்பதெப்படியென்று தீவிரமாக யோசனை செய்தார். போலீஸ் இலாகாவைச் சேர்ந்த உயர்தர உத்தியோகஸ்தர்களிடையேயுள்ள தன் நண்பர்களிடமும் இதைப் பற்றி விசாரித்தார்.

அவருக்குப் புரியாமலிருந்த பெரும் புதிர் இதுதான். "சிறுமிகளை, கெட்ட நடத்தைகளுக்குள்ளாக்கும் ஸ்தலங்களுக்குக் கொண்டுவருவதை அவர்கள் எதிர்த்தால் அவர்களுக்கு எவரும் உதவி புரியமாட்டார்களா? அவர்கள் ஐயோ வென்று அலறினால் எவரும் அவர்களைப் பாதுகாக்க முன் வரமாட்டார்களா?" என்று அவர் ஒரு போலீஸ் உத்தியோகஸ்தரை கேட்டார்.

இதற்குப் போலீஸ் உத்தியோகஸ்தர் கொடுத்த பதில், "மாட்டார்கள். பக்கத்து வீட்டில் இருப்பவர் கூட இந்தப் பெண்களின் ஐயோ என்ற அலறலைக் கவனிக்கமாட்டார்கள். ஏனென்றால் இதெல்லாம் வெகு சகஜமாய் நடக்கும் காரியங்கள்" என்றார்.

இதைக் கேட்ட டபிள்யூ. டி. ஸ்டெட். மிகவும் வியப்புற்றார். மனிதர்கள் இப்படி மிருகத் தன்மை படைத்தவர்களாவென்று அதிசயமுற்றார்.

இந்த நிலைமையை மாற்றுவதற்கு அவர் கண்ட உத்தம வழி என்னவென்றால் பார்லிமெண்டே ஒரு சட்டமியற்றி அதன் பிரகாரம் பெண்களுக்கு "சம்மதம் யளிக்கும் வயதை" (Age of Consent) 13-லிருநது சற்று உயர்த்துவது தான் பார்லிமெண்ட் அங்கத்தினர்களை விசாரித்த பொழுது, பொதுமக்களே அக்கறை கொள்ளாத இவ்விஷயத்தில் பார்லிமெண்டு தலையிடாதென்று

தெரியலானர். அப்படியானல், இம்மாதிரி ஒரு சட்டமியற்றி இளம் பெண்களைப் பாதுகாப்பதற்கு பார்லிமெண்டை விரட்டியடிக்க வேண்டுமென்று தீர்மானித்தார்.

அப்பொழுது நிலவியிருந்த சட்டத்தின் குற்றங்குறைகளை அம்பலமாக்கும் வண்ணம் எவராவது நடந்துகொண்டால் இம் மாதிரி சட்டமியற்றுவது சாத்தியமாகுமென்று டபிள்யூ. டி. ஸ்டெட்டிற்குத் தோன்றியது.

சட்டப்பிரகாரம் 13 வயதான பெண் ஒரு வியாபாரப் பொருள் போலத்தான். வியாபாரச் சரக்கை எவருக்கும் தன்னிஷ்டப்படி வாங்கி, விற்கும் உரிமையுள்ளது போல்தான் 13 வயதான பெண்ணும். இந்தச் சரக்கை விற்பவர்களிடஞ் சென்றால் அதையும் விலைக்குப் பெறலாம்.

டபிள்யூ. டி. ஸ்டெட் இந்தத் துறையைப் பற்றி நன்கு அறிந்த சிலரைச் சந்தித்தார். இவர்கள் மூலம் விபசாரத் தரகு வேலையி லீடுபட்டிருந்த ஒரு ஸ்திரீயிடஞ் சென்று ஒரு பெண்ணை வாங்குவ தற்கு ஏற்பாடு செய்யக் கோரினர். இவள் ஏழைத் தொழி லாளியான ஒரு ஸ்திரீயிடஞ் சென்று அவள் பெண்ணை எலி ஸாவை ஐந்து பவுன் விலை பேசி வாங்கினள். எலிஸா ஸ்டெட்டிடம் "நீங்கள் என்னிடம் பிரியமாக இருப்பீரானல் நான் உங்களுடன் வரத் தயார்" என்று கூறினளாம். பிறகு அவளை மயக்க மூட்டி பாரிஸ் நகரத்திலுள்ள ஒரு ஸேவா ஸ்தாபனத்திற்கு அனுப்பி வைத்தார்.

இவ்வளவும் சாதித்த பின்னர் ஸ்டெட் தன் பிரசாரத்தை ஆரம்பித்துவிட்டார். அறிவு வளர்ச்சியும், நாகரீகப் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கும் பத்தொன்பதாம் நூற்றண்டிற்கும் மனிதர்களைக் கூடச் ஆடு மாடுகளைப் போல் விலைக்கு விற்றுக்கொண்டிருந்த கி. மு. 1800–ம் ஆண்டிற்கும் ஒரு அணுகூட வித்தியாசமில்லை யென்று நிரூபித்து அநேக கட்டுரைகளை தன் பத்திரிகையில் எழுதினர். தானே சென்று ஐந்து பவுன்கள் கொடுத்து ஒரு பெண்ணை விலைக்கு வாங்கின கதையையும் விரிவாகப் பிரசுரித் தார்.

இந்தக் கட்டுரைகளிலிருந்து கிளம்பிய கிளர்ச்சி லண்டன் நகரத்தையே கலக்க வைத்தது. பத்திரிகைப் பிரதிகளுக்கு சமா ளிக்க முடியாத கிராக்கி ஏற்பட்டது. நாள் முழுவதும் பிரதிகளை அச்சிட்டுக்கொண்டே யிருந்தார்கள். பத்திரிகாலயத்தைக் சூழ்ந்து பொதுமக்கள் இராப் பகலாகக் காத்துக்கிடந்து பிரதிகளைப் பெறு வதற்கு முயன்றார்களாம். பத்திரிகாலயதிதைச் சேர்ந்த நிருபர் களனைவரும் இரும்பத்தடிகளையேந்திக் கொண்டு பத்திரிகாலயத்

தினுள்ளே ஜனக்கூட்டம் புகாதவாறு காவல் புரிந்து வந்தனர்.

பத்திரிகைகளில் பிரசுரமான கட்டுரைகளைப் படித்த ஆயிரக் கணக்கான மக்களின் மனத்தில் ஏற்பட்ட விகாரங்கள் பலவகையாகும். இம்மாதிரி ஆபாசமான விஷயங்களைப் பிரசுரித்துள்ள பத்திரிகையைத் தொலைத்துவிடவேண்டுமென அநேகர் ஆத்திரங் கொண்டனர்.

இந்தப் பத்திரிகையை விற்கமாட்டோமென அநேக பத்திரிகை விற்பனைச் சிறுவர்களும் மறுத்துவிட்டனர். வெளியூர் ஏஜெண்டுகளும் இப்பத்திரிகையை பகிஷ்கரித்து விடுவோமென்று பயமுறுத்தினார்கள். காலஞ் சென்ற பிரபல நாடகாசிரியரான பெர்னார்ட்ஷா இக்கட்டுரைகளடங்கிய பத்திரிகைகளை தானே வீட்டுக்கு வீடாக சென்று விற்றுவருவேனென்று ஸ்டெட்டிற்கு உறுதியளித்தார். இந்த அளவிற்குக் கிளர்ச்சி வலுத்ததும் பார்லிமெண்டு அங்கத்தினர்கள் சர்க்காரைக் கேள்வி கேட்டார்கள். ஸ்டெட்டின் பத்திரிகையை ஒடுக்குவதற்குச் சர்க்கார் நடவடிக்கையெடுத்துக்கொள்ள வேண்டுமென தீவிரமாக வற்புறுத்தினார்கள்.

அநேக பொதுக் கூட்டங்களும் நடைபெற்றன. இந்த ஆபாசமான விஷயத்தை பிரசுரிக்க தடைசெய்ய வேண்டுமென்ற ஒரே குரல் தான் எங்கும் கேட்டது. இவற்றின் பலனாக சர்ககார், பார்லிமெண்டில் பெண்கள் "சம்மதிக்கும் வயதை" பதினாறாக ஆக்கி புதிய சட்டத்தை இயற்றியது.

இம்மாதிரிப் பிரசாரங்களைப் பற்றியோ, மிரட்டல்களைப் பற்றியோ, மற்றும் ஏஜென்டுகள், பிரமுகர்கள் முதலியவர்களின் பயமுறுத்தல்களையோ ஸ்டெட் சிறிதும் சட்டை செய்யவேயில்லை. தன் செய்கை நியாயமானதென்றும் பெண்களின் கௌரவத்தை உயர்த்துவது ஆண்டவனுக்குச் செய்யும் தொண்டு என்றும் திடநம்பிக்கை கொண்டவர் ஸ்டெட்ஸ். ஆனால் பெண்ணை விற்ற ஏழைத்தொழிலாளி ஸ்திரீக்கு இத்'திருப்பணி'யில் பங்குகொள்ள வேண்டுமென்று சற்றேனும் ஆவல் கிடையாது. பக்கத்து வீடுகளில் வசிப்பவர்கள் பெண்ணை விற்றதற்காக இவளை ஏளனஞ் செய்ததால் இவள் டபிள்யூ. டி. ஸ்டெட்டின் பேரில் போலீஸ் கோர்ட்டில் வழக்குத் தொடுத்தாள்.

தன் பெண்ணை ஸ்டெட் கெட்ட நடத்தைக்குள்ளாக்குவாரென்று தனக்குத் தெரியாதென்றும் அவளை விற்பதற்குத் தன் கணவனின் அனுமதி கிடையாதென்றும் கோர்ட்டில் கூறினாள். அவள் கணவனின் அனுமதியின்றி பெண்ணை விலைக்கு வாங்கினதுதான் ஸ்டெட்டின் மீது சாட்டப்பெற்ற குற்றம். இந்தக்

குற்றத்திற்காக ஸ்டெட்டிற்குச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இந்தத் தொழிலாளி ஸ்திரீயின் கணவன் எலிஸா என்ற பெண்ணின் உண்மையான தந்தையல்லவென்று ஸ்டெட்டிற்குத் தெரிந்திருந்தால் இவர் சிறைக்கே சென்றிருக்கவேண்டாம்.

ஒரு உயர்ந்த லக்ஷியத்திற்காக சிறைக்குச் சென்று அதனால் பெண்களுக்கு நன்மை புரிந்ததைப் பற்றி ஸ்டெட்டை மனமாரப் பாராட்டினார்கள் பொதுமக்கள். ஸ்டெட் காண்பித்த துணிவாலும், தியாகத்தாலும் அப்பொழுது சமூகத்தில் படிந்திருந்த கறை உலகத்திற்குத் தெரியலாயிற்று. அவர் துணிந்து கிளர்ச்சி செய்ததனால் இளம் பெண்கள் அநேகரின் வாழ்க்கை வளம்பெற்றது.

சமூகத்திற்கு இம்மாதிரி தன்னலமற்ற சேவைசெய்த பத்திரிகையாளர் மிகவும் அபூர்வமென்று கூறவும்வேண்டுமா?

தந்திரம்

கைக்குழந்தைகளுக்குக்கூடக் கட்டணம் கட்டவேண்டிய ஒரு படக்காட்சிக்கு ஒரு தம்பதிகள் சென்றார்கள். இவர்களிடம் குழந்தை அழுதால் "உங்கள் கட்டணத்தை திரும்பக் கொடுத்து உங்களை வெளியே போகச்செய்வேன்" என்று தியேட்டர் மானேஜர் எச்சரிக்கை செய்தார்.

தம்பதிகள் டிக்கட்டுகளை வாங்கிக்கொண்டு தியேட்டருக்குள் சென்று படத்தைப் பார்த்துக்கொண்டிருந்தனர். காட்சி நடுவே மனைவி கணவனிடம் "உங்களுக்குப் படம் பிடித்திருக்கிறதா?" என்று கேட்டாள்.

"படம் படுமோசம் எனக்குத் துளிக்கூடப் பிடிக்கவில்லை" என்றான் கணவன்.

"அப்படியானால் குழந்தையைக் கிள்ளிவிடுங்கள்; பிரவேசக் கட்டணத்தை 'வாபஸ்' பெற்றுக்கொண்டு வீட்டுக்குச் செல்லலாம்" என்றாள் மனைவி.

ஸுமந்து முனிவரால் தேவசர்மாவுக்கு உபதேசிக்கப்பட்ட தீபாவளி மஹாத்மியம்.

தீபாவளி மஹாத்மியம்

ப்ராக் ஜோதிஷம் என்ற பட்டணத்தில் நரகன் என்ற அசுர அரசனிருந்தான். அவன் வராகவதாரம் எடுத்த மகாவிஷ்ணுவிற்கும் பூமிதேவிக்கும் பிறந்தவன். அவன் பலகாலம் தவம் செய்து பிரும்மாவை ஆராதித்து அவரிடமிருந்து வரனை அடைந்தான். சிறந்த வரங்களைப் பெற்ற அவன் கர்வத்தினால் தேவர்களையெல்லாம் கதற அடித்தான். மகா பலசாலியான அவன் வருணனிடமிருந்து வெண்குடையையும், இந்திரனிடமிருந்து மணி பர்வதத்தையும், தேவ மாதாவான அதிதி தேவியிடமிருந்து குண்டலங்களையும், அபகரித்துக் கொண்டான். தேவர்களால் அவனை ஒன்றும் செய்யமுடியவில்லை தேவர்களுக்கரசனான இந்திரன் கிருஷ்ணபரமாத்மாவிடம் சென்று நரகாசுரனின் தீய செயல்களைத் தெரிவித்துக் கொண்டான். கிருஷ்ணனும் சீக்கிரம் அவனைக் கொல்வதாக வாக்களித்து இந்திரனை சமாதானம் செய்து அனுப்பினார்.

ஸத்யபாமாவுடன் கிருஷ்ணன் தன் கருட வாகனத்தில் அமர்ந்து ப்ராக் ஜோதிஷம் என்ற பட்டணத்தை அடைந்தார். அப் பட்டணம் மலைக் கோட்டை, ஆயுதக்கோட்டை நீர், நெருப்பு, காற்றுக்கோட்டைகளாலும், முரன் என்ற அசுரனின் பாசக்கோட்டையாலும், சூழப்பட்டிருந்தது. கிருஷ்ணன் தன் கதாயுதத்தினால் மலையையும் பாணங்களால் ஆயுதக்கோட்டையையும், சக்ராயுதத்தால் நீர், நெருப்பு, வாயு, இக் கோட்டைகளையும், சக்தியினால் பாசக் கோட்டையையும் சங்க நாதத்தினால் வீரர்களின் மனத்தையும் கதையினால் பிராகாரத்தையும் பிளந்தார். பிரளய காலத்திலுண்டாகும் இடி போன்ற சங்கத்வனியைக் கேட்டு அகழில் ஜலத்திற்குள் வசிக்கும் ஐந்து தலையுள்ள 'முரன்' என்ற நரனின் மந்திரி வேகமாய் வெளியில் வந்தான். பிரளயகால சூரியன் போல் உக்ரமான காந்தியுடையவனும் பார்க்கமுடியாதவனுமான அவன் சூலாயுதத்தை ஓங்கிக் கொண்டு ஐந்து வாய்களாலும் மூவ்வுலகத்தையும் விழுங்குகின்றவன் போன்று 'கருடனை பாம்பு எதிர்ப்பதுபோல்' கருடனை எதிர்த்து ஓடினான். சூலத்தைச் சுழற்றி கருடன்மேல் எறிந்து கர்ஜித்தான். அப்பொழுது கிருஷ்ணன் இரண்டு பாணங்களால் அச்சூலத்தை வெட்டினார். அவற்றால் எறியப்

பட்ட கதாயுதத்தையும் பல துண்டுகளாய்த் துண்டித்தார். பிறகு பத்துக் கைகளையும் ஓங்கிக் கொண்டு ஓடிவரும் முராசுரனின் ஐந்து தலைகளையும் சக்ராயுதத்தால் அறுத்து வீழ்த்தினர், ஸ்ரீ கிருஷ்ணன். தன் தகப்பனின் வதத்தைக்கேட்ட அவன் மைந்தர்களான தாம்ரன், அந்தரிஷன், சர்வணன், விபாவஸு, வஸு, நபஸ்வான், அருணன் என்ற ஏழுபேர்களும் நரகாஸுரனால் ஏவப்பட்ட பீடன் என்ற சேனைத்தலைவனை முன்னிட்டு யுத்தத்திற்கு முன் வந்தார்கள். அவ்வெல்லோரையும் கிருஷ்ணன் தலை, கை, கால், கவசம் இவைகளை அறுத்து யமனுலகம் அனுப்பினர். தம்சேனைகள் அழிந்ததைக் கேட்ட நரகன் போருக்குப் பிரயாணமானன்.

ஸுப்ரதீகம் என்ற வெள்ளை யானையின்மீதேறி பல யானைப் படைகளால் சூழப்பட்டு யுத்தத்திற்குத் தயாரானன். கிருஷ்ணனுடன் ஸத்யபாமாவும் கருடவாகனத்தி லிருப்பதைப் பார்த்து கோபமடைந்த அவன் அவர்கள்மீது பாணங்களை வர்ஷித்தான். கருடன், கிருஷ்ணனையும் பாமாவையும் இறக்கிவிட்டு அலகினலும், இறக்கைகளாலும், நகங்களினலும் யானைகளைக்கிழித்தது. கருடனல் கிழிக்கப்பட்ட யானைகள் அலறி ஓடின. அதைக் கண்ட போர் வீரர்களும் புறமுதுகிட்டு ஓடத் தலைப்பட்டார்கள். இதனல் கோபமடைந்த நரகன் வஜ்ராயுதம் போன்ற 'சக்தி' என்னும் ஆயுதத்தால் அடித்தான். புஷ்பமாலையால் அடிக்கப்பட்ட யானைபோல் கிருஷ்ணன் சிறிதும் அசையவில்லை. தன் முயற்சி வீணகியதால் நரகன் தன் சூலாயுதத்தை எடுத்தான். அவன் சூலத்தை எறிவதற்கு முன்பே, கிருஷ்ணன் அவன் தலையை கூரான சக்ராயுதத்தால் அறுத்தார்.

பிறகு நரகனுடைய பிள்ளையான பகதத்தனுக்கு ராஜ்ய பட்டாபிஷேகம் செய்து மணி பர்வதத்தை இந்திரனிடமும், வெண்குடையை வருணனிடமும், ஒப்புவித்தார். நரகாசுரனல் பலாத்காரமாக அபகரிக்கப்பட்ட பதினாராயிரம் பெண்களையும் விடுவித்தார். அவர்கள் எல்லோரும் ஸ்ரீ கிருஷ்ணனையே பதியாகவரித்தார்கள். ஸுப்ரதீகம் என்ற ஒரு யானையை மட்டும் பகதத்தனுக்குக் கொடுத்துவிட்டு மற்ற அறுபத்திநான்கு யானைகளையும் தன் நகரத்திற்கு அனுப்பினர். தேவலோகம் சென்று அதிதி தேவியிடம் குண்டலங்களைச் சேர்ப்பித்தார்.

வீரனை நரகனைக் கொன்றதால் 'வீரஹத்யா' என்னும் பாபம் பெண் உருவத்துடன் கிருஷ்ணனைத் தொடர்ந்தது. அதனல் தொடரப்பட்ட கிருஷ்ணன் அதை யொழிக்க கைலாயம் சென்றார். அங்கு பரமேச்வரனைக்கண்டு தன்னைத்

தொடர்ந்துவரும் 'வீர ஹத்யை' யைச் சீக்கிரம் நிவர்த்திக்க ஒரு பிரயாச்சித்தம் சொல்லவேண்டு மென்று கேட்டுக்கொண்டார். இவ்விதம் கேட்கப்பட்ட பர மேச்வரன் கிருஷ்ணன் தேவர் கள் எல்லோருடனும், துலா மாஸத்தில் காவிரியின் கரையை அடைந்தார். காவிரி யைக் காண்பித்து 'இந்த துலா மாஸத்தில் கிருஷ்ணபக்ஷ சதுர் தசியில் காவிரியில் ஸ்நானம் செய்தால் உன்னைத் தொடர்ந்து வரும் இந்த வீரஹத்யை நசித்து விடும்; துலாமாஸத்தில் கிருஷ்ணபக்ஷ சதுர்தசியில் காவிரிநதி அறுபத்தாறுகோடி தீர்த்தங்களுடன் சேர்ந்திருக்கி ருள் ஆகையால் இக்காலத் தில் காவிரியில் ஸ்நானம் செய் தால் ஸகல தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்த பலனைப் பெறுவார்கள்' என்ருர். அதைக்கேட்டு கிருஷ்ணபரமாத் மாவும் காவிரியில் ஸ்நானம் செய்தார். அந்த க்ஷணத்தி லேயே வீரஹத்யையும் நசித்து விட்டது. இந்த ஆச்சர்யத்தைக் கண்டு பிரும்மா முதலிய தேவர் களும், முனிவர்களும் பாபம் நிவர்த்திக்க காவிரியில்ஸ்நானம் செய்தார்கள்.

பூமிதேவியானவள், ஈசன் முதலிய தேவர்களையும் முனிவர் களையும் நமஸ்கரித்து துதித்து "இந்த துலா கிருஷ்ண சதுர் தசி திதியானது இன்று முதல் என் புத்ரனை நரகனின் நாமத் தைக் கொண்டு நரக சதுர்தசி என்று பெயர்பெற்று இன்று முதல் பிரசித்திபெறவேண்டும். இவ்விதம் தாங்கள் வரனளிக்க வேண்டும்'' என்று பிரார்த்தித் தாள்.

தேவர்களும், "ஓ பூமியே' ஸகல பாபங்களையும் போக்கும் இந்த சதுர்தசி 'நரகசதுர்தசி' என்று பிரஸித்தமாகும். இந்த திதியில் உன் புத்ரனை நரகன் அழிவுற்ற காலமாகிய அருணோ தய காலத்தில் எந்த மனிதர் எண்ணெய் தேய்த்துக்கொண்டு சூடான நீரில் ஸ்நானம் செய் கிருர்களோ அவர்கள் பலவித ரோகங்களிலிருந்தும் விலகு கிருர்கள். நரகத்தினின்றும் விடுதலையடைகிருர்கள். பாபங் களிலிருந்தும் விடுபடுகிருர்கள்,'' என்ற வரனைக்கொடுத்தார்கள். அன்று எண்ணெயில் லக்ஷ்மி யும், ஜலத்தில் கங்கையும் தேவர்களுமிருக்கின்றுர்கள். தீபாவளி தினத்தன்று எண் ணெய் தேய்த்து ஸ்நானம் செய்த பிறகு அலங்காரம் செய்துகொண்டு தம்மாலியன்ற பொருள்களை தானம்செய்கின் றவர்கள் மோக்ஷத்தை அடை கின்றனர். நரக சதுர்தசி யன்று எண்ணெய் தேய்த்துக் கொள்வதால் தேவர்களுக்கும் கிடைக்காத ஸம்பத்தையும், ஸ்நானத்தால் கங்கா ஸ்நான பலத்தையும், தானம் செய்வ தால் எல்லாப் பலன்களையு மடையலாம்.

—ஆர். வெங்கட்டராமன்

கர்சன் பிரபுவின் கனவு

லார்டு கர்சன் என்பவர் சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் இந்தியாவின் ராஜப்பிரதிநிதியாகவும் கவர்னர் - ஜெனரலாகவும் இருந்தார். அந்தக் காலத்தில் வங்காளத்தை இரண்டாகப் பிரித்து, அதனால் தேசத்தில் சுதேசி இயக்கம் வளர்வதற்கும், சுயராஜ்யம் வருவதற்கும் காரணமாக இருந்தவர் இவர். பின்னர் இங்கிலாந்து தேசத்தின் அன்னிய மந்திரியாக இருந்து சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன் காலஞ்சென்றார்.

கர்சன் இளமையிலேயே மிகுந்த ஊக்கமும், உழைப்பும் உயர்ந்த நோக்கங்களும் உடையவராக இருந்தார். அவர் சிறு பிராயத்திலேயே *"என் பேர் ஜார்ஜ் நதேனியல் கர்சன், நான் ஒரு உயர்ந்த மனிதன்" என்று பள்ளிப் பிள்ளைகளிடம் பெருமையாகச் சொல்லிக் கொள்வாராம்.

கல்கத்தாவிலுள்ள பெரிய அரசாங்க மாளிகை, இங்கிலாந்தில் கெடில்ஸ்டன் என்ற இடத்தில், கர்சன் பிரபுவின் முன்னோர்கள் வாழ்ந்திருந்த சிறந்த மாளிகையைப் போலக் கட்டப்பட்டிருக்கிறது. 'அந்த மாளிகையில் போய் நான் ஒரு நாளாவது வசித்து இந்தியாவின் அரசப் பிரதிநிதியாக அரசாள்வேன்' என்று கர்சன் சிறுவராயிருக்கும்பொழுதே அடிக்கடி சொல்லிவந்தாராம். அவர் சொல்லியபடியே பிற்காலத்தில் இந்தியாவின் அரசப் பிரதிநிதியாகி, அந்த மாளிகையில் வசித்தார். மிகப் பெரிய பேரும் புகழும் பெற்றார்.

அந்தக் காலத்தில் லார்டு கர்சன் தென்னாட்டிற்கு யாத்திரையாகத் திருநெல்வேலிக்கு வந்தபொழுது, அப்பொழுது சிறுவராக இருந்த எனது பாட்டனார் பரவி-நெல்லையப்பர் அவரை நேரில் கண்டு களித்ததாக என்னிடம் அடிக்கடி கூறுவதுண்டு.

கர்சன்பிரபுவைப் போலவே, சிறுவர்கள் இளமையில் பெரிய சிந்தனைகளை, உயர்ந்த சிந்தனைகளை, சிறந்த சிந்தனைகளைக் கொண்டு பெருவாழ்வு வாழவேண்டும். உள்ளுவ தெல்லாம் உயர் வுள்ளல் என்பது வள்ளுவர் வாக்கு.

—நெல்லை - அசோகன்

* "My name is George Nathaniel Curzon,
I am a very superior person."

மரம் செடி வளர்ப்போம்

மரம் செடி கொடியால் மண்ணினில் வாழ்வு
மனிதர்கள இதனே உணர்வது அறிவு
அறம் செயல் நல்ல மரம் செடி வளர்ப்பு
அனைவரும் இதனை உணர்வது சிறப்பு. 1

உடுத்தும் ஆடை தருவது எதுவோ
உண்ணும் உணவுகள் தருவது எதுவோ
படுக்கும் பாயல் தருவது எதுவோ
பலவகை மரங்கள் செடி கொடி அன்றோ ? 2

மரங்களில் தேங்காய் கொடுப்பது எதுவோ
மதுரக் கனிகள் கொடுப்பது எதுவோ
நீங்காது நம்மைக் காப்பது எதுவோ
நிழல் தரு மரங்கள் செடி கொடி அன்றோ. 3

எண்ணெயும் விறகும் தருவது எதுவோ
எரியும் வெளிச்சம் தருவது எதுவோ
மண்ணில் வாழ உதவுவது எதுவோ
மரங்கள் செடிகள் கொடிகள் அன்றோ ? 4

பலவகை மலர்கள் தருவது எதுவோ
பண்புடை மணங்கள் தருவது எதுவோ
நிலமகள் தனது அழகணி போல
நிலவிடு மரங்கள் செடி கொடி அன்றோ ? 5

காற்றும் மழையும் தருவது எதுவோ ?
காசினி வாழ உதவுவது எதுவோ ?
போற்றும் பூசைக்கு உதவுவது எதுவோ ?
புண்ணிய மரங்கள் செடி கொடி அன்றோ ? 6

வாழ்க மரங்கள் செடி கொடி வாழ்க
வானம் பொழிந்து மாநிலம் வாழ்க
தாழ்வில் லாத தருமம் வாழ்க !
தானமும் தவமும் தழைத்து வாழ்க. (மரம்) 7

—பாரி

அதிருஷ்டமும் . . . .

தன்னைக் கடிக்கவந்த ஒரு பெரிய பூச்சியை ஒரு புஸ்தகத்தால் சுவரோடு சேர்த்து அடித்தாள் ஒரு ஸ்திரீ. புஸ்தகம் சுவரில் பட்டவுடன் அது சுவருக்குள் போயிற்று. ஏனென்றால் அந்தச் சுவரில் ஒரு துவாரமிருந்தது; அந்தத் துவாரத்தின் வாய் ஒரு கனமான அட்டையால் மூடி வைக்கப்பட்டிருந்தது. அட்டை உள்ளுக்குள் போனவுடன் அங்கு கண்ட துவாரத்தில் ஸ்திரீ தன் கையை விட்டாள். அவளுக்குக் கிடைத்தது 3000 பவுன் நோட்டுகள்!

மத்திய அமெரிக்காவில் சமுத்திரக்கரை ஓரமாகவுள்ள ஒரு நகரத்திலிருந்த வீட்டில் நண்டுகளின் உபத்திரவமிருந்தது. வீட்டுக்குள் அறையில் நண்டுகள் குழிதோண்டின. சில தினங்கள் கழித்து அந்த வீட்டுச் சொந்தக்காரர் அந்த அறையிலிருந்த துவாரத்திலிருந்து பெட்ரோல் நாற்றம் வருவதை உணர்ந்தார். அந்த இடத்தில் பிறகு சோதனை செய்ததில் அறையின் கீழே ஒரு எண்ணெய்க் கிணறு இருப்பதாகத் தெரிந்தது. வீட்டுக்காரருக்கு இதனால் கிடைத்த பாக்கியத்தைச் சொல்லவும் வேண்டுமா?

அமெரிக்காவில் ஒரு இடத்தில் ஒருவர் ஒரு முயலைத் துரத்திக் கொண்டுபோனார். முயல் பொந்துக்குள் புகுந்துகொண்டதை அவர் நோக்கியவுடன், அந்தப் பொந்தின் மேல் பாகங்களில் வெள்ளித் தாதுப்பொருள்கள் தென்பட்டன. பிறகு அந்த இடத்தை நன்றாகத் தோண்டிப் பார்த்தபொழுது அங்கே ஒரு பெரிய வெள்ளிச் சுரங்கமிருந்ததாம். முயல் பொந்திருந்த இடத்தின் சொந்தக்காரருக்கு இதனால் பலகோடி ரூபாய்கள் கிடைத்தனவென்று கூறவேண்டியதில்லை.

ஒரு வீட்டில் எவராலும் தீண்டப்படாத படுக்கும் மெத்தையொன்றிருந்தது. அதை அந்த வீட்டில் வளர்த்து வந்த நாய் கடித்துக் கிழித்த இடத்தில் ஒரு பை காணப்பட்டது. வீட்டுக்காரருக்கு அந்தப் பையிலிருந்து 2000 பவுன்கள் கிடைத்தன.

புஸ்தகம் படிக்கையில் தூக்கம் வரும்
அசோகா உற்சாகம் தரும்

. . . . துரதிருஷ்டமும்

மீதமாகும் பணத்தைப் பாங்கில் போடாமல் சுவரில் ஒரு துவாரத்திலோ அல்லது பொந்திலோ பழக்கத்திலில்லாத பாத்திரங்களிலோ ஒளித்து வைப்பவர்களுக்கு நஷ்டம்தான் ஏற்படும்.

இங்கிலாந்தைச் சேர்ந்த பிரிஸ்டல் நகரத்தில் ஒரு ஸ்திரீ மீதமாகும் பணத்தை அடிக்கடி ஒரு துணி வெளுக்கும் இயந்திரத்தில் போட்டு வைப்பது வழக்கமாயிருந்தது. சாதாரணமாக இந்த இயந்திரத்தை இவள் உபயோகிப்பதேயில்லை. திடீரென்று ஒரு தினம் தன் துணிகளையெல்லாம் வெளுக்க ஆரம்பித்தாள். இயந்திரத்தில் வைக்கப்பட்டிருந்த கரன்ஸி நோட்டுகள் பெரும்பாலும் சூடான நீரிலும் சோப்பு நுரையிலும் கரைந்துபோய்விட்டன! வெளுக்கும் வேலை முடியும் நேரத்தில் அவளுக்கு இயந்திரத்தில் கரன்ஸி நோட்டுகள் வைத்திருந்தது நினைவிற்கு வந்தது! சில நோட்டுகளில் நம்பர் உள்ள பாகங்கள் மட்டும் அவளுக்குக் கிடைத்ததால் அவற்றிற்குப் பதிலாகப் புது நோட்டுகளைச் சர்க்காரிடம் இவள் பெற்றுக்கொண்டாள்.

சில வருஷங்களுக்கு முன்பு பத்து பவுன்களடங்கிய ஒரு பணப்பையை ஒரு விவசாயி அலட்சியமாக தன் வீட்டுத் தாழ்வாரத்தில் வைத்துவிட்டு வேறு வேலையிலீடுபட்டிருந்தபொழுது அவன் வளர்த்துவந்த ஒரு கன்றுக்குட்டி ஓடோடியும் வந்து பணப்பையை விழுங்கிவிட்டது. கன்றுக்குட்டிக்குக் கொடுத்த விலை ஐந்துபவுன்கள் தான். ஆனால் பணப்பையிலிருந்ததோ பத்து பவுன்கள். அதனால் கன்றுக்குட்டியைக் கொன்று விவசாயி பணப்பையை எடுத்துவிட்டான். பணப்பையையும் அதிலிருந்து நோட்டையும் கன்றுக்குட்டி சுவைத்திருந்தாலும் நோட்டின் நம்பர் கெடாமலிருந்ததால் விவசாயிக்குப் பணநஷ்டம் ஏற்படவில்லை.

1938-ம் ஆண்டில் ஒருவர் ஒரு குதிரை வாங்குவதற்காக, நோட்டுகளாக முன்னூறு பவுன் வாங்கினார். இரண்டு தினங்கள் கழித்து குதிரையை வாங்கப் போகலாமென்ற எண்ணத்தில் பணத்தைப் பத்திரப்படுத்த வேறு சாதனமில்லாததால் தன் வீட்டிலுள்ள ஒரு பெரிய பாத்திரத்தில் இந்த முன்னூறு பவுன் நோட்டுகளையும் வைத்திருந்தார். மறுதினம் காலையில் இவர் வெளியே சென்றிருந்தபோது இவர் மனைவி அந்தப் பெரிய பாத்திரத்தில் நீரைக் கொதிக்கவைத்து துணிகளை வெளுக்கப்போட்டுவிட்டாள். முன்னூறு பவுன் நோட்டுக்கு முழுக்குப் போடவேண்டி வந்ததன் காரணம் மனிதனின் அஜாக்கிரதை தானே!

ஒருவர் தன்னிடமிருந்த பணத்தை தன் மனைவிக்குத் தெரியாமல் வைத்துக் கொள்வதற்காக இரவில் நித்திரை செய்யும் பொழுது நோட்டுகளை கசக்கி வாயில் போட்டுக்கொண்டுவிட்டார். மறுநாள் அவர் வாயிலிருந்தது சில காகிதத்துண்டுகள் மட்டுந்தான்!

மனிதத்தன்மையைக் கொல்லும் தர்மம்

பிச்சைக்காரனுக்கு பிச்சை போடாதீர்கள். 'அம்மா பிச்சை' என்று கேட்பவனுக்கு ஒரு பிடி அரிசியோ அல்லது காலணுவோ கொடுப்பதைவிடத் தவறு வேறு ஒன்றுமில்லை.

பஸ் ஸ்டாண்டிலும் ரயில்வே நிலையங்களிலும், நம் வீட்டு வாசலிலேயும் பிச்சைக்காரர்களின் தீனக் குரலைக் கேட்கும் போது ஏதாவது கொடுத்துவிடலாமென்று தோன்றுவது சகஜம். ஏனென்றால் பொது மக்களனைவரும் ஒரு தீனக் குரலைக் கேட்கும்போது, "ஐயோ பாவம், உதவிக்கு எவருமில்லாத அனுதை, நம்மால் ஆனதைச் செய்வோம்" என்றுதான் நினைக்கிறார்கள். இந்த மனப்பான்மை மிகத் தவறானது.

பிச்சைக்காரனுக்கு ஒரு காலணு கொடுப்பதனால் அவனை நாம் என்றைக்கும் பிச்சைக்காரனாயிருப்பதற்கு ஊக்கமளிக்கிறோம். இப்படி ஊக்கமளிப்பது பிச்சையெடுப்பதை போல் ஒரு ஈனமான காரியமாகும். நாம் கொடுக்கும் பிச்சையினால் ஒரு நன்மையுமுண்டாவதில்லை. இப்படி 'புண்ணிய'த்திற்காக தர்மம் கொடுப்பவர்கள் ஏராளமாயிருப்பதால்தான் பிச்சைக்காரர்களின் எண்ணிக்கையும் குறைவதேயில்லை.

உங்களைக் கேட்டு காலணு வாங்கும் பிச்சைக்காரன் உண்மையில் ஒரு ஏழையா? இவ் விஷயத்தைப் பற்றி நீங்கள் சிந்தித்ததுண்டா? நம் நாடுகளிலுள்ள பெரிய நகரங்களிலெல்லாம் வியாபாரிகள் சங்கங்களும் தொழிலாளிகள் சங்கங்களுமிருப்பது போல் பிச்சைக்காரர்கள் சங்கங்களுமுண்டு. உங்கள் அனுதாபத்தால் காலணுவைப் பெறும் பிச்சைக்காரன் அநேகமாய் ஒரு பிச்சைக்காரச் சங்கத்தின் அங்கத்தினனாய்த்தானிருப்பான். இவர்களுக்கு ஒரு தலைவருமுண்டு. இச்சங்கங்கள், பிச்சைக்காரர்களுக்கு வீடு வசதிகள், ஆகாரம், ஆடை முதலியவற்றிற்கு ஏற்பாடுகள் செய்கின்றன. பிச்சைக்காரர்களுக்கு கடன் வேண்டுமானாலும் அதற்கும் சங்கங்கள் ஏற்பாடு செய்கின்றன.

கூட்டுறவு ஏற்பாட்டில் பிச்சையெடுத்து பிச்சைக்காரர்களின் தினசம்பாத்தியத்தைஎல்

லோரும் பங்கிட்டுக் கொள்வதென்ற கொள்கை கொண்டது இந்த சங்கங்கள்.

பிச்சைக்காரர்கள் முடவர்களாகவும், குருடர்களாகவும், காயமடைந்தவர்களாகவு மாக்க இச்சங்கங்கள் ஏற்பாடுகள் செய்கின்றன.

வீடு வீடாகச் சென்று ஸ்திரீகளிடம் பிச்சையெடுப்பதற்குச் சிறுகுழந்தைகளை அனுப்புவதில் அதிகப் பலனுண்டென்பது இப்பிச்சைக்காரர்கள் சங்கங்களுக்குத் தெரியும்.

ஒரு நாள் வீதியில் கண்ட பிச்சைக்காரன் ஒருவனிடம் இருபது ரூபாய்களிருப்பதைக் கண்டேன். இது தவிர இன்னும் கொஞ்சம் பணத்தைப் பூமியில் புதைத்து வைத்திருப்பதாகவும் அவன் என்னிடம் கூறினன். பாங்கியில் கணக்கு வைத்திருக்கும் பிச்சைக்காரர்களுமுண்டு யென்பது உங்களுக்குத் தெரியுமா?

டில்லியில் ஒரு மிட்டாய்க் கடை வாசலில் நின்றுகொண்டு பிச்சையெடுக்கும் ஒருவன் பாங்கி ஒன்றில் கணக்கு வைத்துக் கொண்டிருக்கிருன்! தனக்குத் தெரிந்த ஒருவர் மூலம் இவன் கணக்கு வைத்துக் கொள்ள ஆரம்பித்தான். பிச்சைக்காரன் சம்பாத்தியத்தில் அவனுடைய இந்த நண்பருக்கும் பங்கு உண்டு.

கல்கத்தாவில் ஒரு மருந்துக் கடை வாசலிலுள்ள ஒரு பிச்சைக்காரனிடம் எப்போதும் எவ்வளவு ரூபாய்களுக்கு வேண்டுமானலும் சில்லறை கிடைக்குமாம்.

பிச்சைக்காரர்களை வேலை செய்ய வற்புறுத்த முடியாது.

இந்தியாவில் சில நகரங்களில் பிச்சையெடுப்பது நகர சபை சட்டங்களுக்கு விரோதமானது. இவ்வாறிருந்தும் பிச்சைக்காரர்களை ஏதாவது வேலை கொடுப்பதற்காக இழுத்துச் சென்ருல் அதற்கு இணங்கமாட்டார்கள்.

"நாங்கள் எவ்வளவோ தலைமுறைகளாக பிச்சையெடுத்து பிழைத்துக்கொண்டிருக்கிருேம். இப்போது எதற்காக வேலை செய்யவேண்டும்" என்று கேட்கிருர்களாம்.......பிச்சைக்காரர்கள் என்ற பாவனையில் வீடு வீடாகச் செல்பவர்களில் அநேகர் இரவில் கன்னக்கோல்வைக்கும் திருடர்கள் என்பது யாவருமறியவேண்டிய ஒரு உண்மையாகும்.

கம்யூனிஸம் பரவாத ராஜ்யங்களில் தான் பிச்சைக்காரர்கள் இருக்கிருர்கள். ஏனென்ருல் ஏராளமாகச் சம்பாதிப்பதற்கும், அந்தச் சம்பாத்தியத்தை தன்னிஷ்டம் போல் செலவிடுவதற்கும் உரிமை இந்த ராஜ்யங்களில் தானிருக்கிறது. சம்பாத்தியத்தைக் கட்டுப்படுத்தி அதை விநியோகிப்பதில் சர்க்

காருக்குப் பூரண உரிமையிருக்கும் ராஜ்யத்து மக்களுக்கெல்லாம் இருப்பதற்கிடமும் உண்ண உணவும் கிடைக்கும். இம்மாதிரிக் கட்டுப்பாடுகள் இல்லாததால் இந்தியா முதலிய ராஜ்யங்களில் ஏராளமாகச் சம்பாதிப்பவர்கள் அநேகர் தர்மசாலைகள் முதலியவற்றிற்காகத் தாராளமாகப் பண உதவி செய்கிறார்கள்.

பம்பாய் நகரத்தில் மட்டுமே வருஷந்தோறும் 36 லட்சம் ரூபாய் தர்மத்திற்காகச் செலவாகிறதாம். சம்பாதிக்கும் வழிகளில் அநீதியும் அட்டூழியமும் புரிபவர்கள் ஆண்டவனின் அன்பைச் சம்பாதிக்கக் கொடுக்கும் லஞ்சம் இது!

இப்பெருந் தொகையைப் பிச்சைக்காரர்களுக்குக் கல்வி, தொழில், முதலியவற்றைக் கற்றுக்கொடுப்பதற்காகச் செலவழித்தால் அதில் பலனுண்டு. ஆயிரக்கணக்கான ஏழை மக்களின் மனப்பான்மை மாறி புத்துயிர் பெறுவார்கள்.

தர்மசாலைகளைக் கட்டி 'தண்டச் சோறு' போடுவதால் எவருக்கும் எள்ளளவும் பயனில்லை. பிச்சைக்காரர்களின் துயரத்தைப் போக்கும் வழி இதுவல்ல.

தர்மஞ் செய்வதைப் பிறருக்குப் பயன்படும் பெரும் உதவியாக்குவதற்குள்ள மார்க்கங்களே நம் நாட்டில் மிகத்தேவையாகும். தர்மஞ்செய்பவர்களெல்லோரும் விஷயந்தெரியாதவர்களென்பதே இன்றைய நிலைமை. இந்நாட்டிலுள்ள முப்பத்தைந்து கோடி மக்கள் ஒவ்வொருவரும் தலைக்குக் காலணாவீதம் தர்மஞ் செய்தால் அதனால் சேரும் மொத்த தொகை சுமார் 6 லட்சம் ரூபாய் ஆகிறது. மாதம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு காலணாவீதம் கொடுத்தால் ஒரு வருஷத்தில் சேரும் தொகை, சுமார் 70 லட்சம் ரூபாய் ஆகும். இந்த எழுபதுலட்சம் ரூபாயை வைத்துக்கொண்டு நம் நாட்டில் நடமாடும் பிச்சைக்காரர்கள் அனைவருக்கும் தலைமுறை தலைமுறையாகப் பயன்படும் வழிகள் எவ்வளவோ காணலாமே! இதிலிருந்து திட்டமிட்டுச் செய்யும் உதவிக்கும் புண்ணியம் தேடுவதற்காகச் செய்யும் உதவிக்குமுள்ள வித்தியாசத்தை தெரிந்துகொள்ளலாம்.

பிச்சைக்காரர்களனைவருக்கும் தேவையானது பிச்சை அல்ல; அவர்களுக்கு தன் மதிப்பை ஊட்டவேண்டும். பாடுபட்டு உழைப்பதின் மகிமையை கற்றுக் கொடுக்கவேண்டும். வாலிபப் பிச்சைக்காரர்களைப் பற்றி நாம் பிரத்தியேகக்கவனஞ் செலுத்தவேண்டும். இவர்களின் மனப்பான்மையை மாற்றிவிடுவது வருங்காலப் பிச்சைக்காரர்களை யொழிப்பதற்கு சமம் தானே!

பட்டினி, நோய்கள், பைத்தியம், குற்றம், விபசாரம் போன்ற சமூகக் கேடுகளைப் போலொன்றுதான் பிச்சையெடுப்பதும்.

சில நோய்களும், தீய பழக்க வழக்கங்களும் நம் நாட்டில் எப்படி வேரூன்றியுள்ளதோ அது போன்றே தான் பிச்சையெடுப்பதும். புண்ணீயம் தேடும் வழிகளாலும் ஒரு காலணு தர்மத்தாலும் இக்கேடுகளை ஒழிக்கமுடியாது.

பண்டைக் காலத்தில் எல்லாத் தொழில்களும் குடிசைத் தொழில்களாயிருந்தன. நாகரிக முன்னேற்றம் மூலம் ஏற்பட்ட தொழிற்சாலைகளில் எல்லா குடிசைத் தொழில்காரர்களுக்கும் வேலை கிடைக்கவில்லை. அநேகர் விவசாயத் துறையிலிடுபட்டார்கள். இதிலும் கரையேற முடியாதவர்கள் பிச்சைக்காரர்களானார்கள்.

முன்காலத்தில் எல்லாரும் "அவிபக்த" குடும்பங்களாயிருந்தார்கள். நாகரிக முன்னேற்றம் இதற்கும் சாபக்கேடாயிற்று.

குடும்பங்கள் சிதறுவதனாலும் அவரவர்கள் தனித்தனியே முன்னேறலாம் என்ற மனப்பான்மை வளர்ந்ததாலும் உதவிபெற முடியாதவர்களும் ஆதரவற்றவர்களும் பிச்சைக்காரர்களானார்கள்.

இந்தப் பரிதாபகரமான நிலையையெல்லாம் மாற்றிப் பிச்சைக்காரர்களுக்கும் ஏதாவது கண்யமான உதவியைப் புரிய வேண்டுமென ஆவல் கொண்டவர்கள் செய்யவேண்டிய காரியங்கள் இரண்டு. ஒன்று, காலணுவோ ஒரு பிடி அரிசியோ பிச்சை போடுவதை அறவே நிறுத்திவிடவேண்டும். கூட்டுறவு முறையிலும் சமூகத்தொண்டாகத் தர்மஞ் செய்வதற்குள்ள வழிகள் என்னென்னவென்று யோசனை செய்யவேண்டும்.

இதுதான் பிச்சைக்காரர்களுக்கு நம்மால் செய்யக் கூடிய உண்மையான உதவி.

—*A. B. Patrika.*

ஐயோ, பாவம்!

சிறைச்சாலைக்கு விஜயஞ்செய்த பிரமுகர் ஒருவர் ஒரு கைதியிடம் "இங்கு நீ வரக் காரணமென்ன?" என்று கேட்டார்.

"பணம் கடன் வாங்கினேன் சார்."

"பணம் கடன்வாங்குவதற்குச் சிறைத்தண்டனை ஏது?"

"சாதாரணமாகக் கிடையாது தான். ஆனால் நான் ஒரு மனிதனை மண்டையிலடித்து அவனைக் காயப்படுத்தித் தான் பணத்தைப் பெறமுடிந்தது."

திரட்டு

சிறந்த மாதாந்திர கட்டுரைப் பொக்கிஷம்

1/C-17, டின்ரோஸ் எஸ்டேட், மவுண்ட் ரோடு, சென்னை

★ பல ஆங்கிலப் பத்திரிகைகளின் சுவையான சார மிக்க விஷயங்கள்

★ 50-க்கு மேலான அரசியல், சமூக, விஞ்ஞான கட்டுரைகள், உண்மைக் கதைகள் !

★ பலதரப்பட்ட விஷயங்கள் !

★ பொது மக்களுக்கும் மாணவர்களுக்கும் இன்றியமையாதது.

★ சிறந்த முறையில் நிறைந்த பக்கங்களைக் கொண்டது.

தனிப்பிரதி விலை எட்டணாதான்.

வருட சந்தா ரூ. 6

மானேஜர், **திரட்டு**
1/C-17, டின்ரோஸ் எஸ்டேட்,
மவுண்ட் ரோடு, சென்னை-2.

அன்புடையீர்,

திரட்டுக்கு நான் சந்தாதாரராகச் சேர விரும்புகிறேன். இத்துடன் ஒரு வருட/அரை வருட சந்தா ரூ............அனுப்பியுள்ளேன். பத்திரிகையை அடியிற்கண்ட விலாஸத்திற்கு அனுப்பி வையுங்கள்.

வணக்கம்.

விலாஸம் :—

....

....

....

மேல் நாடுகளில் இந்தியாவைப் பற்றி இன்னும் நடந்துவரும் துஷ்பிரசாரத்திற்கு ஒரு உதாரணம்.

மூட்டைப் பூச்சிக்கும் மந்திரவாதி!

இரண்டு நூற்றாண்டுகளாக நம் நாட்டில் பழகிக்கொண்டிருந்தும் ஆங்கிலேயர்களும் மற்ற வெள்ளையர்களும் நம் வாழ்க்கை வரலாறுகளைப் பற்றிச் சரிவர அறிந்துகொண்டிருக்கிறார்களாவென்பது சந்தேகம் தான். நம்மோடு நெருங்கிப் பழகி நம் வரலாறுகளைச் சரியாக அறிந்துகொண்டு நம்மைப் பற்றி மதிப்பு உயருமளவிற்கு இந்தியாவைக் குறித்துப் பிரசாரஞ் செய்யும் வெள்ளையருமுண்டு. ஆனால் இவர்களைவிடப் பன்மடங்கு அதிகமாகும், இந்தியா முழுவதும் ஒரேவாரத்தில் சுற்றுப்பிரயாணஞ் செய்து, அந்தக் காலத்தில் எவ்வளவு தெரிந்துகொள்ள முடியுமோ அவ்வளவையும் தெரிந்துகொண்டு தவறாகவும் விநோதமாகவும் இந்தியாவைப் பற்றி பிரசாரஞ் செய்யும் வெள்ளையர்களின் எண்ணிக்கை. இவர்களிலொருவர் இந்தியாவைப் பற்றி மேல் நாட்டுப் பத்திரிகையொன்றில் எழுதியுள்ள கட்டுரையின் சுவையான பகுதிகள் வருமாறு:—

இந்தியாவில் வெள்ளையர்களுக்குப் புரிந்துகொள்ள முடியாத விஷயங்கள் அநேகமுண்டு. இவையெல்லாம் இந்தியர்களின் மதங்களைப் பற்றிய விஷயங்களாகும்.

"காஷ்மீரத்தைச் சேர்ந்த ஸ்ரீநகரில் ஆணும் பெண்ணும் ஒரேமாதிரி ஆடைகளைத் தரித்துக்கொள்கிறார்கள். அக்பர் காஷ்மீரத்தை ஆக்கிரமித்தபோது வறுமையினால் வாடிக்கொண்டிருந்த காஷ்மீரத்து மக்கள் அவரை எதிர்க்கவேயில்லை. ஆணவமே காட்டாத மக்களைப் பற்றி தான்கொண்ட வெறுப்பின் சின்னமாக காஷ்மீரத்து மக்கள் ஆண், பெண் உள்பட அனைவரும் ஒரேமாதிரியான ஆடைகளை யணியவேண்டுமென்று அவர் உத்தரவிட்டாராம்.

"இந்தியாவின் சகல மதங்களின் கொள்கைப் பிரகாரம் ஜீவராசிகளை ஹிம்சிக்கவே கூடாது. எல்லா ஜீவராசிகளும் புனிதமானவை. ஆனால் வெளிநாட்டார்கள் புனிதமான ஜீவராசிகளைக் கொல்வதைப் பற்றி இந்தியர்களுக்கு ஆக்ஷேபணையில்லை.

"பஞ்சாபில் ஒரு கிராமத்தில் சிறுத்தையொன்று மிகவும் அட்டூழியம் புரிந்துகொண்டிருந்தது. அங்கு சென்ற இரு அமெரிக்கர்கள் கிராமத் தலைவனிடம் சிறுத்தையைக் கொன்றுவிடச் சொன்னார்கள். இதற்கு அவன் ஒப்பவில்லை. தகாத காரியம் கூறியதற்கு இவர்கள் மன்னிப்புக் கேட்டுக்கொண்டவுடன் கிராமத் தலைவன் அமெரிக்கர்களிடம் "சிறுத்தையை நீங்கள் வேண்டுமானால் கொன்றுவிடலாம், அது உங்கள் மதத்திற்குச் சம்மதந்தானே!" என்று கூறினனும்.

இங்கு சிறுத்தையைக் கொன்ற அமெரிக்கர்கள் சிம்லாவிற்குச் சென்றவுடனே அங்கு தங்கியிருந்த ஹோட்டலில் குரங்குகளின் ஹிம்சை பொறுக்க முடியாமலிருந்தது. ஆனால் "குரங்குகளை ஹிம்சிக்கக்கூடாது" என்று ஹோட்டல் மானேஜர் எச்சரித்துவிட்டாராம்.

"இந்தியாவிலுள்ள கிராமங்களெல்லாம் மிகவும் அசுத்தமானவை. கிராமவாசிகள் வசிக்கும் வீடுகளும் அசுத்தம் நிறைந்தவை. கிராமவாசிகள் உபயோகிக்கும் படுக்கைகள் மூட்டைப் பூச்சிகளால் நிறைந்தவை. மதக் கோட்பாடுகள் பிரகாரம் மூட்டைப் பூச்சிகளைக் கொல்லக்கூடாதல்லவா? மூட்டைப் பூச்சியின் உபத்திரவத்தையொழிப்பதற்காக ஒருமூட்டைப் பூச்சி மந்திரவாதி கிராமங்களுக்கு அடிக்கடிச்செல்வானும். அவனுக்கு ஓரணு அல்லது இரண்டணு கொடுத்தால் படுக்கையில் படுத்து படுக்கையிலுள்ள மூட்டைப் பூச்சிகளையெல்லாம் தன் தேகத்தில் ஏற்றிக்கொள்வான். மூட்டைப் பூச்சிக்கு விஷமாயுள்ள ஒரு பொருளை இவன் உட்கொள்வதால் மூட்டைப் பூச்சிகள் இவனைக் கடித்தவுடன் நாசமடைகின்றன.

"இந்தியாவில் ஜாதிப் பிரிவுகளின் கொடுமை இன்னும் ஒழிந்தபாடில்லை. தாழ்ந்த ஜாதியில் பிறந்தவனுக்கு கதிமோக்ஷமே கிடையாது. தன் ஜாதியைவிட்டு வெளியேறுவதற்கு மரணத்தைக்கூட ஒரு தண்டனையாகக் கருதுவதில்லை அநேக இந்தியர்கள்.

சில வருஷங்களுக்கு முன்பு இரு சகோதரர்கள் ஒரு தபால்காரனைக் கொன்றதற்காக மரண தண்டனை விதிக்கப்பட்டனர். மரண தண்டனையைக் கேட்டதும் இவர்களடைந்த மன மகிழ்ச்சிக்களவேயில்லை. மரண தண்டனையால் மிகவும் உயர்வான பதவியைப் பெற்றுவிட்டார்களென்று இவர்கள் கருதினர்களாம்."

அண்டத்தையே அழிக்கும் அணுகுண்டு

அணுகுண்டு வெடிப்பதால் நேரிடும் தீங்குகளுக் களவேயில்லை. ஒன்பது வருஷங்களுக்கு முன் அமெரிக்கர்கள் ஜப்பானில் இரு நகரங்களில் அணுகுண்டுகளை போட்டார்கள். அப்பொழுது அணுகுண்டு விழுந்த நகரத்திலிருந்து இருப்பத்தைந்து மைல் தூரத்திற்கப்பால் வசித்த ஒரு ஸ்திரீ சமீபத்தில் இறந்து போனாள். இவளைச் சில தீராத நோய்கள் பீடித்ததற்குக் காரணம் ரேடியக் கிளர்ச்சியுள்ள அணுக்கிரணங்கள் தாக்கியதேயாகும்.

இரண்டாம் மகா யுத்தம் முடிந்த பிறகு அநேக சந்தர்ப்பங் களில் அணுகுண்டு பிரயோகங்களும் ஜலவாயு குண்டு பரீக்ஷை களும் நடந்துள்ளன. பாலைவனங்களிலோ அல்லது ஒரு சமுத் திரத்திலோ தான் இந்தப் பரீக்ஷைகள் நடந்திருக்கிறதென்றாலும் சமீபத்தில் நடந்த பரீக்ஷையினால் அநேக ஜப்பானியச் செம்படவர் கள் பாதிக்கப்பட்டார்கள். இவர்கள் மீது குண்டுகள் பாயவில்லை. குண்டுகள் வெடிப்பதை இவர்கள் வெகு தூரத்திலிருந்து கண்ணால் கூடப் பார்க்கவில்லை. குண்டுகள் வெடித்தஇடத்திலிருந்து நூற்றுக் கணக்கான மைல் தொலைவிலிருந்த இவர்கள் மீது குண்டுகளின் சாம்பல் தூள் விழுந்ததால் இவர்கள் படாத பாடே இல்லை. மரண வேதனையனுபவித்து இவர்கள் படிப்படியாக மாண்டுபோய்க் கொண்டிருக்கின்றனர்.

மனிதனுக்கு இம்மாதிரித் தொல்லைகளைக் கொடுப்பதுமல்லா மல் அணுகுண்டினால் மற்றும் அநேக உபத்திரவங்களும் ஏற்படு கின்றன. ஆறு மாதங்களுக்கொருதடவையோ அல்லது ஒரு வருஷத்திற்கொருதடவையோ இந்தக் குண்டுகளை ஐந்தாறு வருஷங்களாக வெடித்துக்கொண்டு வந்ததனால் உலகத்தின் சீதோஷ்ண நிலையிலேயே மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டதாக அநேகர் கருதுகின்றனர். அமெரிக்காவின் மேற்குப் பக்கத்தில் பலமான புயற்காற்று அடித்ததேயில்லை. சென்ற நூற்றாண்டில் மூன்றே மூன்று தடவைகள் தான் புயற்காற்று அடித்துள்ளதாம்.

சென்ற வருஷ இறுதியிலும் இந்த வருஷ ஆரம்பத்திலும் ஜல வாயுக் குண்டுகளைப் பரிசோதித்தார்கள். சென்ற ஆறு மாதத்தில் மூன்று தடவை மிகவும் உக்கிரமான புயற்காற்று அமெரிக்க மேற்குப் பிரதேசங்களில் அடித்துள்ளது. இவற்றால் ஏற்பட்ட பொருட் சேதமும் மக்கட் சேதமும் மனிதனால் தாங்கமுடியாத அளவிற்கு ஏற்பட்டுள்ளன.

சாதாரணமாக அமெரிக்காவில் புயற்காற்று அடிப்பது கிழக்குப் பிரதேசங்களில்தான். திடீரென மேற்கு பிரதேசங்களைப் பாதிக்கும் புயற்காற்று அடிக்கும் காரணம் அணுக்குண்டுதானென்று மேல் நாட்டு விஞ்ஞானிகள் திட்டமாய்க் கூறுகின்றனர்.

காற்றுக்கும், மழைக்கும் காரணமாயிருப்பவை பூமண்டலத்தில் ஆங்காங்கிருக்கும் சில சூழ்நிலைகளே. வருஷத்தில் இரண்டு அணுகுண்டுகள் வெடித்தால் இந்த சூழ்நிலைகளெல்லாம் அறவே மாறிவிடும். இம்மாதிரி சூழ்நிலை மாறுவதால் பருவகால மழை, வெள்ளம் போன்று மக்களுக்கு நன்மை, தீமைகளை ஏறக்குறைய சமமாக விளைவித்துக்கொண்டிருக்கும் நிகழ்ச்சிகளெல்லாம் மறைந்து நூதன நிகழ்ச்சிகள் சம்பவிக்கின்றன.

சென்ற மாதம் நம் மாகாணத்தில் பெய்த மழைக்குக் காரணம் அமெரிக்கர்களும் ருஷ்யர்களும் வெடித்த அணு, ஜல வாயுக் குண்டுகள் தானென்று கூறுதல் மிகையாகாது. போதிய மட்டில் வருஷந்தோறும் மழை பெய்யாதிருக்கும் அநேக இடங்களில், இவ்வருஷம் பிரளயம் போல் மழை பெய்ததற்கும் காரணம் அணுகுண்டாயிருக்கலாமல்லவா !



CONSULT

K. M. S. Press

1/C.17, DINROZE ESTATE
MOUNT ROAD, MADRAS-2

FOR ALL HIGH CLASS
JOB & BOOK WORK
IN ENGLISH & TAMIL

வேண்டாம், வேண்டாம் பெண் ஜன்மம்!

●

தமிழ் நாட்டில் பொதுவாகப் பெற்றோர்களுக்கு பெண் குழந்தைகள் மீது அதிக வாஞ்சையும அக்கறையுமுண்டு. இதற்கு அடிப்படையான காரணம்—ஆண்களுக்கு அளிக்கும் கல்வியினாலும் அவர்களுடைய பிறவியிலேயே ஏற்பட்டுள்ள திறமையினாலும் வாழ்க்கையை ஏறக்குறைய சௌகரியமாக நடத்தி விடுவார்கள்; ஆனால் பெண்கள் வாழ்க்கைக்கு மற்றவர்களின் ஆதரவு இன்றியமையாதது; ஆகையினால் இந்த ஆதரவை எவ்வளவு காலம் அளிக்க முடியுமோ அவ்வளவு காலத்திற்கு அளிக்கவேண்டுமென்ற அக்கறைதான்.

இதனால் பெரும்பாலோர் குடும்பங்களிலும் ஆண் மகனைவிடப் பெண்ணே யாவற்றிற்கும் அதிக சலுகையும் பாராட்டுதலும் பெறுவது சகஜமாயிருக்கிறது. பெண் குழந்தைக்கு வித விதமான ஆடைகள், போதிய அளவிற்கு ஆபரணங்கள், ஆரோக்கியத்தைப பற்றிய பிரத்தியேகக் கவனிப்பு, கல்வி, சங்கீதம் முதலிய விஷயங்களில் பணச் செலவைப் பாராமல் மிகுந்த சிரத்தையெடுத்துக் கொள்ளப்படுகிறது. தேவையான சந்தர்ப்பங்களிலெல்லாம் கடைகளுக்கு ஆண் குழந்தைகளை விரட்டுவதிலிருந்து 'அம்பி'க்கு தீபாவளி ஆடைகள் வாங்கினாலும் வாங்காவிட்டாலும் அக்காவுக்கு தீபாவளிக்கு பட்டாடைகள் வாங்குவதுவரையிலும் பெண் குழந்தையென்றால் குடும்பத்தில் ஒரு தனி ரகம் தானே, பாக்கியெல்லாம் அதற்குப் பிறகுதான்.

மேல் நாட்டு மாதர்கள் தமிழ் நாட்டில் நிலவியுள்ள இந்த நிலைமையை அறிந்தால் பெருமூச்சுத் தான் விடுவார்கள். அங்குள்ள நிலைமையைப் பற்றி ஒரு மேல் நாட்டு மாது எழுதுவதைக் கவனியுங்கள் :—

"பெண்கள் தாயாரின் முழங்கால் அளவிற்கு வளர்ந்ததிலிருந்தே அவர் பாடு பரிதாபகரமானது தான். ஆண் குழந்தையை விளையாடுவதற்கு வெளியே துரத்துவார்கள்.

பெண் குழந்தையையோ 'அவள் வர முடியாதப்பா, தாயார் உதவிக்கு வேறு யார்? என்று கூறி வீட்டில் 'கட்டி'ப் போட்டுவிடுவார்கள்.'

'அண்ணு வீட்டு வேலை ஒன்றும் செய்வதில்லையே, நான் ஏன் செய்யவேண்டும்?' என்று ஒரு பெண் கேட்டால் அதற்கு 'அவன் விஷயமே வேறு' என்று தான் பதில் வரும்.

ஆண் பிள்ளை விஷயமே வேறு. இதுவேதான் சமூகத்தில் குழந்தைகளை வளர்க்கும் முறைக்கு அடிப்படை.

ஆண்கள் எந்த அட்டூழியமும் புரியலாம். ஏனென்றுல் அவர்கள் என்ன அட்டூழியஞ் செய்தாலும் எவ்வளவு விகாரமாய் நடந்துகொண்டாலும் அவையெல்லாம் அவர்களுக்கு விவேகமளிக்கும் காரியங்கள். அம்முறையில் பெண்கள் நடந்தால் அவர்கள் வாழ்வு அதோ கதி தான்.

இப்படி வளர்க்கப்படும் பெண்களுக்கு வாழ்க்கையில் இரண்டே வழிகள் தானுள்ளன. ஒன்று ஆணுக்குப் பணிவிடை செய்து அவனுக்கு அடிமையாயிருந்து பரலோகத்தில் நற்கதியடையலாம். மற்றென்று ஆசாரம், அனுஷ்டானம், சமூகக் கட்டுப்பாடு முதலியவற்றையும் அறவே யொழித்துக்கட்டி அவர்களிஷ்டப்படி நடந்துகொண்டு ஏழு ஜன்மங்களுக்குப் போதுமான கெட்ட பெயரை வாங்கி விடலாம்.

இதில் எந்த வழியைக் கையாளுவது என்பது தான் என்னைப் போன்ற பகுத்தறிவு பெற்ற பெண்களுக்குள்ள தலைவலி. வயது முடிந்தும் ஒரு மணமாகாத ஆணைப் பற்றி எல்லோருக்கும் அபிமானமும் அனுதாபமும் உண்டு. மணமாகாத ஸ்திரீயைப் பற்றியோ அவளிடம் நேரிடையாக ஒருவரும் ஒன்றுஞ் சொல்லாவிட்டாலும் எல்லாருக்கும் அவளைப் பற்றி பரிதாபமும் அவளுடைய நடத்தையைப் பற்றிச் சந்தேகமும் தான். மணமாகாத ஒரு பெண் ஒரு ஆணுடைய ஆதரவும் உதவியுமில்லாமலே மானமாகக் காலங் கழித்தால் அவளைப் பற்றி அவள் தைரியசாலி, மற்றவர்களுக்கு ஒரு படிப்பினை என்று எவராவது சொல்வார்களா? ஒருக்காலும் கூறமாட்டார்கள்!

"ஒரு ஸ்திரீ பிரசவித்ததும் எல்லோரும் என்ன சொல்கிருர்கள். ஆண் குழந்தை பிறந்தால் "அவள் அதிருஷ்டசாலி ஆண் குழந்தையைப் பெற்றுவிட்டாள்" என்று ஒரு மகா யுத்தத்தில் வெற்றி கிடைத்தது போன்று அகமகிழ்வார்கள்.

பெண் குழந்தை பிறந்திடிலோ வீட்டில் நிலவியிருக்கும் அமைதியிலிருந்தும் குடும்பத்திலுள்ளோரின் முகபாவத்திலிருந்தும் ஒருவரையும் ஒன்றுங் கேளாமலே இந்த உண்மையை அறிந்துகொள்ளலாம்.

'ஆண் குழந்தைக்குத் தான் உயர்தரக் கல்விக்கு உரிமை, ஆண் குழந்தைக்குத் தான் வாழ்க்கை வசதிகளும் மற்ற சலுகைகளும், பெண் குழந்

தைக்கு எல்லா விஷயங்களிலும் தாழ்வான ஸ்தானம் தான்.

'வயதான அத்தையும், பாட்டியும் உயில் பத்திரம் எழுதும் போது ஆண்களுக்குத் தான் சொத்தில் பெரும்பாகத்தை எழுதி வைக்கிறார்கள். பெண்களுக்கோ ஏதோ கிடைத்த தென்ற அற்ப சந்தோஷந்தான் ஏற்படும்.

'ஒரு ஆண் காலையில் இரு தடவைகள் தும்மிவிட்டால் போதும், 'ஐயோபாவம்!'என்று அங்கலாய்த்து கல்லூரிக்கோ, காரியாலயத்துக்கோ போக வேண்டாமென்று பெற்றோர்களோ அல்லது மற்ற முதியவர்களான உறவினர்களோ கூறுவார்கள். ஒரு பெண்ணுக்கோ உண்மையிலேயே ஜுரங் கண்டிருந்து ஓய்வெடுத்துக்கொள்ள விரும்பினால் "இவள் பெரிய ஜாலக்காரியாக இருக்கிறாள்" என்று எல்லோரும் ஏளனஞ் செய்வார்கள்!

வாழ்க்கையிலீடுபட்டு குழந்தைகளையும் பெற்றுவிட்டால் பின்பு ஒரு ஸ்திரீக்கு ஓய்வு என்ற வார்த்தையைச் சொல்வதற்கே உரிமையில்லை!

ஆண்கள் எவ்விதத்திலும் அதிருஷ்டசாலிகள். அவர்களுடைய வாழ்க்கை உரிமைகளாலும், வசதிகளாலும், சலுகைகளாலும் நிரம்பியது. வாழ்நாள் முழுவதும் ஹோட்டலில் தங்குவது போல் தனக்குவேண்டியதைக் கேட்டு அவற்றைப் பெற்றுக்கொண்டு வசதிகளோடு மகிழ்ச்சியாகக் காலந் தள்ளிவிடுகிறார்கள். அவர்களுக்குக் கடமையென்று ஏதாவதொன்றிருந்தால் அது ஒன்றே தான்! அது வருவாய் தேடுவது மட்டுமே!

'எனக்கு இன்னொரு ஜன்மம் இருக்குமானால் அதில் ஆணாய்த்தான் பிறப்பேன்; பெண்ணாய்ப் பிறக்கவேமாட்டேன்; இது உறுதி.'

"குச்சாமாமா"வின் சிறு தொடர்கதை—மூன்றும் பாகம்

போதும், போதும் பட்டணவாசம்!

X

வேட்டகத்து தாஸன்

அய்யங்கார் ஸ்வாமிகள் ஏதோ பேசவாயெடுத்தார். அதற்குள் சேஷிப்பாட்டி அவ்விடம் வந்து சேரவே எல்லோருக்கும் ஓரளவு ஆச்சரியம் ஏற்பட்டது.

"ராமனிருக்குமிடம் அயோத்தி, என்பார்கள். பிள்ளையைத்தேடிக்கொண்டு வந்துவிட்டீர்களா? வாருங்கள்" என்று வரவேற்றார் அய்யங்கார்.

"இல்லை, பிள்ளையையும் நாட்டுப் பெண்ணையும் உங்கள் வீட்டோடு வைத்துக்கொள்ள ஏற்பாடு செய்துவிட்டீர்களோ என்று எண்ணிவிட்டேன்" என்றாள் சேஷிப்பாட்டி.

"இல்லை, இல்லை, இனிமேல் இவர்களுக்கு வீடு மாறுதல் எதுவுமிராது. பட்டணத்தில் ஒரு வருஷத்துக்குள் மூன்று தரம் வீடு மாற்றியதைப் பற்றிக் கேட்டுக் கொண்டிருந்தேன். கடைசியில் இருந்த வீட்டைப் பற்றி உங்களுக்குத்தான் ஏதோ ஆக்ஷேபணைகள் இருந்ததாம். அவ்விவரத்தை உங்களிடம் கேட்கவேணுமென்று எண்ணிக் கொண்டிருந்தேன், நீங்களே வந்துவிட்டீர்கள்" என்றார் ஸ்ரீமான் அய்யங்கார் ஸ்வாமிகள்.

"நூத்தைக் கெடுத்துதாம் குறுணி, என்று சொல்வார்களே அது போல நூறு பேர் நல்லவர்களுக்கு நடுவில் ஒரு இடக்குப்பேர்வழி இருந்தால்...அந்த நூறுபேரும் ஒரே நாழியில் அழுகைப் பேர்வழிகளாகிவிடுவர்.

நாங்கள் மூணாவது வீட்டுக்குப் போனோம். அந்த வீட்டில் ஒரு பக்கம் நாங்கள் இருந்தோம். எதிர்ப் பக்கத்தில் வேறொரு குடித்தனக்காரர். அந்தாத்துப் பிள்ளை நடராஜன் ரொம்ப அப்பாவி. எங்கேயோ 'மவுண்ட் ரோட்லே' உத்தியோகமாம்; இருநூறு ரூபாய் சம்பளமாம். அவனுடைய அம்மாவும் அப்பாவும் எங்கேயோ சிதம்பரத்திற்குச் சமீபத்தில் கிராமத்தில் இருக்கிறார்களாம்; பிள்ளையாண்டான் கலியாணமாகி பட்டணத்தில் குடித்தனம் செய்து கொண்டிருக்கிறான். எவ்வளவோ சிறப்பாகக் குடித்தனத்தைப் பண்ணலாம். கொடுத்துவைக்காத 'அப்பாவி.' ஊரிலிருக்கும் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் ஒரு காலணா அனுப்புவதில்லை.

கூடப்பிறந்தவள் ஒரு தங்கை. பம்பாயில் வாழ்க்கைப்பட்டிருக்காள். அப்படியாக ஒண்ணும் சாய்காலான இடமில்லே. ஒரு பண்டிகை படி செட்டுக்காவது ஏதாவது அனுப்பலாமே. இல்லே.'' இங்கே குறுக்கிட்ட அய்யங்கார் ''ஏன்? ஏதாவது கெட்ட பழக்கங்கள் ஏற்பட்டுப் பணம் போய்க்கொண்டிருந்ததோ?'' என்றார்.

''நான்தான் அவனை ஒரு 'அப்பாவி' என்றேனே. அதிலே எல்லாம் அடங்கிப்போயிடுத்து. 'அப்பாவி'த்தனந் தவிர ஒரு கெட்ட பழக்கமும் கிடையாது. இருக்கவும் முடியாதே'' என்றாள் சேஷிப்பாட்டி.

''கொஞ்சம் புரியும்படித்தான் சொல்லுங்களேன் பாட்டி'' என்றார் அய்யங்கார் ஸ்வாமிகள்.

''வேட்டகத்துதாஸன்'' அவ்வளவு தான். ஒரு சட்டை மாத்திக் கொள்ளவேண்டுமென்றாலும் 'அப்படி ஒண்ணும் அழுக்காகி விடவில்லே. இந்த வாரம் எல்லாம் தள்ளலாம்' என்பாள் அவனும்படையாள் சிவகாமி. இந்தப் பிள்ளை சரி என்று சிவனேன்னு அந்தச் சட்டையையே போட்டுக்கிண்டு போயிடும். ஒரு சமய சந்தர்ப்பமென்னு ஒரு பத்து ரூபாய் கேட்டனுப்புவார் அவனப்பா. கடிதத்தை நடராஜன் கண்ணிலேயே காண்பிக்கமாட்டாள் சிவகாமி. பாவம்! அந்தப் பிள்ளைக்கு எப்படித்தான் இந்த மிருகங்களோடு வாழ முடிந்ததோ. ஒரு தரம் எப்படியோ இந்தப் பிள்ளைக்கு அவன் அப்பா எழுதின கடிதத்தைப் பற்றின விவரம் தெரிய வந்தது. அதைப் பற்றி சிவகாமியிடம் கேட்டுவிட்டான். உடனே வீடு கிமிலோகப்பட்டது. ''ஆமாம் பணம், பணம், பணம், கேழ்க்கிறவாளுக்கென்ன? கொடுக்கரவாள் இருந்தால் கொடுக்கவும் செய்தால்—கொடுக்கக் கொடுக்க கேட்டுக்கொண்டேதான் இருப்பா. இங்கே என்ன கொடுப்பதற்கு அப்படி கொட்டியா வைத்திருக்கு? பட்டணவாஸக் குடித்தனம். தொட்டதிற்கெல்லாம், பணம். நானும் இங்கே வந்து மூணு வருஷமா குடித்தனம் பண்ணியாச்சு. ஒரு நல்லது ஒரு பொல்லாதது அறிவேணு? ஒரு நகை நட்டு ஏதாவது உண்டா?'' என்றபோது நடராஜன் ''ஏண்டீ சிவகாமி உன்னை ஒன்று கேட்கிறேன். உன் அப்பா, அம்மா, தம்பி தங்கை நாலு பேரும் இப்போதைக்கு 2 வருஷமா இங்கே இருக்கிறார்களே, கஷ்டமோ நிஷ்டூரமோ நாம் குடிக்குங் கஞ்சியில் அவர்களுக்கும் ஒரு அரை வயிறுவது கொடுக்கவில்லே? மானத்தைக் காப்பதற்காகவாவது வேண்டிய துணிமணிகளைக் கொடுக்காமலா விட்டுவிட்டோம். அது போல...'' இதற்குள்வானமே இடிந்து விழுந்ததுபோல ஒரு அமர்க்களம்.

"ஐயோ என் அப்பாவையும் அம்மாவையும் ஏன் கரித்துக் கொட்டிக்கொள்கிறீர். அவர்கள் என்ன பருப்பும் பாயஸமுமா கேட்கிறுர்கள்? என்ன செய்யலாம்? ஐந்தாறு வருஷங்களாக மழை இல்லாமல் விளைவு இல்லை. ஏதோ கொஞ்சம் நஞ்சம் குத்தகை வருவதை கடனுக்கு அவாலத்து பண்ணினது போக மிச்சமிருந்ததை ஏதோ பின்னல் கல்யாணத்திற்கு ஒரு குழந்தை இருக்கிருளே என்று ஒரு மூலையில் முடிச்சுபோட்டு வைக்கிருர்கள். அதனல் அவர்களுக்கு தற்சமயம் கொஞ்சம் போராதகாலம். போராத காலத்தைப் பசங்களோடு கழிக்கலாமே என்றுதானே இங்கே வந்திருக்கிருர்கள். அவர்களால் உங்களுக்குச் செலவு என்று தோன்றினல் நான் ஒன்று சொல்கிறேன். அப்பாவை நாளை முதல் நாலு தெருவுக்குப் போய் உஞ்ஜவிருத்திபண்ணிக் கொண்டுவரச் சொல்கிறேன். அம்மாவும் சிறிசுகள் இரண்டும் கூடவே போய் வரட்டும். அந்த கௌரவத்தை நீங்கள் வாங்கி போர்த்திக் கொள்ளுங்கள்; செலவையும் மிச்சப்படுத்திக் கொள்ளுங்கள்" என்று சொல்லிக்கொண்டே ஒரு குண்டான் செம்பைக்கொண்டுவந்து தன் அப்பாவின் முன் வைத்து "இது தான் அப்பா நாளை முதல் உங்களுடைய அக்ஷய பாத்திரம்" என்று ஒரே அட்டஹாசம் செய்துவிட்டாள்.

நடராஜன் ரொம்ப மானி. அவனுக்கு இந்த அனுபவத்தால் நாக்கைப் பிடுங்கிக்கொள்ள வேணும் போல் இருந்தது. கெஞ்சிக் கூத்தாடி சிவகாமியைச் சாந்தப்படுத்தி, மாமனர் காலில் ஸாஷ்டாங்கமாக நமஸ்காரம் பண்ணி ஏதோ தெரியாமல் நேர்ந்துவிட்ட அபசாரங்களை மன்னிக்கும்படியும், உஞ்ஜவிருத்தி பாத்திரத்தைத் தரும்படியும் கேட்டுவாங்கிக்கொண்டு சமாதானஞ் செய்தான்.

அந்த மாமனர் பிராமணனே—"தெரியாமல் நேர்ந்ததோ அல்லது தெரிந்தே தான் செய்தீர்களோ மாப்பிள்ளை, நீங்கள் யார்? எனக்கு அன்னியரா அசலாரா? எல்லாவற்றிற்கும் காலம் என்று ஒன்றிருக்கிறதல்லவா? அதை மறந்து உங்கள் மேல் எப்படி மனஸ்தாபப்படுவது?"

அந்த மாமியாரோ... காலமோ...தேசமோ...? உங்கள் வேதாந்தமும் நீங்களும், அன்றைக்கே என் வார்த்தையை ஒரு கடுகளவு மதித்து நம்ம சிவகாமியை அந்த மலைப்புரம் பிள்ளைக்குக் கொடுத்திருந்தால்...? அதோ பாருங்கள் அந்த பிள்ளைக்குக் கொடுத்த வஞ்ஜுளம் எப்படி இருக்கிருள்..." என்று இன்னும் ஏதோ சொல்ல விருக்கையில். ஐயோ அம்மா...என் அதிர்ஷ்டம் இப்படி இடிபட்டுச்சாக

வும் என்னால் நீங்களும் இப்படி ஏச்சும் பேச்சும் கேட்கவும் இருக்கும்போது யாரைச் சொல்லி என்ன பயன்? நீயுமா அப்பாவை குத்திக்காட்ட வேணும்?'' என்றாள் சிவகாமி.

நடராஜன் மற்றொரு முறை எல்லோரையும் பணிந்து கேட்டுக் கொண்டதுடன் சற்று அமைதி நிலவியது. அதற்குள் அவனுக்கு ஆபீஸ் நேரமாகி விடவே மோருஞ்சாதமுஞ் சாப்பிட்டுவிட்டுப் போனான்.

சம்பாதிக்கிற பிள்ளை காலமே 10 மணிக்கு வெளியிலேபோய் சாயந்திரம் 6 மணிக்கு வரவன். அவனை வெறுஞ்சோறும் மோரும்போட்டு அனுப்பி மத்யானத்திற்கும் ஒன்னும் கொடுத்து அனுப்பாமே, வீட்டிலே நிழலோடு தின்னுத்தடிக்கும் பேர்வழிகள் காயும் கறியுமாகச் சமைத்துச் சாப்பிட்டுத் தடிக்கணுமாம். இந்த உடம்பை நிறுத்து ஒப்பிக்கவேணுமா எமனுக்கு? இதுகளைப் பார்த்து என் குழந்தைகள் கோணவழியில் போயிட்டா என்ன செய்யறது? அப்படி எனக்கு ஒரு பயம் வந்து நெஞ்சிலே புகுந்து கொண்டது. பன்னியோடு சேர்ந்த கன்னு என்பாளே! அப்படி ஆயிட்டா? சீ, சீ இந்த சகவாஸம் நமக்கு ஆபத்து என்று தீர்மானிச்சுட்டேன்.''

XI

வட்டியில்லாக் கொடுக்கல் வாங்கல்

சேஷிப்பாட்டி தொடர்ந்து சொன்னாள்.

"நடராஜனின் தங்கை பம்பாயிலிருந்தாளே, அவளுக்கு ஒருகுழந்தை பிறந்ததாம். ஊரில் அவாப்பாபாவுக்குத் தெரியப் படுத்தி இருந்தா. அந்தப் பிராமணன் நடராஜனுக்குத் தெரியப்படுத்தினார். பிரஸவத்திற்கே நாம் அழைத்து வந்திருக்கவேண்டியது. நமக்கு அதற்கு வசதிப்படவில்லை. புண்யாகவாசனத்திற்கு புடவை வேஷ்டி எல்லாம் வாங்கி எப்படி எப்படியோ நடத்திவைக்கவேணும். அதெல்லாம் சாயாவிட்டாலும், அம்மான் ஆசீர்வாதமாக ஒரு பத்து ரூபாயாவது அனுப்பி வைத்தால்நன்னாயிருக்கும். பிறகுஉன் சௌகர்யம் என்று நடராஜனின் அப்பா தெரிவித்திருந்தார்.

இங்கே நடராஜன் படும் அவஸ்தை அவருக்கு என்ன தெரியுமோ......யார் கண்டது? கடிதம் வந்ததுதான்? நடராஜன் வீட்டில் பூசல் கிளம்பி விட்டது. பாத்திரங்கள் ஒன்றோடொன்று பட்ட இடியும், கதவு டபார் டபார் என்று மூடப் பட்ட வகையும்—வீட்டில் ஒரே பூகம்பந்தான். ஆனாலும் நடராஜன் பொறுத்துக்கொண்டு விஷயத்தை மெதுவாகப் பிரஸ்தாபத்துடன் ஏதோ சமாதானமாகப் பேசினான்.

198753

எல்லாம் இருந்தால் செய்ய வேண்டியதுதான். இந்த செலவும் பத்து நாள் முன்னாடி வந்திருக்கப்படாதோ? செய்துக்கிறவாளுக்கும் ஒரு அதிர்ஷ்டம் வேணும் பாருங்கோ மாப்பிள்ளே! போனவாரந்தான் மூலே, முடக்கெல்லாம் துடைத்து எடுத்து கிடைத்த பணத்தோடு துண்டு விழுந்த ரெண்டு ரூபாயை என் கையிலிருந்து போட்டுச் சரிக்கட்டி அம்பியோட சம்பளத்தைக் கட்டச் சொன்னேன். இப்படி ஒரு செலவு கையில் காலணு இல்லாத வேளே பார்த்து வந்திருக்கிறது! என்ன செய்யலாம்? எல்லாம் வேளே, மாப்பிள்ளே", என்றார் அந்தப் பிராமணன்.

ஆமாம், பாட்டி! இந்த "அம்பி" யாரு? என்றார் அய்யங்கார் ஸ்வாமி. அப்போது அவர் தேவி "போருமே ஓங்க சமத்து. ராத்திரியெல்லாம் ராமாயணம் கேட்டுக் காலேயில் சீதைக்கும் ராமனுக்கும் என்ன உறவு என்று கேட்ட மாதிரி, இந்த சமத்துதானே உங்களுக்கு அந்தநாள் முதல்......" என்றாள்.

அய்யங்கார் "சரி, சரி புரிந்தது. உன் பழைய புராணத்தை ஆரம்பிக்காதே. இந்த 'அம்பி' தான் நடராஜனின் மைத்துனன். நடராஜன் பணத்துடன் அவன் மாமனார் துண்டு விழுந்த ரெண்டு ரூபாயைத் தன் கையிலிருந்து போட்டு அம்பியின் சம்பளத்தைக் கட்டினாராக்கும்!' சரி, சரி அப்புறம் என்ன ஆச்சு பாட்டி?"

"அப்புறமென்ன? அந்தப் பிள்ளே நடராஜன் வாயைத் திறக்கவில்லே. கண்ணே முழிக்கவில்லே. சிவனேனு பேசமா போயிடுத்து," என்றாள் சேஷிப் பாட்டி.

வியப்புடன் ஒரு பெருமூச்சை விட்டு அய்யங்கார் ஸ்வாமி சற்று நிமிர்ந்து உட்கார்ந்தார்.

"இத்தனையும் நாங்கள் குடித்தனம் போய்ச் சேர்ந்த ஒரு வாரத்திற்குள்ளே நடந்த வைபவம். அப்பத்தான் கல்யாணம், சீலாவை வரச்சொல்லி மதுரைக்குத் தெரிவிக்கலாமா என்று கேட்டான். எனக்கிருந்த கலவரத்தில் நான் என்ன சொல்ல முடியும்? கொஞ்சம் பொறு என்றேன். பெருமாளே! பிறந்த பிறப்போடே சொல்ராப்பலே சொல்றேன். என் மனசு குன்னி போயிடுத்து. சிறிசுகள் அது அது வயசுக்கு ஒத்தாப்பலே இருக்கவேண்டிய மாதிரி இருக்கணும். நாம் ஒரு தடையைப் பண்ணவேண்டி இருக்கேன்னு என் மனசு புழுங்கிப் போயிடுத்து.

அடுத்து ஒரு பத்து நாளாயிருக்கும் பாருங்கோ. அப்போ சிவகாமியின் அக்கா டில்லியிலிருந்து கடுதாசு போட்டாள், அவள் குழந்தைக்கு ஆண்டு நிறைவூன்னுட்டு. அதைப் பார்த்ததும் வீட்டிலே ஒரு பர

பரப்பு. யார் யார் டில்லிக்குப் போவது? என்னென்ன வாங்கிப்போவது? என்றெல்லாம் பேச்சு. இந்தப் பேச்செல்லாம் காதில் விழுந்த மாதிரி கூட நடராஜன் காண்பிக்கவில்லை, தான் அந்த வீட்டில்தானிருப்பதாகவாவது நினைப்பிருந்ததோ என்னவோ? அன்றைய பொழுது சிவகாமி, அவள் அப்பா, அம்மா—இவர்கள்வரையில் தான் பேச்செல்லாம்.

மறுநாள் "இரண்டுநாளாய் இந்த வீட்டில்தானே இருக்கிறீர்கள்?" என்று ஆரம்பித்தாள் சிவகாமி நடராஜனிடம்.

"ஏன் உனக்கென்ன அதில் சந்தேகம்?" என்றான் நடராஜன்.

"இல்லே...இங்கே என்ன விஷயத்தைப்பற்றி வீட்டில் அவ்வளவு பேரும் அல்லாடிப் போகிறோமென்று தெரியுமோல்லியோ?"

"அல்லாட்டமா? டெல்லி ஆண்டு நிறைவைப் பற்றி ஏதோ பேசிக்கொண்டிருந்தீர்கள். உங்களுக்குள் பேசி நீங்கள் தீர்மானிப்பதில் எனக்கென்ன செய்யக் கிடக்கிறது?" என்றான் நடராஜன்.

"அப்படியா? சரிதான், சரிதான். கேட்டேளா அப்பா? டெல்லி ஆண்டு நிறைவாம், டெல்லீங்கர ஊருக்கு ஆண்டு நிறைவாம், நமக்குள்ளே பேசிக் கொண்டு நமக்குள்ளே தீர்மானிக்கறதாம். இவருக்கொண்ணும் இல்லையாம். நாம் யாரோ தெருவோடே போரவாளாக்கும். இந்த சீமான் உப்பரிக்கையிலே இருப்பவர். தெருவோட போர அனைதைகளைப்பற்றி இவருக் கென்ன? அப்படி இருக்கு, மனுஷ்யாளிடம் ஒண்டுதல். இப்படி ஒரு ஒண்டாத ஆண்டியே பார்த்து என்னே குழியிலே தள்ளினேளே!" என்று ஒப்பாரிவைத்து அழ ஆரம்பித்துவிட்டாள், சிவகாமி.

"பொறுத்துக்கோம்மா பொறுத்துக்கோ, என்ன செய்யலாம், எல்லாம் வேளையின் கொடுமை" என்று அவளை அவள்அப்பா சமாதானப் படுத்த முயன்றார்.

"வேளையாவது நாழியாவது! நான் அப்பவே சொன்னேன்; சிவகாமியே அந்த மலைப்புரம் பிள்ளைக்கே கொடுங்கள் என்னு. என் பேச்சை எங்கே கேட்டா? கிளியை வளத்து பூனைகிட்டே கொடுத்துட்டேண்டியம்மா, அது என் வயிறு பண்ணின பாக்யம்" என்று துணை ஒப்பாரியுடன் சொன்ன சிவகாமியின் அம்மா 'என் வயிறு என் வயிறு' என்று இரண்டு முறை வயிற்றில் அடித்துக் கொண்டாள்.

நடராஜன் "ஐயோ என் மானம் போகிறதே இப்போ! என்ன நடந்ததாக இவ்வளவு ஆர்பாட்டம்? பேச்சுக்கு, பேச்சுதானே பதில். இப்படியா ஒரு ரகளை கூட்டுவா? தயவு செய்து இந்த ரகளை நிலையை

நிறுத்தி விஷயத்தைச் சொல்லுங்கள். வீணாக நாலுபேர் சிரிக்கும்படி ஒன்றும் வேண்டாமே" என்று கெஞ்சாத குறையாகக் கேட்டான்.

ஆமாம் எங்களாலே உங்கள் மானம் போகத்தானே செய்யும்! ஏன் போகாது? தெருவோட போர அனாதைகளை வீட்டில் சேர்த்துக் கொண்டால் மானம் போகமவிருக்குமா? மானம் போகாமல் இங்கே வாழணுமாம். ஆனால் எங்கள் இத்தனைபேர் மானமும் டெல்லியில் போனால் உங்களுக்குப் பரவாயில்லையாக்கும்! சொல்லப்போனால் ரகளையாம். நாமெல்லாம் பேய்கள்! பிசாசுகள்! ரகளை செய்யாமல் எப்படி இருப்போம்? ஏன் நீங்கள் மாத்திரம் ரொம்ப சாத்வீகராய் இருந்திருக்கப்படாதோ? இந்தப் பேய்களைக் கட்டிக்கொள்ளாமல் இருந்திருக்கப்படாதோ? நானும் சுகப்பட்டிருப்பேனே? நாலுபேர் சிரிப்பாளா. நாலுபேரோடே இருக்கக் கண்டுதானே அவா சிரிப்பது. மூக்கு இருந்தால் சளி பிடிக்காமல் இருக்குமா? வீடு வாசல் பெண்டாட்டி, பிள்ளை என்னு நாலுபேரைப்போல குடித்தனம் பண்ணினால் நாலுபேர் நல்லதை பொல்லாததைச் சொல்லாமவிருப்பாளா? அது கூடாது என்றால் தனியாக எங்கேயாவது காட்டுக்குப்போய் தபஸு பண்ணவேண்டியது தான். போங்கோளேன். எங்களை நடுத்தெருவில்விட்டு விட்டு மகராஜனாகப் போங்கள். நாங்கள் எக்கேடுக்கெட்டு எருக்கு முளைத்துப் போகிறோம். நீங்கள் கவலை இல்லாமல்—மனுஷ்ய சஞ்சாரமில்லாத தனிக்காட்டில், ஒருவரும் சிரிக்காதபடி தபஸு பண்ணிக்கொண்டிருங்கள்" என்று ஒரு பெருமழை பெய்த மாதிரிப் பேசினாள் சிவகாமி.

"இதெல்லாம் என்ன மாமா? நன்றாயிருக்கிறதா? நீங்களே சொல்லுங்கள்" என்றான் நடராஜன்.

அவன் மாமனார் ஒரு அதட்டு போட்டார் "சித்தே பேசாமே இருங்கோ. சிவகாமி விஷயத்தை விளக்கமாக மாப்பிள்ளையோடு சொல்லாமே என்னென்னமோ சொல்லிக்கொண்டே போகிறீர்களே. யாராவது கேட்டால் நாம் சண்டைபோடுகிறோமென்றுதானே எண்ணிக் கொள்வார்கள்? நீ பேசாதே இரு, நான் சொல்கிறேன்" என்று ஆரம்பித்தார்.

"இவர் சாமர்த்தியம் எப்படிப் பட்டது பாருங்கோ. குழந்தையையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டிவிடும் பேர்வழியன்னோ இந்தமனுஷன்!" என்று தொடர்ந்தாள் சேஷிப்பாட்டி.

அந்த மாமனார் சமாதானமாக உபதேசஞ்செய்ய ஆரம்பித்தார். "இதோ பாருங்கோ மாப்பிள்ளை, அதுகள் பொம்மனாட்டிகள், எதையாவது சொன்னாலும் நீங்கள் விஷயத்தை தீர்க்கமாக ஆராய்ந்து, செய்ய

வேண்டியதைத் தீர்மானிக்க வேணும். டெல்லியிலே போன வருஷம் குழந்தைபிறந்தபோதே நாம் ஒன்றும் விசேஷமாகச் செய்ய வசதிப்படவில்லே. நல்ல நாளைக் குறைக்கப்படாதே என்று வேஷ்டி சேலையைச் சுருக்கமாக ஒரு நூற்றைம்பதுக்குள்ளாகவும் இதர சீர்வகையை ஒரு நூறுக் குள்ளுமாக எப்படியோ ஒக்கத் தட்டி ஏதோ பிறகு பார்க்கலா மென்று விட்டுவிட்டோம். ஆனால் ஏதோ அன்ன பிராசனம், ஆருமாஸம் என்றெல்லாம் உண்டே இவற்றில் ஒன்றிற்காவது நாம் போகவுமில்லே, ஓதியிடவுமில்லே, ஒன்றும் அனுப்ப முடியவுமில்லே. ஆண்டுநிறைவிற்காவது போய்வருவோம்...ஆயிரங்காலத்துப் பயிர்; நாம் ஒரு ஆசிர்வாதஞ் சொல்லி நம்ம கையால் ஒரு அக்ஷதை அதன் தலேயில் அனுக்கிரஹித்து வருவோமென்ருல் சாதிக்கிற காரியமா? நாமெல்லோரும் கையை வீசிக்கொண்டு போய்வருவோமென்ருலும் ரெயில் சார்ஜு மட்டும் ரூபாய் இருநூறுக்கு மேல் பிடித்துவிடும். போனல் எல்லாருந்தானே போகவேண்டும்! யாரை விட்டுவிட்டு யார் போக முடியும்? எல்லாரும் போவதானல் உங்களுக்கு முதலில் லீவு கிடைக்க வேணுமே? அதனலே என்னைக் கேட்டால் பேசாமே ரயில்காரனுக்குக் கொடுப்பதாக எண்ணிக் கொண்டு ஒரு இருநூறே இருநூற்றைம்பதோ பணத்தை அனுப்பிவிட்டு வரமுடியாததற்கு ஏதாவது காரணத்தைச் சொல்லிவிட்டு சும்மா இருப்பது தான் உசிதம்.

நாம் போய்த்தான் வரவேணுமென்று சிவகாமிக்கும் அவள் அம்மாவுக்கும் ஆசை. போவதாயிருந்தால் அந்தக் குழந்தைக்கு ஏதாவது நாம் செய்யவேணும். இல்லாவிட்டால் நமக்கு அந்தஸ்துப்படாது. ஒரு $3\frac{1}{2}$ சவரனில் குழந்தைக்கு ஒரு அரை நாளம்-ஒரு $1\frac{1}{2}$ சவரனில் ஒரு சின்ன செயின்—அதில் பேருக்கு ஒரு டாலர் கோத்தாவது கொடுக்க வேணுமென்று ஆசை. அதெல்லாம் இப்போது சாத்தியப்படும் விஷயமல்ல. ஆகவே பணத்தை நான் சொன்னதுபோல் அனுப்பிவிடலாம். அவ்வளவுதான். இதை நேரச் சொல்லத் தெரியாமல் இந்த பொம்மனுட்டிகள் என்னமோ நீட்டி முழக்கி அவஸ்த்தை படுகிறதுகள்'' என்ருர்.

“ஆமாம் மாமா...கையில் காலணு இல்லாத சமயம். இப்போ 200க்கும் 250க்கும் எங்கே போவது'' என்ருன் நடராஜன்.

“அப்படித்தான் இருக்கும் மாப்பிள்ளே. ராஜாங்கங்களே 3 சத விகிதம், $3\frac{1}{2}$ சத விகிதம் வட்டி என்று கடன் வாங்க ஆரம்பித்து விட்டன. நம்மைப் போன்றவர் விஷயத்தைக் கேட்பானேன். பணம் எப்படியோ ஒருவகையில்லாவிட்டால் ஒரு வகையில் நாளைக்கே வரலாம். நாளும் கிழமையும் வருமா?

எங்கேயாவது கடனே கை மாத்தோ ஏற்பாடு பண்ணிவிடுங்கள். பிறகு கொஞ்சங் கொஞ்சமாகவாவது கொடுத்துக் கொண்டு வாருங்கள். அதில் அவ்வளவு கஷ்டமிராது பாருங்கள். நாள் கிழமைகளில் நாம் இன்றைக்கு ஒன்று செய்தால் அதை நாளைக்கு அவர்கள் மற்ருெரு சமயத்தில் பதிலுக்குச் செய்யப்போகிருர்கள். இதெல்லாம் ஒருவட்டியில்லாத கொடுக்கல் வாங்கல், அவ்வளவு தான்'' என்ருர் மாமனர் பிராமணன்.

நடராஜன் "சரிதான் மாமா ஒரே ஒரு சந்தேகம். பத்து நாட்களுக்கு முன் பம்பாயிலிருந்து வந்த கடிதத்திற்கு மட்டும் பணம் இல்லாமையை வலுவுறுத்தி 'செய்துகொள்கிறவர்களுக்கும் யோகம்வேண்டாமா? எல்லாம் காலம்' என்றீர்களே அது ஏன் உங்களுக்கு வட்டி இல்லாத கொடுக்கல் வாங்கல் என்று தோணவில்லை?"

"பாத்தயாடீ அம்மா! ஸாது ஸாதும்பயே, பாத்துக்கோ. நம்ப போதனையாலே தான் தன் தங்கைக்கு அங்கமணி எடுக்கவில்லையாம் இவர். நொண்டிக் குதிரைக்குச் சருக்கினது சாக்காளுப்போலே இவர் இந்த பழியை நம்ம மேலே தள்ளுகிற சாமர்த்தியத்தைப் பார்த்தாயோ, இல்லையோ? இது இன்றைய பேச்சில்லேம்மா. அன்னிக்கே இவர் பண்ணிக் கொண்ட தீர்மானம். அடபாவி மனுஷ்யா! உனக்கு இப்படி வயிற்றில் பல் முளைத்திருக்கிற தென்று தெரியாமல் போச்சே. நல்ல பாம்போடே கூட ஒரு கூரையின் கீழ் குடித்தனம் பண்ணுவது போல்தான் இந்த மனுஷனுடன் குடித்தனம் பண்ணுவது. தன் சௌகரியம்போல எல்லாம் நடக்கவேண்டும், அதில் குற்றம் குறைவு, ஏற்றத்தாழ்வு, ஏச்சுப்பேச்சு வந்தால் அதுவேட்டாத்து மனுஷாள் உபதேசத்தால் என்று ஒரு புரளிபண்ணி விட்டுத் தான் நல்ல பிள்ளையாய், அஜாதசத்ருவாய், இந்தப் பூனையும் இந்தப் பாலைக் குடிக்குமா என்று ஆஷாட பூதியாய் இருக்கவேணும். இப்பத்தானே மனுஷ்யன் குணம் வெளியாகிறது'' என்று இரண்டாம் முறையாக ஒப்பாரியை ஆரம்பித்து விட்டாள் சிவகாமி.

"அடி போடி பைத்தியமே, இப்பத்தான் மனுஷ்யன் குணம் வெளியாகிறதோ உனக்கு? இன்னும் போகப் போக சாயம் வெளுக்கும். போகப் போக தான் தெரியப்போகிறது. எனக்கென்னவோ அன்னிக்குப் பார்த்த உடனேயே தோன்றிற்று. இது சாம்பல் பூத்த தணல். இந்தப் பிள்ளையை பாம்பு என்று அடிக்கவும் முடியாது பழுது என்று தாண்டவும் முடியாது. பேசாதே குழந்தையை அந்த மலைப்புரம் பிள்ளைக்கே கொடுத்துவிடுங்கள் என்று தலையிலே தலையிலே அடிச்சிண்டேன். குட்டிச் சுவரிலே முட்டிண்ட மாதிரிதான். என் மண்டை போனது தான் மிச்

சம்'' என்று துணை ஒப்பாரியைத் தொடங்கினுள், சிவகாமியின் தாயார்.

இவர்களுடன் பிய்த்துக் கொண்டுபோன நடராஜனுக்கு அழுகையே வந்துவிட்டது. "தெய்வமே! உனக்குக் கண்ணில்லையா!'' என்று கதறிவிட்டான்.

உடனே சிவகாமியின் அப்பா பரபரப்புற்ருர். ஒப்பாரிக் காரிகளை அதட்டி நிறுத்தச் சொன்ஞர்.

''மாப்பிள்ளே! இதென்ன பைத்தியக்காரத்தனம்! நீங்கள் சொல்வது அடியோடு நன்ருயில்லே. கையில் பணமில்லேயே என்று அப்போது இருந்த நிலேமையைச் சொன்னேனே தவிர நீங்கள் கடனே உடனேபட்டுப் பணமனுப்புவதை நான் வேண்டாமென்று தடுத்ததுண்டா? என் தலேயில் பழியைப் போடுகிறீரே! ஒருக்கால் நானே தான் கடனுவது வாங்கியனுப்பும்படியும் சொன்னதாக வைத்துக் கொள்வோம். என் தங்கைக்கும் மருமானுக்கும் என்னசெய்ய வேண்டும் எப்படிச் செய்ய வேண்டுமென்பது, என் விஷயம்.'' அது எனக்குத் தெரியும். உங்களுக்குச் சம்பந்தப்பட்ட விஷயம் வரும்போது உங்களேயே கேட்கிறேன். நீங்களும் சொல்லலாம்'' என்று முகத்தில் அறைந்த மாதிரி எனக்கு பதில் சொன்னீர்களானல்என்னசெய்வது? அதனல் ஓரளவுக்கு மேல் நான் சொல்லப்படாதென்று இருந்தேன்.மேலும்உமதுதங்கை உமது மருமான். நீர் மாமா—காலத்திற்கும் நீர்தான் அம்மான் வரிசை செய்யக் கடமைப் பட்டவர். ஒரு சமயம் இல்லாவிட்டால் அதையும் சேர்த்து இன்னொரு சமயம் செய்துவிடப் போகிறீர். கடமையை அவ்வாறு செய்வதற்கும் வெளியிடங்களில் இன்றைக்குச் செய்து நாளேக்குப் பதிலாகச் செய்வித்துக் கொள்வதற்கும் வித்தியாசமிருக்கிறது. அதைத்தான் உங்களிடம் நான் இப்போது சொன்னது. இவ்வளவிற்கும் நியாயமாகப் பார்க்கப் போனல் நாம் இந்த இருநூறு ரூபாய்க்குச் செய்வது ஒருவகையில் சீர் செய்ததாகாது. நான் சொல்வது என்னவென்ருல், நாம் கல்யாணத்திற்குப் போய் வருவதானல் போய்வர ரெயில் காரனுக்குக் கொடுப்பதைத் தானே இவர்களுக்குக் கொடுக்கிறேம். கொடுத்தோம் என்று பெயர் மட்டும்தான். அதனல் இதை நீங்கள் செய்தே ஆக வேணுமென்று எனக்குத்தோன்றியது, சொன்னேன்'' என்ருர்.

இதற்குள் அந்த பிள்ளே நடராஜனுக்கு ஆபீஸுக்கு நேரமாகிவிட்டது. சட்டையைப் போட்டுக்கொண்டு தயாராய் நின்றது, பாவம். இலேயைப் போட்டு சாப்பிட வாவென்று ஒருத்தருஞ் சொல்லவில்லே. தெய்வமே என்று சாப்பிடாதேயே ஆபீசுக்குப் போச்சு.

அது அந்தப்புறம் போன உடனே வீட்டிலிருந்ததுகளெல்

லாம் வெந்நீரைப் போட்டுக் குளித்துவிட்டு ஓட்டலிலிருந்து நாலு தட்டுச் சாப்பாடு வரவழைத்துச் சாப்பிட்டுவிட்டுத் தூங்கிஎழுந்து—பகலும் ஓட்டலிலிருந்தே காப்பிப் பலகாரங்களை வரவழைத்துக்கொண்டு வீட்டில் அடுப்பே மூட்டவில்லை. ஒருவருமே சாப்பிடவில்லை போலும் ஒரு வேஷத்தைப் போட்டுக்கொண்டு அந்தப் பிள்ளைக்காகக் காத்துக்கொண்டு இருந்ததுகள்.

இப்படிப்பட்ட அஸுர கும்பல் நடுவில் குடித்தனமே இருக்கக்கூடாது. பொன்னான குழந்தை எங்கள் சீலா. இந்த ராக்ஷஸாளைப் பார்த்து எப்படி மாறுமோ? அதுகளைப்போல மாறிவிட்டாலும் துக்கம் இல்லே—அதுகளைப் பார்த்து மனம் முறிந்து பைத்தியம் பிடித்தாலும் பிடித்துவிடும். இந்த வம்பு, தும்பு, வழக்கு, வியாஜ்யம் ஒன்றும் வேண்டாம், என்று ஒரே தீர்மானத்திற்கு வந்துவிட்டேன். சீலாவை இந்த வீட்டிற்கு அழைத்து வருவதென்ற யோசனையை அடியோடு விட்டுவிடு என்று கல்யாணத்திடம் நேரிடையாய்ச் சொல்லவில்லை. ஆனால் அந்த அர்த்தம் பொருள் படச் சொல்லி விட்டேன். ஸ்வாமிதயவிலே அதுவும் நடந்து விட்டது'' என்றாள்.

''பட்டண வாழ்க்கை போதுமென்றாயிற்று. புளித்தும் விட்டது. அப்பொழுது தான் மாமா, நீங்கள் அனுப்பிய செய்தியை ஊதுவான் கொண்டு வந்தான். பழம் நழுவிப் பாலில் விழுந்தமாதிரியாயிற்று. ஊருக்கே வந்துவிட்டோம்'' என்றான் கல்யாணம்.

''அய்யங்கார் ஸ்வாமிகள் எல்லாம் நல்லதுக்குத்தான், இனிமேல் உங்களுக்கு ஒரு குறைவுமிராது'' என்றார்.

(முற்றும்)

புட்டியிலடைத்த புஷ்டி

●

பம்பாய் நகரத்திலிருந்து இருபது மைல் தொலைவில் 'ஆரே' என்ற ஒரு கிராமமிருக்கிறது. இங்கு பதினாறாயிரம் எருமைகள் கொண்ட ஒரு பால் பண்ணை இருக்கிறது. ஆசியா கண்டத்திலேயே இதுதான் மிகவும் பெரிய பால் பண்ணை.

இந்தப் பால்பண்ணையை ஏற்படுத்தியிருப்பது பம்பாய் சர்க்கார். இங்கே எருமைகளின் தொழுவங்கள் மிகவும் சுத்தமாக வைக்கப்பட்டிருக்கின்றன. எருமைகளைக் கறப்பவர்கள் கைகளை நன்றாகக் கழுவி சுத்தமாக்கிக்கொண்ட பிறகு தான் எருமைகளைக் கறக்கலாம். பாலைப் பிடிக்கும் பாத்திரங்கள் தண்ணீரால் கழுவப்படுவதோடு நீராவி மூலமும் சுத்தப்படுத்தப் படுகிறது.

இதனால் இந்தப் பண்ணையிலிருந்து விற்கப்படும் பால் மிக சுத்தமாக இருக்கிறது. அதாவது பூரண ஆரோக்கியத்தை யளிக்கும் சக்தியுள்ளதும் யாதொரு விதமான வியாதியையும் பரவச் செய்யும் கிருமிகள் இல்லாததுமான பால்.

பாலைக் கறந்ததும் நூற்றெழுபது டிகிரி வரை சூடாக்கி பிறகு 40 டிகிரிக்குத் குளிரச் செய்கிறார்கள். பிறகு இயந்திரங்கள் மூலமாகப்புட்டியிலடைத்து மூடி வைக்கப்படுகிறது. தினந்தோறும் மூன்று லக்ஷம் பவுண்டு பாலை இம்மாதிரி சுத்தப்படுத்தி புட்டியில் அடைத்து இந்தப் பண்ணையிலிருந்து விற்கப்படுகிறது.

'ஆரே' பண்ணையிலுள்ள பதினாறாயிரம் எருமைகள் சர்க்காருக்குச் சொந்தமானவையல்ல. எருமைகளைக் கட்டி வளர்ப்பதற்கு ஏராளமான தொழுவங்களை சர்க்கார் கட்டி வைத்திருக்கிறார்கள். இவை பால்காரர்களுக்கு மலிவான வாடகைக்குக் கிடைக்கும்.

இந்த எருமைகளெல்லாம் இம்மாதிரி பால்காரர்களைச் சேர்ந்தது தான். பால் பண்ணையைச் சேர்ந்த 3,500 ஏக்கர் நிலத்தில் விஞ்ஞான ரீதியில் மிக உயர்தரமான புல் வெளிகளை எருமைகளுக்குத் தீவனமாக வளர்க்கிறார்கள். இந்தப் புல் வெளியில் உண்டாகும் புல் பால்காரர்களுக்கு மிக மலிவான விலைக்குக் கொடுக்கப்படுகிறது.

பண்ணையில் கறக்கும் பாலைத் தவிர பண்ணைக்கருகேயுள்ள வீடுகளிலிருந்தும் பாலை விலை கொடுத்து பண்ணையில் வாங்கப்படுகிறது. அந்தப் பாலையும்மேற் கூறியபடி இயந்திரங்கள் மூலம் சுத்தமாக்கி புட்டிகளில் அடைத்து விற்பனைச் செய்யப்படுகிறது.

இந்தப் பண்ணையில் இரண்டாயிரம் தொழிலாளிகள் வேலை செய்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் வீட்டுவசதிகளும்வைத்திய வசதிகளும் சர்க்கார் செய்திருக்கிறார்கள். சுத்தப்படுத்திப் புட்டியிலடைத்த பாலைத் தினந்தோறும் நூறு லாரிகள் மூலம் பம்பாய் நகரத்திற்கு அனுப்புகிறார்கள்.

சமீப காலம் வரையிலும் காடாயிருந்த இடம் இப்பொழுது பால் பண்ணையாக மாறியிருப்பது பம்பாய் சர்க்காரின் முயற்சியால் தான்.

சுத்தமான பாலையளித்து பாலிலிருந்து சாதாரணமாய்நம் நாட்டில் பரவும் கொடிய நோய்களைத் தடுத்து, மக்களுக்கு அதிலும் குழந்தைகளுக்கு பூரண ஆரோக்கியத்தைக் கொடுப்பது மிகச் சிறந்த தொண்டாகும்.

—From *Burmah Shell News*

தக்க சன்மானம்

சில முதலாளிகளுடைய மனப்பான்மையை விளக்கும் ஒரு சம்பவம் கீழ் வருமாறு :—

ஒரு தொழிலாளி வருஷக்கணக்காக ஒரு முதலாளியிடம் வேலைசெய்துகொண்டிருந்தான். ஒரு நாள்கூட தொழிற்சாலைக்குத் தாமதித்துப் போனதில்லை; அரைமணி நேரங்கூட ‘லீவ்’ பெற்றுக்கொண்டதுமில்லை. வேலையும் திருப்தியாகச் செய்பவன் என்று பேர் வாங்கினவன். இவ்வளவு சிறந்த தொழிலாளி ஒரு நாள் அரைமணி நேரம் தாமதித்துத் தொழிற்சாலைக்கு வரநேரிட்டது. இரத்தம் சிந்தும் காயங்களுடன் கூடிய தேகத்துடனும் கிழிந்த ஆடைகளுடனும் தொழிற்சாலைக்குள் பிரவேசிப்பதைக் கண்ட முதலாளி “ஏனப்பா லேட்?” என்று வினவினார். அதற்குத் தொழிலாளி, “நான் தொழிற்சாலைக்கு வந்த பஸ்ஸில் மாடியிலிருந்து தலையைக் குனிந்தேன். அப்பொழுது பஸ் ‘ஸீட்டி’லிருந்து கீழே விழுந்தும் காயங்கள் படவும், ஆடைகள் கிழியவும் நேரிட்டது” என்றான். இதைக் கேட்ட முதலாளி “பஸ்ஸின் மாடிக்குத் திரும்பவும்போய் உட்காருவதற்காக உனக்கு அரைமணி நேரம் பிடித்தது” என்றார்.

அசோகா சுகந்த பாக்குத்தூள்

ஆறுய்ப் பெருகினல் எதுவும் ஆபத்து

●

மனிதனுக்குப் பலவிதத்தில் மரணமும் சேதமும் நேரிடுவது ஆற்று வெள்ளத்தால் மட்டுமல்ல. வேறு விதமான வெள்ளப் பெருக்குகளாலும் மனிதனுக்கு கஷ்டங்களும் நஷ்டங்களுமேற்படலாம்.

நூறு வருஷங்களுக்கு முன்பு லண்டன் நகரத்தின் 'பீர்' என்ற சாராயவகை தயாரிக்கும் ஒரு சடங்கில் மிக விநோதமானதும் பரிதாபகரமானதுமான ஒரு சம்பவம் நிகழ்ந்தது. பதினாறுயிரம் காலன் 'பீர்' கொண்ட ஒரு தொட்டி உடைந்து விட்டது. கிடங்கிலிருந்து 'பீர்' பிரவாகம் தொடங்கியது. இந்தப் பிரவாகத்தில் 'பீர்' தொட்டியிலிருந்து கனமுள்ள குழாய்களும், சக்கரங்களும் மிதந்து வந்தன. இம்மாதிரி கனமான சாமான்கள் சில அதேகிடங்கின் வேறொரு இடத்திலிருந்த மற்றொரு தொட்டியையும் இடித்து உடைத்துவிட்டது.

இந்தத் தொட்டியிலும் பதினாறுயிரம் காலன் 'பீர்' நிறைந்திருந்தது. 'பீர்' பிரவாகம் பாதைக்கும் அருகிலுள்ள வீடுகளுக்கும் வழிந்தோடியது. இதனால் இரு வீடுகள் இடிந்து விழுந்தன. இன்னும் எதிரேயிருந்த சாராயக்கடைக்குள்ளும், ஹோட்டலுக்குள்ளும் புகுந்து அவ்விடமிருந்த மனிதரெல்லாம் நீரில் நீந்துவதுபோல் 'பீரில்' நீந்தும்படி ஏற்பட்டது. சாராயக்கடையில் வேலையாயிருந்த ஒரு பெண் இதில் மாண்டாள். வீதிதோறும் 'பீர்' பிரவாகம் வழிந்தோடியது. மக்களெல்லாம் ஐயோவென்று கூக்குரலிட்டுக்கொண்டு கட்டில்கள் மீதும். பீரோக்கள் மீதும் ஏறிக் கொண்டனர்.

பாதையில் நடந்த நிகழ்ச்சிகளுக்கு இணையேயில்லை. நுரை நிறைந்துவரும் 'பீர்' வெள்ளத்தைக் கண்டதும் ஜனங்கள் விழுந்து விழுந்து குடிக்க ஆரம்பித்தார்கள். ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்ற வித்தியாசமில்லாமல் நாய்கள் நக்கிக் குடிப்பதுபோல் பீரைக் குடித்தார்கள்.

இப்படி வீதியில் வழிந்தோடி வந்த 'பீர்' பெருக்கில் பாதையில் சென்றுகொண்டிருந்த எத்தனையோ மக்கள் உயிரிழந்தனர். நதியைப்போல் 'பீர்' பெருக்கெடுத்துவரும் காட்சியைக் கண்டால் எவனுக்குத்தான் தலையைக் கிறுக்காது. மக்கள் தெருத்தெருவாக 'பீரை' நக்கிக்குடிக்கவந்த நெருக்கடியில் அகப்பட்டுக்கொண்டு மரித்தவரும் அநேகர்.

மிகப் பரிதாபகரமான ஒரு சம்பவமும் இதையொட்டி நிகழ்ந்தது. தெருவில் நின்று நெருக்கடியில் காயமடைந்தவர்களையும், கட்டிடங்கள் விழுந்ததன் மூலமாகக் காயமடைந்தவர்களையும் சிகிச்சைக்காகக் கொண்டுபோன ஆஸ்பத்திரியில் 'பீரின்' நாற்றம் பரவியது. அவ்விடம் ஏற்கனவே யிருந்த நோயாளிகள் இந்த நாற்றம் வீசியவுடன் ஆஸ்பத்திரியில் ஏதோ ஒரு விழா நடைபெறுவதாகவும் அதில் தங்களைச் சேர்த்துக்கொள்ளவில்லை யென்றும் தவருக எண்ணி ஆர்ப்பாட்டங்கள் செய்து தங்கள் நோய்களை அதிகப்படுத்திக்கொண்டனர்.

மனிதர்களின் பேராசைக்கும் ஈனமான மனப்பான்மைக்கும் எல்லையில்லை யென்பதற்கும் இச் சம்பவத்தை யொட்டி ஒரு அத்தாட்சி இருக்கிறது. 'பீர்' பெருக்கின் விளைவால் மாண்டு போனவர்களின் சவங்களை அவர்கள் உறவினர்கள் இந்தச் சம்பவம் நடந்த இடத்திலிருந்த ஒரு கட்டிடத்தின் மூன்ரும்மாடியில் மககளுக்கு மகிழ்ச்சியளிப்பதற்குள்ள ஒரு கண்காட்சி போல் வைத்து இதற்குக் கட்டணமும் வைத்து மக்களைப் பார்வையிட அழைத்தார்கள். இந்த அழைப்பிற்கிணங்கிச் சவங்களைப் பார்வையிட பல்லாயிரக்கணக்காக மக்கள் வந்ததுல் அந்தக் கட்டிடம் இடிந்து விழுந்து அதன் மூலமும் மக்கள் காயமடைந்தனர். பிறகு இந்தச் சவங்களை மற்ருெரு இடத்திற்கு மாற்றி அங்கு இந்தக் கண்காட்சியை நடத்திப் பணம் சம்பாதித்தார்கள். முடிவில் போலீசார் இதை யறிந்ததும் இந்தக் கண்காட்சியை நடத்தக்கூடாதென்று தடைசெய்தனர்.

சர்க்கரைப் பாகை மேல் நாடுகளில் பலவிதமாக உபயோகப்படுத்துகிருர்கள். சர்க்கரைப் பாகை பெட்ரோல், மண்ணெண்ணை முதலியவற்றைக் கொண்டு போவதுபோல் கப்பல்களில் தான் வியாபாரிகள் அனுப்புவது வழக்கம்.

1928-ம் ஆண்டில் ஹாலந்து ராஜ்யத்தில் ஒரு கப்பலிலிருந்த ஒரு சர்க்கரைப் பாகை ஒரு பிரமாண்டமான தொட்டியில் மாற்றிக் கொண்டிருக்கும்போது அந்தத்தொட்டி உடைந்துபோயிற்று. இதனல் பெருக்கெடுத்த 4,200 டன் சர்க்கரைப் பாகு பக்கத்திலிருந்த மற்ருெரு தொட்டியை உடைத்தது. இந்தத் தொட்டியிலிருந்து கிளம்பிய பிரவாகம் பக்கத்திலிருந்த ஒரு பெரிய 'தார்

தொட்டியையும் உடைத்தது. 'தாரும்' சர்க்கரை பாகும்கலந்த இந்த வெள்ளப் பெருக்கு பக்கத்திலிருந்த 'நிலக்கரி கியாஸ்' தொழிற்சாலைக்குள் பிரவேசித்தது. நிலக்கரியை நிரப்பியிருந்த ரயில் வாகன்களை யெல்லாம் தகர்த்துவிட்டு தொழிற்சாலையிலிருந்த இயந்திரங்களுக்குள் புகுந்தது. பிறகு ராணுவப் படைகள் மிகச் சிரமப்பட்டு இந்த வெள்ளப் பெருக்கை நிறுத்தி 'கியாஸ்' தொழிற்சாலை அறவே பாதிக்கப்படாமல் காப்பாற்றினர்கள்.

ஜனநாயகப் பயிற்சி

இங்கிலாந்திலுள்ள ஒரு பிரபல கிருஸ்துவமதத் தலைவர் ஒவ்வொரு குடும்பத்திலும் மூன்று குழந்தைகளாவது இருக்க வேண்டுமென்ற அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார். இவ்வாறு அவர் கூறியதற்கு காரணம் :—

"ஒரு குடும்பத்திற்கு ஒரே குழந்தையாக இருப்பவர்களுக்கு யோசனை கூறுவதற்குத் துணை யாருங்கிடையாது. இரண்டு குழந்தைகளிருந்தால் இரண்டு பேர்களுக்கும் இரு அபிப்பிராயங்கள் தோன்றி ஒற்றுமைக்கு வழி ஏற்படாமல் போய்விடும்; மூன்று குழந்தைகளிருந்தாலும் இரண்டு குழந்தைகளுக்கு ஒரு அபிப்பிராயமும் மற்றொரு குழந்தைக்கு வேறு அபிப்பிராயமும் ஏற்படலாம். ஆனால் இது ஜனநாயக முறையிலுள்ள பெரும்பாலோர் விருப்பத்திற்கிணங்கத் தகுந்த பயிற்சியாகும்.

நவம்பர் 27 முதல் தென்னாடெங்கும்

சந்திரமோஹன் சலீம் பிக்சர்ஸ்,

"மதியும் மமதையும்"

டைரக்ஷன் : ஜி.எம்.பஷீர். ஸ்டுடியோ: சென்ட்ரல், கோவை.

விவரங்களுக்கு : சந்திரமோகன் சலீம் பிக்சர்ஸ்

14, திருச்சி ரோடு :: கோயமுத்தூர்

இன்பம் ஒரு கார 'மிக்சர்!'

கலியாணத்தைக் 'கால் கட்டு' என்று கூறுவது நம் நாட்டில் மிகவும் சகஜம். மேல் நாட்டு மக்களோ இதை தலைவெட்டுக்குச் சமானமாகக் கருதுகிறார்கள். ஏனென்றால் பிரபஞ்சமே பெண்ணுக்கடங்கியுள்ளதென்பது அங்குள்ளவர்களின் சித்தாந்தம்.

மனிதன் பிறந்தவுடன் எல்லோரும் கேட்பது "தாயார் சௌக்கியமா" என்பதுதான். ஒரு மனிதன் "மணந்து கொள்ளும்போது எல்லோரும் கூறுவதென்னவென்றால், மணப்பெண் எவ்வளவு அழகானவள்" என்பதும், மனிதன் இறக்கும்பொழுதோ, "அந்தப் பாவி மனுஷ்யன் மனைவிக்கு ஏதாவது வைத்துவிட்டுப்போனானா?" என்ற கேள்வியுந்தான்.

இதிலிருந்து தெளிவாவதென்ன? வாழ்க்கையில் ஆணுக்கு ஸ்தானமே கிடையாது. பெண்தான் முக்கியத்துவம் பெற்றவள் என்பதுதானே!

★

மேல் நாட்டில் ஒரு மனிதன் மணஞ்செய்துகொள்ளத் தீர்மானித்து விட்டால் அதுதான் அவன் வாழ்க்கையில் சுதந்திரமாகச் செய்யும் கடைசி தீர்மானம்! பிறகு அவன் மனைவியின் மனத்திற்கு ஆளானவன்தான். "உன் வாழ்க்கையில் பெருமையடையக்கூடிய ஏதாவதொரு காரியஞ் செய்திருக்கிறாயா?" என்று ஒரு மனைவி தன் கணவனிடம் கேட்டாளாம். "பூமியை நடுங்க வைக்கும் ராக்ஷசி போன்ற உன்னை மற்றவர்களெவரையும் பீடிக்காமலிருப்பதற்காக, நானே மணந்துகொண்டு அவதிப்படுவது பெருமையடையக்கூடிய காரியந்தானே" என்று பதிலளித்தானாம், கணவன்.

★

கணவனை நச்சரிக்கும் மனைவிகள் உலகில் எங்கும் சகஜம்!

"உனக்கு எள்ளளவாவது ஆணவமிருந்தால் நான் நச்சரிப்பதையெல்லாம் பொறுத்துக்கொண்டிருப்பாயா? இதிலிருந்து

தெரிகிறதே, உன் மனிதத் தன்மை" என்று கேட்டாளாம் ஒரு மனைவி, கணவனைப் பார்த்து.

★

மனைவிக்குச் சமைக்கத் தெரியாதென்றால் அதைப் பட்டவர்த்தனமாகக் கூறுவதற்குக் கணவனுக்குத் தைரியம் வருமா? உணவை, கலத்தில் தயாரித்து வைத்து, திணறிக் கொண்டிருந்த மனைவியை நோக்கி, "இதென்னவென்று சொல், அம்மா, சாயந்திரம் எனக்கு வயிற்று வலி ஏற்படும்போது டாக்டரிடம் என்ன உட்கொண்டேன் என்று கூறவேண்டிவருமே" என்றானாம் ஒரு கணவன்.

★

மனைவி ஆடையணிவது மனிதரைக் கொல்வதற்கேதான் என்று ஸ்திரீகளைப் பற்றி வேடிக்கையாய் கூறுவதுண்டு. "என் மனைவியின் சமையலும் ஆளைப் பலிவாங்குவதற்கே தான்" என்று ஒரு கணவன் பரிதவித்தானாம்.

★

வாழ்க்கையில் மனைவிக்கும் கணவனுக்கும் எல்லாம் சமம், அதாவது நூற்றில் 50-க்கு 50 என்ற ஒரு பேச்சுண்டு.

நடைமுறையில் மனைவி 50 ரூபாய்க்கு புடவை வாங்கிக் கொண்டாளானால் கணவன் 50 அணவில் ஆடை எடுத்துக் கொள்ளலாம்!

★

பெண்களுள்ள வீட்டுக்குப் போகும்போது புஷ்பத்துடன் போவது நம்நாட்டில் வழக்கம். இதுபோல் மேல்நாடுகளில் உடல் நலமில்லாதவரைச் சந்திக்கப்போகும்போது புஷ்பத்துடன் செல்வது வழக்கம்.

"எனக்கு இப்போது புஷ்பமே நீ கொண்டுவருவதில்லையே" என்று புகார் செய்தாளாம் ஒரு மனைவி, தன் கணவனிடம்.

"நீ தான் நோயுற்றுப் படுத்துக் கொள்வதேயில்லையே" என்றானாம் கணவன்.

SANFORIZED — PRESHRUNK

COTTON • CLOTHING

INDUSTRIAL
UNIFORM &
CIVILIAN

FITTWEL

THE BRAND THAT CARRIES A REPUTATION
FOR SUPERB WORKMANSHIP.
GARMENTS FABRICATED
IN THE

SANFORIZED — PRESHRUNK

Products of the world famous

BUCKINGHAM & CARNATIC MILLS

of

MADRAS.

STYLES - DETAILS - AND FASHIONS
ADOPTED ACCORDING TO REQUIREMENTS

QUICK DELIVERIES ASSURED
Keen C I F Quotations against specific enquiries

FITTWEL

750, High Road
TRIPLICANE : : MADRAS - 5

நாடியே உயிர் நாடி

●

திண்ணை ஜோசியர், பாலக்கரை ஜோசியர், நடைபாதை ஜோசியர், கிளி ஜோசியர், கைரேகை ஜோசியர், மரத்தடி ஜோசியர், ஆடம்பரமான காரியாலயமும் கடிதப் போக்குவரத்தும் கொண்ட ஜோசியர்......இவர்கள் மூலம் நம் நாட்டினர் வாழ்க்கை ஜோசியத்தால் நிறைந்தது. தினசரி முக்கால் ரூபாய் சம்பாதித்து வாழும் உழைப்பாளிகளிலிருந்து ஆயிரக்கணக்காகச் சம்பளம் பெறும் உத்தியோகஸ்தர்கள், லக்ஷாதிபதிகள் வரையிலும், கவலை தோன்றும் போதும் முக்கியமான காரியங்களைத் தொடங்கும் போதும் ஜோசியரை அணுகாதவர் கிடையாது.

நாளைய தினம் நிகழப்போவதென்ன? அடுத்த மாதத்தில் என்ன நடைபெறும்? வரும் ஆண்டில் தன் நிலைமை எப்படி மாறும்? என்பனவற்றையெல்லாம் அறிந்துகொள்ள அனைவரும் விரும்புவது சகஜமே.

இம்மாதிரி விருப்பமிருப்பது இந்நாட்டு மக்களுக்குமட்டுமல்ல. விஞ்ஞானம் வளர்ந்த இருபதாம் நூற்றாண்டிலும் பகுத்தறிவுக்குகந்தவாறே நடந்துகொள்வதாகப் பெருமைகொள்ளும் மேல் நாடுகளிலும் வருங்கால நிகழ்ச்சிகளைத் தெரிந்து கொள்வதற்கு ஆர்வம் தீவிரமாகப் பரவியுள்ளது. இக்காலத்தில் மேல் நாட்டு வியாபாரி பெரும் உதவி பெறுவது ஜோசியரிடமிருந்து தான், நினைத்தமாத்திரத்தில் ஜோசியரை அணுகுகிறார்.

"சமீப காலம் வரையிலும் என்னிடம் வருவோரெல்லாம் அவர்கள் தங்களுடைய விவகாரங்களில் வெற்றி, தோல்வியைத் தெரிந்துக்கொள்வதற்காகத்தான் வந்துகொண்டிருந்தார்கள்" என்று லண்டனைச் சேர்ந்த ஒரு ஸ்திரீ ஜோஸ்யர் கூறுகிறாளாம். "ஆனால் இப்போது அப்படியல்ல; வருவோரெல்லாம் வியாபாரிகள். லாப நஷ்டத்தைக் குறித்து அதாவது பணம் ஏராளமாகக் கிடைக்குமா, கிடைக்காதாவென்பதைமட்டுந் தெரிந்து கொள்வதற்காகத்தான் என்னிடம் வருகிறார்கள்."

இரண்டாம் மகாயுத்தத்திற்கு முன்பு ஜோஸ்யர்களைத் தேடிப் போய்க்கொண்டிருந்தவர்கள் யுவதிகள் மட்டுமே. அவர்களது முக்கிய கேள்வியெல்லாம் "எனக்கு எப்போது மணமாகும்? நான் யாரை மணந்து கொள்வேன்?" என்பது தான்.

இப்பொழுது காதலால் வாடும் வாலிபர்களை ஜோசியர்களின் காரியாலயங்களில் காண்பதரிது. வியாபாரிகளும் மற்ற பல்வேறு துறைகளில் ஈடுபட்டவர்களும்தான் ஜோசியர் காரியாலயங்களை படையெடுக்கிறார்கள். வக்கீல்கள், வைத்தியர்கள், பாதிரிமார்கள். அரசியல்வாதிகள் முதலியோர்களுக்கு ஜோசியர் உதவியின்றி ஒரு தினம்கூட கழிக்கமுடியாது.

மேல்நாடுகளில் ஜோசியம் என்பது பெரும்பாலும் கைரேகை பார்ப்பதுதான். வசந்தகாலம் பிறந்துவிட்டால் வியாபாரிகளனை வரும் சரக்குகளை வாங்குவதிலும், விற்பதிலும் ஈடுபடுவார்கள். அப்போதுதான் கைரேகை பார்ப்பவர்களுக்குக் கொண்டாட்டம்.

GANZON BROS.

DRESS SPECIALISTS
3, THOPE STREET
TRIPLICANE MADRAS-5.

★

Clothing Contractors to Government of India Supply Dept., Railways & Public Bodies, Ready - to - Wear - Garments Manufacturers and Exporters.

★

IN the hands of the Mester - Tailors and Cutters of GANZONS, Clothes acquire a subtle distinction beyond the power of imitation.

★

GANZONS have set standards of superb craftsmanship-Standards that have been the pride of the firm of Ganzons for over a quarter of a century.

இன்றைக்கு மட்டும் வாழாமல்

என்றைக்கும் வாழ

●

இகலோக வாழ்வே வாழ்வென்றிருப்போர்கள் மனிதத் தன்மையை இழந்தவர்கள்.

அறிவு வளர்ச்சி, விஞ்ஞான முன்னேற்றம், வாழ்க்கைத் தரத்தின் உயர்வு—இவை மனிதனின் மனப்பான்மையை எப்படி மாற்றியுள்ளதென்பது சிந்தனைக்குரியது.

ஆத்மீக விஷயங்களில் மனிதனுக்குள்ள பற்று இவற்ருல் அழிந்துவிட்டது. இகலோக வாழ்வின்மீதுள்ள பற்ருே பன்மடங்கு அதிகரித்துவிட்டது. ஆத்மீக விஷயங்களில் நம்பிக்கை வளருவது தான் மனிதன் விவேகம் பெற்றதற்குரிய அடையாளம். அதுதான் பகுத்தறிவின் அடிப்படை.

இன்றைய உலகம் பகுத்தறிவு பெற்றிருக்கிறதா? அல்லது மூளைக்கோளாருல் பாதிக்கப்பட்டிருக்கிறதா? இந்தக் கேள்விக்கு ஒரே ஒரு பதில்தான். ஒரே தலைமுறையில் இரண்டு மகாயுத்தங்கள். அவ்விரண்டு யுத்தங்களும் யுத்தத்தையே மனிதனின் வாழ்க்கையிலிருந்து ஒழிப்பதற்காக—இந்த நிகழ்ச்சிகள் நடந்த உலகத்தில் பகுத்தறிவு ஏது? அதற்கிடமேது? இவ்வளவும் போதாதென்று யுத்தத்தையே ஒழிப்பதற்காக மற்ருெரு யுத்தமும் ஆரம்பமாகப் போகிறதாம்.

மனிதனுக்கு இம்மாதிரி ஒரு மூளைக் கலக்கம் ஏற்படுவதற்குக் காரணம் அவனுக்கு ஆத்மீக விஷயங்களில் படிப்படியாகப் பற்றுதல் அறவே ஒழிந்ததனுல் தான். இப்பொழுதுள்ள வாழ்க்கையோ ஒரே பரபரப்புக் கொண்டது. "எவ்வளவு நாட்கள் ஜீவித்திருப்போமோ? எப்போது மாண்டு போவோமோ? அனுபவிக்க வேண்டிய இன்பங்களையெல்லாம் விரைவில் அனுபவித்த பிறகு மாண்டுபோனுல் மனோவேதனை கொள்ளவேண்டியதில்லையே." இதுதான் உலகம் முழுவதிலும் நீண்ட காலமாகப் பரவியுள்ள மனப்பான்மை. மனிதனுக்கு

உலக வாழ்க்கை ஒன்று தான். அந்த ஒரே வாழ்க்கைக் காலத்தில் அனுபவிக்காத இன்பம் இன்பமா? அடையக்கூடிய பெருமை, அதிகாரம், எல்லாவற்றையும் கிடைத்திருக்கும் ஒரே வாழ்வில் அனுபவித்துவிடுவதுதான் மனிதனின் லக்ஷியம்.

பத்திரிகைகளிலும் புத்தகங்களிலும் பிரசுரமாகும் விஷயங்கள் ஆத்மீகப் பற்றுதலுக்குத் தூண்டுதலாக இருக்கவில்லை. சமீபத்தில் ஒரு பத்திரிகையில் ஒரு மனிதனைப் பற்றிய கட்டுரை அவனுடைய படத்துடன் வெளியாயிற்று. அவன் கூறுகிறான். "எனக்கு இன்றைக்கு வயது இருபத்தாறு. நான் உயிரோடிருப்பது இருப்பத்தொன்பது வயது வரையிலோ அல்லது முப்பது வயது வரையிலோ என்று எனக்குத் தெரியாது. அதனால் நான் இந்த மூன்று நான்கு வருஷங்களில் வாழ்க்கையிலுள்ள இன்பங்களையெல்லாம் அனுபவித்துவிடப்போகிறேன்.''

இம்மாதிரி கூறுவதும் இம்மாதிரி கூறுபவர்களைச் சிருஷ்டிக்கும் சூழ்நிலையும் மிகப் பரிதாபகரமானது தானே! பண்டைக் கால இந்திய நிலைமை இவ்வாறில்லை. மனிதன் வாழ்க்கை நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு பகுதியிலும் மனிதன் உடல் வளர்ச்சியடைந்து. உள்ளமும் வளர்ச்சியடைந்து அந்தப் பகுதிக்குத் தகுந்த அறிவைப் பெற்று அவற்றைச் சேர்ந்த கர்மாக்களைப் புரிந்து மன நிம்மதியோடும் மகிழ்ச்சியோடும் அடுத்த பகுதிக்குச் சென்றுகொண்டிருந்தான். முடிவில் உற்றார் உறவினர்களின் ஆசிகளோடும் தான் வாழ்க்கையில் புரிந்த நற்கருமங்களுக்கு அவர்கள் அளிக்கும் ஆதரவுடனும், ஆண்டவன் நாமத்தை உச்சரித்தவாறே பரலோகப் பிராப்தியடைந்தான்.

இம்மாதிரி பரபரப்பின்றி நிம்மதியாக வாழ்க்கை இருந்ததாக மனிதனுக்கு இப்போது ஞாபகமேயில்லை. அந்தக் காலத்தில் ஒரே மூச்சில் செய்யவேண்டியதை யெல்லாம் செய்துவிட்டு அடுத்த வேலையில் ஈடுபடும் மனப்பான்மை கிடையாது. ஒவ்வொரு கிராமத்திலுள்ள வழிகளையும் கவனியுங்கள். ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு காக்கை பறப்பதுபோல கோணல் குறுகல் இல்லாமலிருக்கிறதா? அதனால் அந்தப் பாதைகளை நிர்மாணித்தவர்கள் அறிவில்லாதவர்களா? மனிதன் இருபதாம் நூற்றாண்

டில் தான் அறிவு வளர்ச்சியடைந்தான் என்று நினைப்பது தவறு. அந்தக்காலத்தில் மனிதனுக்குப் பரபரப்பில்லை. வழியில் நடந்து போகும்போது நாலா பக்கங்களிலும் தோன்றும் ஆண்டவன் சிருஷ்டிகளையெல்லாம் கவனித்தவாறு ஆண்டவன் பெருமையைத் துதித்துக்கொண்டு அமைதியோடு நடந்து செல்வான். அந்தக் காலத்து மனிதனுக்கு இவ்வாறு செலவிடும் காலம், வீணாகிவிட்ட தென்ற மனப்பான்மை கிடையாது. தான் செய்வதெல்லாம் தனக் காகவும் தன் சந்ததிக்காகவும் என்ற ஒரு பூரிப்பு அவன் வாழ்க்கையை மலரச் செய்தது.

இதெல்லாம் தான் இப்போது மறைந்துவிட்டதே. இப்பொழு துள்ள மனிதனின் பரபரப்பான போக்குக்குகந்தவாறு மோட் டார் வண்டிகள், ரயில் வண்டிகள், ஆகாய விமானங்கள் இவை யாவுமிருக்கின்றன. பத்து மாதம் வேதனையோடும் அருமையுட னும் தாங்கி வருஷக் கணக்காய் மிகச் சிரத்தையுடன் பெற்றோர் வளர்த்து வந்த லட்சக்கணக்கான மனிதர்களை ஒரே நிமிஷத்தில் அழித்துவிடும் அணுகுண்டுமிருக்கிறது. இந்தச் சாதனங்களில்லாத தேசங்களிலும் பரபரப்பு மனப்பான்மை பரவிவிடுகிறது.

இகலோக வாழ்வைப்பற்றி மட்டுமே சிந்திக்கும் மனப் பான்மையொழிந்து ஆத்மீக விஷயங்கள் முக்கியத்துவம் பெறும் பொழுதுதான் அணுகுண்டைப் பற்றியுள்ள அச்சம் நீங்கும். அப்போது அணுகுண்டே மறைந்தாலும் மறையும். அப்பொழுது தான் வாழ்க்கை பூரிப்படையும்.

நாகரிகம்

இவ்வுலகத்தில் நாம் செய்கிற ஒவ்வொரு செய் கையும் சொந்த நலத்தைக் கருதாமல் லோகோப காரத்தை முன்னிட்டுச் செய்ய வேண்டும். தீராத ஆவலும், அவசரமும், ஓயாத பரபரப்பும் உள்ள ஜ்வர வாழ்க்கை நாகரிகம் ஆகமாட்டாது. சரியான நாகரிகத்திற்குச் சாந்தியே ஆதாரம். இயந்திர பீரங்கிகளும் சப்மரின்களும் நாகரிகத்திற்கு அடையாளம் அல்ல. நிலக்கரி சுரங்கங்களும் ஆகாய வெடிகுண்டுகளும் அபிவிருத் திக்கு லக்ஷணம் அல்ல. அவை மனிதனுக்குப் பலமல்ல; துணையு மல்ல; அவை மனிதனுக்குப் பகை. மனிதனையும் அவனுடைய நாகரிகத்தையும் அழிக்கும் குணமுடையவை.

VISIT

OUR

RETAIL SHOW ROOM

FOR ALL YOUR

DRESS REQUIREMENTS

★

ALL ITEMS MANUFACTURED

FROM

SELECTED B & C MILLS FABRICS

★

OMER BROS

106-107, Moore Market,

MADRAS - 3

பெரிய குடும்பங்களுக்கும் சிக்கன சுலப உதவி

இளநரை தடுத்து கூந்தல் செழிக்க

காஷ்மீர்-குஸூம்

ஊறின உங்கள் எண்ணெயை உபயோகிக்க

நஞ்சன்கூடு-பல்பொடி

மேலும்

54, அரிய குடும்ப மருந்துகள் விவரப் புத்தகத்திற்கு எழுதுக

யுனைடெட் கன்ஸர்ன் 54, பந்தர் தெரு, சென்னை - 1.

உண்மை சம்பவங்கள்.

வழுக்கைத் தலைக்கு கோழி முட்டை!

வாழ்க்கையிலீடுபட்டுத் தினந்தோறும் அவரவர் தொழில்களைச் செய்துவரும் சாதாரண மக்களை 'பைத்தியக்காரர்கள்' என்று கூறமுடியாதல்லவா? ஆனால் இம்மாதிரியான மக்கள் தினந் தோறும் செய்யும் பைத்தியக்காரச் செயல்களுக்கு கணக்கேயில்லை.

அமெரிக்காவில் ஒரு நாள் ஒருவன் ஹோட்டல் ஜன்னலின் கண்ணாடி மீது ஒரு செங்கல்லை யெறிந்து உடைத்த குற்றத்திற்காக மாஜிஸ்டிரேட் முன்பு கொண்டுவரப்பட்டான்.

மாஜிஸ்டிரேட் அவனை "நீ எதற்காக கல்லையெறிந்தாய்" என்று கேட்டதற்கு அவன் கூறின பதில் பின் வருமாறு: "வெகு நாட்களாய் எனக்கு ஒரு ஹோட்டலின் ஜன்னலை உடைக்க வேண்டுமென்று ஆசையிருந்தது. ஆனால் அந்த ஆசையை அடக்கி வைத்திருந்தேன். ஒரு தினம் அடக்கமுடியாமற் போனதால் செங்கல்லை எறிந்து விட்டேன்!"

★

போலீஸ்காரர் சாலைகள் சேருமிடங்களில் மோட்டார் வண்டிகளின் போக்குவரத்தைக் கண்காணிப்பதைக் கண்டால் எத்தனையோ பேர்களுக்கு அவ்வாறு தாங்களும் செய்யவேண்டுமென்று ஆசை ஏற்படுவது சகஜம். அமெரிக்காவைச் சேர்ந்த ஒரு நகரத்தில் ஒரு நாள் ஒருவர் திடீரெனப் போலீஸ்காரனைப்போல் உடையணிந்துகொண்டு நான்கு ரஸ்தாக்கள் சந்திக்குமிடத்தில் நின்றுகொண்டு சுமார் இரண்டு மணி நேரம் வாகனப் போக்குவரத்துமேல் தன் ஆசை தீர ஆட்சி புரிந்தார்! நகரவாசிகளின் நல்லகாலம்! அந்த இரண்டு மணி நேரத்தில் ஒரு விபத்தும் நேரிடவில்லை! "நான் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருக்கும் பொழுதே என் மனத்தில் குடிகொண்ட ஆசையை இன்று பூர்த்தி செய்து விட்டேன்" என்று பெருமிதத்துடன் கூறினாராம் இவர்.

★

ஒரு நாள் ஒரு நகரத்திலிருந்த ஒரு மின்சார நிலையத்திற்குள் புகுந்து ஒரு வாலிபன் அங்குள்ள 'சுவிட்ச் போர்டை'

தகர்த்தெறிந்து, அந்த நகரத்தையே அந்தகாரத்தில் மூழ்கடித்து விட்டானும். "அப்பாடா! எத்தனை வருஷங்களாக இப்படிச் செய்ய துடிதுடித்துக் கொண்டிருந்தேன்" என்று கூறினானும் போலீசாரிடம்.

★

இருபதாம் நூற்றுண்டில் நடக்க முடியாத அலங்கோல சம்பவங்களே கிடையாது. பாரிஸ் நகரத்தில் பத்தொன்பது வயதுள்ள ஒரு யுவதி பாதைகள் சேரும் சந்திப்பில் போக்கு வரத்தை கண்காணித்துக் கொண்டிருந்த ஒரு போலீஸ்காரனை அணுகி திடீரென்று கட்டித்தழுவி முத்தமிட்டுக் கொண்டாள்! இதுபோதாதென்று ஒரு கத்திரியால் அவன் மீசையையும் வெட்ட முயற்சித்தாள். போலீசார் அவளைக் கோர்ட்டுக்கு இழுத்துச் சென்றபோது, அவள் மாஜிஸ்டிரேட்டிடம் "எனக்கு இம்மாதிரி செய்யவேண்டுமென்று தோன்றிற்று! ஆகையினால்தான் செய்து விட்டேன்" என்றுளாம்.

கட்டிடங்களின் மாடிகளிலிருந்தும் வீதிகளில் ஓடிக்கொண்டிருக்கும், மோட்டார் வண்டிகள், பஸ்களிலிருந்தும் வெற்றிலைச் சாரைத் துப்புவதும், அதனால் பாதையில் சென்று கொண்டிருக்கும் பாதசாரிகளின் ஆடைகள் அசுத்தமாவதும் நம் நாட்டில் சர்வ சாதாரணமானது. வீதிகளிலோ வீதிகளை நோக்கியோ துப்புவது மேல் நாடுகளில் சட்டப்படி தடுக்கப்பட்டிருப்பதால் மேற் கூறிய நிகழ்ச்சிகள் அங்கே நடக்காது. ஆனால் இதற்குப் பதில் வேறுவித மான உபத்திரவங்கள் பாதசாரிகளுக்கு நேரிடலாம்.

ஒரு ஹோட்டல் அருகே ஒரு மனிதன் சென்றுகொண்டிருந்த போது கோழி முட்டை ஒன்று அவன் தலைமீது விழுந்து ஆடைகளையெல்லாம் அசுத்தமாக்கியதாம். குற்றவாளி அந்த ஹோட்டலின் வேலைக்காரியான ஒரு பெண். இவள் மீது வழக்கு ஏற்பட்டவுடன் கோர்ட்டில் "இந்த மனிதனின் பளப் பளப்பான வழுக்கைத் தலையைக் கண்டவுடன் எனக்கு ஏதாவது செய்யவேண்டுமென்று தோன்றியது. அதன் விளைவே இது; மற்றபடி எனக்கு இந்த மனிதன்மீது விரோதமொன்றுமில்லை" என்றுளாம்.

A. K. SHERIFF

5/7, KALMANDAPAM ROAD

Rayapuram, Madras-13.

MANUFACTURER OF

READY MADE DRESSES
FIRST - CLASS CLOTHES
MADE OF SUPERIOR B. & C.
MATERIALS

Prices Moderate

C. C. JACOB

Tailors, Dress Manufacturers & Contractors
(Specialists in B & C Quality Textile Dresses)

10, Thambu Chetty St., Madras - 1.

★

For Readymade garments fabricated out of India's best clothing materials
—B. & C. Mills cloths

Contact us for your requirements.

புத்தக அபிப்பிராயம்:

"தமிழ்நாடு டைரக்டரி அண்டு யார், யார் ?"

[வெளியிட்டோர் : கீசே பப்ளிஷேர்ஸ், 11/572, பைகிராப்ட்ஸ்ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை. விலை ரூ. 3-8-0]

இந்தியபாஷை இலக்கியங்களில் இதுவரை தோன்றாதரகம் ஒன்று குறிப்புப் புத்தகங்களாகும். ஆனால் பத்திரிகாசிரியர்கள், முக்கிய எழுத்தாளர்கள் போன்ற பெரும்பாலோரும் ஆங்கிலம் தெரிந்தவர்களாதலால் ஆங்கிலத்தில் கிடைக்கும் குறிப்புப் புத்தகங்கள் இவர்களது தேவையைப் பூர்த்தி செய்து வருகின்றன.

இக் காலத்தில் இந்திய பாஷைகளில் இலக்கியங்களும் இவற்றைப்படிக்கும் ஜனத் தொகையின் எண்ணிக்கையும் அதிகரித்துவருகின்றன. கூடவே அறிவுப் பசியும் வளர்ந்து வருகிறது. இந்த அறிவுப் பசியைத் தணிப்பதற்கு நாவல்கள், கதைகள், கட்டுரைகள் மட்டும் போதாது. உபயோகமான தகவல் தொகுதிகள் மிகத் தேவை.

தமிழில் இந்த ரகத்தைச் சேர்ந்த புத்தகமொன்று இவ்வளவு சீக்கிரம் தோன்றியிருப்பது மிகவும் போற்றத்தக்கது. பூகோளத்தை யொட்டிய விஷயங்கள், உலக அதிசயங்கள், பஞ்சாங்கக் குறிப்புகள் வருமானவரி சம்பந்தமான தகவல்கள், இந்திய சர்க்காரைப்பற்றிய முக்கிய குறிப்புகள் முதலியவற்றுடன் நம் தமிழ்நாட்டைப் பற்றி விரிவான அநேக கட்டுரைகளும் இன்னும் பல தகவல்கள் கொண்ட பகுதிகளும் இப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளன. சென்னை சட்டசபை அங்கத்தினர்கள், தமிழ்நாட்டு ஜில்லாக்கள், அவற்றிலுள்ள நகரங்கள், இலக்கிய கலாசார சமூக ஸ்தாபனங்கள், தொழிற் ஸ்தாபனங்கள்... இவ்வாறு உபயோகமான தகவல்கள் கொண்ட அநேக பகுதிகள் இப்புத்தகத்திலடங்கியுள்ளன. முடிவில் சேர்க்கப்பட்டிருக்கும் 'யார், யார்?' பகுதியில் சென்னை மாகாணத்திலுள்ள சில பிரபலஸ்தர்களைப் பற்றிய தகவல்களும் அடங்கியுள்ளன.

இந்த 'டைரக்டரி' ஒரு நல்ல முயற்சியின் ஆரம்பம்; சென்னை மாகாணம் என்றால் எந்தத் தமிழனுக்கும் இந்த 'டைரக்டரி' நினைவுக்கு வரும் உயர் நிலையை யடைவது மிகச் சிரமம்தான். ஆனால் "சென்ற வருஷப் பதிப்பைவிட இந்தவருஷப் பதிப்பு அதிகப் பயனுள்ளதென்று" வருஷந்தோறும் பொதுஜன அபிப்பிராயம் தோன்றுமாறு, இப்புத்தகம் தவறாமல் வெளிவருமானால் அநேக ஆங்கில குறிப்புப் புத்தகங்களுக்கு நீண்டகாலமாக இருக்கும் உன்னதஸ்தானத்தை, இந்த 'தமிழ்நாடு டைரக்டரி' பெற்றுவிடுமென் பதில் ஐயமில்லை.

—N. S. M.

NANJUNDAN & CO.,

PROP. C. NANJUNDAN (BOOCHI)

256, RAJA STREET COIMBATORE

Post Box 189 Grams : "BOOCHI" Phone { Res : 603 / Office At 657

Agents For :

Complete Range of Textool Textile Spinning Machinery

Blow Room Machinery, Carding Engines, Speed Frames, Ring Spinning Frames, Reeling Machines & Bundling Presses.

Manufactured by

TEXTOOL COMPANY LIMITED

COIMBATORE.

FOR

Madras, Andhra, Mysore, Travancore and Cochin States

AND

SOLE DISTRIBUTORS

FOR

MESSRS SKINS & LEATHERS LTD.

Manufacturers of

Calf Skins for Roller Covering & Aprons for High Draft Spinning.

198253

Edited, printed and published by E. Balasubramaniam at the K. M. S. Press, 1-C/17, Dinroze Estate, Mount Road, Madras. Associate Editor :- N. S. Mani.

USE **BINNY'S COTSWOL**

For year - round comfort
Available in smart and attractive colours
An excellent material to keep you comfortable in any weather.

AVAILABLE WITH ALL GOOD CLOTH DEALERS.

Manufactured by :—

The Bangalore Woollen Cotton & Silk Mills Co., Ltd., Bangalore City.

Distributors :— **H. A. R. MOHAMED & SONS,**
6 - A, Godown Street, MADRAS - 1.

WOMEN OF TASTE ALWAYS INSIST ON

BINNY'S

Pure Spun Silk & Georgette Sarees

In attractive GOLD BORDERS and shades

Manufactured by:

The Bangalore Woollen Cotton and Silk Mills Co., Ltd., Bangalore City.

Distributors :

H. A. R. Mohamed & Sons

No. 6–A, GODOWN STREET,

Madras-1.

NANJUNDAN & CO.,

PROP. C. NANJUNDAN (BOOCHI)

256, RAJA STREET COIMBATORE

Post Box 189 Grams: "BOOCHI" Phone { Res: 603 / Office At 657

Agents For:

Complete Range of Textool Textile Spinning Machinery

Blow Room Machinery, Carding Engines, Speed Frames, Ring Spinning Frames, Reeling Machines & Bundling Presses.

Manufactured by

TEXTOOL COMPANY LIMITED

COIMBATORE.

FOR

Madras, Andhra, Mysore, Travancore and Cochin States

AND

SOLE DISTRIBUTORS

FOR

MESSRS SKINS & LEATHERS LTD.

Manufacturers of

Calf Skins for Roller Covering & Aprons for High Draft Spinning.

198253

Edited, printed and published by E. Balasubramaniam at the K. M. S. Press, 1-C/17, Dinroze Estate, Mount Road, Madras. Associate Editor:- N. S. Mani.



USE **BINNY'S COTSWOL**

For year - round comfort
Available in smart and attractive colours
An excellent material to keep you comfortable in any weather.

AVAILABLE WITH ALL GOOD CLOTH DEALERS.

Manufactured by :—

The Bangalore Woollen Cotton & Silk Mills Co., Ltd., Bangalore City.

Distributors :— **H. A. R. MOHAMED & SONS,**
6 - A, Godown Street, MADRAS - 1.

WOMEN OF TASTE ALWAYS INSIST ON

BINNY'S

Pure Spun Silk & Georgette Sarees

In attractive GOLD BORDERS and shades

Manufactured by:

The Bangalore Woollen Cotton and Silk Mills Co., Ltd., Bangalore City.

Distributors :

H. A. R. Mohamed & Sons

No. 6–A, GODOWN STREET,

Madras-1.

Colourful

BINNY'S FABRICS

The most suitable material for the tropics. These lovely colourful fabrics in beautiful designs such as seersucker, plain and printed Linen, Lustalin Shirtings, Hanava Suitings, etc., are available at our Show Rooms.

VENKATESH VASTRALAYA

Phone: 4688

Retail Show Room:
2, THAMBU CHETTY STREET, MADRAS-1.